என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே!

G.B. Sathyanesan, B.A.

D. M. சாலமோன் வெளியீடு

இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் அன்பின் வாழ்த்துக்கள்

ஏறக்குறைய 7 ஆண்டுகளாக பல இடங்களிலிருந்து சேகரித்த சுமார் 200 ஆண்டுகளுக்கு முன்பு வரை அச்சடிக்கப்பட்ட, ஆரோக்கிய உபதேசங்கள் அடங்கிய, கிறிஸ்தவ ஆவிக்குரிய புத்தகங்களை, பல மணி நேரம் கொடுத்து, பல இலட்சங்கள் செலவு செய்து மின் நூல்களாக *(E-Books)* இலவசமாக (மத்தேயு *10:8)* உங்கள் கரங்களில் கொடுப்பதற்கு, அற்பரும் நீசருமான எங்களை பயன்படுத்தின உன்னத தேவனுக்கே சகல கனமும் மகிமையும் துதியும் உரித்தாவதாக. இதைப் போன்ற இன்னும் ஆயிரக்கணக்கான புத்தகங்களை தரவிறக்கம் *(Download)* செய்ய எங்களுடைய இணையதளத்தை சொடுக்கவும்/பார்க்கவும்: *www.WordOfGod.in*

95 சதவீத புத்தகங்கள் அச்சில் இல்லாதவைகளும், காப்புரிமை முடிந்தவைகளுமே. மீதமுள்ள புத்தகங்கள், நல்ல உபதேசங்களை கொண்டிருப்பதால், முடிந்தவரை ஆசிரியரின் உரிமையோடு மின்-நூலாக, இலவசமாக வெளியிடுகிறோம். ஒருவேளை உங்களுடைய புத்தகம் இப்படி இலவசமாக மின்-நூல் *(E-Book)* வடிவில் வரக்கூடாது என்று நினைத்தீர்களானால், தயவு செய்து எங்களை மன்னித்துக்கொள்ளுங்கள். எங்களுடைய *WhatsApp* எண்ணிற்கோ, மின் அஞ்சலிலோ *(Email)* எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். உடனடியாக எங்களுடைய இணையதளத்திலிருந்து எடுத்துவிடுகிறோம்.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

Wishing you in the mighty name of Jesus Christ

We had collected several thousands of old Tamil Spiritual Books which are rich in Sound Doctrines across various places of India for 7 years. Some of them are more than 200 years old books. We have spent millions of hours and money in scanning them and coverting them to E-Books. The work is still in progress. These E-books are published completely free of cost (Matt 10:8) forever. We give all the praise and glory to God for giving this wonderful opportunity to server Him. You can download thousands of similar Tamil Christian E-books from our website www.WordOfGod.in completely free of cost at any time.

95% of these E-Books are not being printed now and their copyrights are already expired. The remaining books are sent as E-Books mostly with the permission from the Authors. If you feel that your books should not be published as E-Book freely, kindly execuse and forgive us. Please let us know the book details by WhatsApp or Email we will remove them from our website.

WhatsApp/SMS: +91 90 190 490 70 / +91 7676 50 5599

Email: wordofgod@wordofgod.in

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே!

வெளியீடுபவர் :

D. M சாலமோன்,

56, ரயில்வே ஸ்டேஷன் ரோடு,

கோடம்பாக்கம், சென்னை-600 024.

முதற் பதிப்பு: 1979

விலை: ரூ 3-00

அச்சிட்டோர்:
மில்லரிஸ் பிரஸ்,
சென்னை-600 010.

அர்ப்பணம்

கவலையும், கண்ணீரும், துன்பமும் அலையலையாய் வந்து என்னை அமிழ்த்தின! என் நேசராகிய இயேசுவே, நீரல்லவோ என்னை தேற்றினீர், தூக்கினீர், உயர்த்தினீர்! ஆனால்— இன்று—

உம்முகம் கவலையாய் துயரமாய், வேதனையாம் துடிக்கிறதே! உம் பெயர் வியாபாரமாகிறதே! உம் மக்கள் தூங்கியே தூரமாயிருக்கிறார்களே! உலகத்தார் பாவங்களால், சாபங்களால் உம்மை சவுக்குகளால் அடிக்கையில் எப்படிப் பொறுத்திடுவேன் நான்!

உம் கண்ணீர் நான் துடைக்கட்டும்; உம் தாகம் நான் தீர்க்கட்டும்! உம் நாமம் நான் உயர்த்தட்டும்! என்னை பெலப்படுத்தவே என்னை உமக்கே அர்ப்பணிக்கிறேன். நான் உம்முடையவன்! நீர் என்னுடையவர் ஆமென்! அல்லேலூயா!

பொருளடக்கம்

பக்கம்

1. என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே..! 1
2. தாழ்வு மனப்பான்மையைத் தகர்க்கும் தேவபெலன் 6
3. சிங்கங்களின் வாயிலிருந்து 10
4. போர்க்களத்தில் நீ! 14
5. நாவில் தேவ பெலம் 19
6. தேவ பெலனைப் பெற்றுக் கொள்வது எப்படி? 24
7. பலவீனத்தில் உண்டாகும் பெலன் 29
8. கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? 33
9. பரிசுத்த அக்கினி பற்றி எரியட்டும்! 41
10. என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்! 57
11. உன்னை அனுப்புகிறவர் நானல்லவா? 64
12. எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு 72
13. கடைசி விநாடி 86

அத்தியாயம் 1

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே...!

(பிலி. 4:13)

பெலன்! ஆவியிலும் ஆத்துமாவிலும் பெலன்!

சரீரத்தில் பலம்!

உலகத்திலுள்ள மக்கள் தங்களை ஆரோக்கியமாய் வைத்துக்கொள்ள, பலமுள்ளவர்களாய்க் காத்துக் கொள்ள எத்தனை வழிகளைக் கையாளுகிறார்கள்!

உடலைக் கட்டமைப்பாய் வைத்துக் கொள்ள, விதம் விதமான உடற்பயிற்சிகள், எடைகளைத் தூக்குதல், மூச்சிப் பிடித்தல், பஸ்கி எடுத்தல்...

அது மட்டுமா? ஹார்லிக்ஸ், போர்ன்விட்டா என்று உடலை பலப்படுத்தும் பலவிதமான பானங்கள், டானிக்குகள், வைட்டமின் மாத்திரைகள்...!

தினசரி பத்திரிகைகளில் இதைக் குறித்து ஏராளமான விளம்பரங்கள். மருந்து சாப்பிடும் முன் ஒரு நோஞ்சானாக இருந்தவன் மருந்து சாப்பிட்டபின் பலசாலியாக மாறிவிட்டதாக போட்டோக்கள்...!

சரீரத்தை பலப்படுத்த இவ்வளவு பாடுபடும் மானிட சமுதாயம், தன் ஆத்துமாவையும், ஆவியையும் பெலப்படுத்த எந்த முயற்சியையும் எடுக்கக் காணோம்! ஐயோ, சரீர பெலனெல்லாம் மரணத்தோடு அழிகிறது,

ஆத்தும பெலனே உள்ளான மனுஷனில் அடையும் பெலனே என்றென்றும் நித்தியமாய் நின்று நிலைக்கிறது!

புரூஸ்லி! இந்தப் பெயர் உலக வாலிபரை ஆச்சரி யத்தால் நிறப்பின ஓர் பெயர், இவர் உலகுக்கு கராத்தே குங்பூம் என்ற பலவகைச் சண்டை வகைகளை கற்றிக் கொடுத் தார். வாழ்க்கை முழுவதையும், தன் சரீரத்தை முறுக் கேற்றுவதற்காகவே செலவழித்தார். இரவும் பகலும் உடற் பயிற்சி! திடீரென்று அவர் ஓர் நாள் இறந்து கிடந்தார். யாரோ அவர் உணவில் விஷம் வைத்து விட்டார்கள். வருடக்கணக்கில் பலப்படுத்திய அவரது சரீரம் சில நிமிடங் களுக்குள் வேரற்ற மரமாய் கீழே சாய்ந்தது! மனுஷனுடைய சரீரத்திற்காக, பூமியிலே புழுக்கள் விருந்துண்ணக் காத்துக் கொண்டிருக்கிறது!

உன் உள்ளான மனுஷனில் நீ பெலப்பட்டிருக்கிறாயா?

இன்று கிறிஸ்தவ சமுதாயம் தள்ளாடக் காரணம் என்ன? கிறிஸ்து தமது ஜீவனைக் கல்வாரியில் கொடுத்து ஏறத்தாள இரண்டாயிரம் ஆண்டுகள் கழிந்த பின்னும், உலகின் பல பாகங்களும் இருளாயிருக்க, தேவனை அறிந்து கொள்ளாமலிருக்கக் காரணம் என்ன?

கிறிஸ்துவின் நாமம் தரிக்கப்பட்ட தேவ ஜனம், தோல் வியினால் சோர்வுற்று ஆத்தும ஆதாயம் செய்யமுடியாமல், உலகத்தை அசைக்கமுடியாமல் சோர்ந்து போயிருக்கக் காரணம் என்ன?

பெலன் இல்லை! ஆவியிலும் ஆத்துமாவிலும் பெலன் இல்லை! இன்று கிறிஸ்தவ சமுதாயம், தேவ பக்தியின் வேஷம் தரித்து, அதன் பெலனை மறுதலிக்கிறதினால் அல்ல வோ, ஆதி அப்போஸ்தலர் காலத்தில் நடந்த அற்புதங்களும் அடையாளங்களும் இந்த நாட்களில் நடைபெறவில்லை!

பெலப்படுத்துகிற கிறிஸ்துவின் பெலத்தில் பெலன் கொள்ளாமற் போகிறதினால் அல்லவோ, இன்று எழுப்புதல்

இன்னும் சபைகளில் ஏற்படவில்லை! நமது தேசம் இன்னும் இருளில் மூழ்கிக்கிடக்கிறது!

ஆ! உன்னை பெலப்படுத்துகிற மகா வல்லமையைக் காண முடியாதபடி அந்தகார சக்திகள் உன் மனக்கண்களைக் குருடாக்கியிருப்பது எவ்வளவு பரிதாபத்துக்குறிய காரியம்!

இப்பொழுதே விழித்தெழு! கிறிஸ்துவிலே பெலப்படு! இந்த கடைசி வினாடி நேரத்திலாவது கர்த்தருக்காக வைராக்கியமாக நிற்க தீர்மானம் செய்!

ஒரு சாதாரண போலீஸ்காரரின் பின்னால் முழு போலீஸ் இலாக்காவும், அரசாங்கமும் நின்று அவனை பெலப்படுத்துகிறது!

அதுபோல, தேவனுடைய பிள்ளையே, நீ தேவனுடைய பட்சத்தில் நின்றால், கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையின் பெலனும், தேவதூதர் கூட்டங்களும், முழு பரலோகமும் உன்னை பெலப்படுத்தும்!

எனவே, இப்பொழுதிலிருந்தே, என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே, எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்று கூறிக் கொண்டே உன் பாதையில் முன்னேறு! நிச்சயமாய் உன் வாழ்க்கையில் அதிசயங்களையும், அற்புதங்களையும் காண்பாய்! பவுல் அப்போஸ்தலன், ''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே'' என்று பிலிப்பியருக்கு எழுதுகிற வாக்கியங்கள், ரோமாபுரிச் சிறைச்சாலையில் பெலனற்றுப்போய், நம்பிக்கையில்லாத, வயதான நாட்களில் எழுதியவைகளாகும்!

சரீரம் பெலவீனமடைந்திருந்தாலும், சோர்ந்துபோய் இருந்தாலும் தனது பெலன் எவ்விடத்திலிருந்து வருகிறது என்பதைப் பவுல் அப்போஸ்தலன் திட்டமாய் அறிந்திருந்தார்!

தன் பெலத்தின் ஊற்றுக் கண்கள் வானத்திலும், பூமியிலும் சகல அதிகாரமுடையவரிடத்திலிருந்து பொங்கி புறப்பட்டு வருவது அவருக்குத் தெரியும்!

ஆம்! ஆவி ஆத்துமா சரீரத்தின் சிருஷ்டி கர்த்தர் அவர்; தமது பரிசுத்தவான்களை, தீர்க்கதரிசிகளை, ஊழியக்காரர்களை பெலப்படுத்தி உபயோகித்த சர்வ வல்லமையுள்ளவர் அவர்! அவரே பெலப்படுத்த வல்லவர்! உங்களுக்கு அந்த விசுவாச அனுபவம் உண்டா?

வரலாற்றுச் சரித்திரத்தின் மையத்தில் எழுந்த தத்துவ ஞானி சாக்ரடீஸ், 'உன்னை அறிந்து கொள்' (Know thyself) என்று குரல் எழுப்பினர்! ஆயிரம் உலக வாலிபர்கள் விழித்து எழுந்தார்கள்! காரணம் என்ன? தங்களுக்குள்ளேயே மறைந்திருக்கும் பெலனைக் கண்டு பிடித்தார்கள்; தன்னம்பிக்கைக் கொண்டார்கள். தங்களுக்குள்ளே அணுகுண்டைக் காட்டிலும் ஒரு பெலன் மறைந்து கிடப்பதை உணர்ந்தார்கள்.

ஆனல் பவுல் அப்போஸ்தலன் அதைக் காட்டிலும், கோடிக்கோடி மடங்கு வல்லமையை தன் வசனத்தில் வெளிப்படுத்துகிருர்! ''உன்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவின் மகா பெலத்தின் வல்லமையை அறிந்து கொள் என்பதே அவரது வசனத்தின் பொருள்!

முதலாவது, நீ உன்னை உணர்ந்துபார்! நீ தேவனுடைய சாயலில், தேவனுடைய மகிமைக்காக, உருவாக்கப்பட்டவன் என்பதை உன் கண் முன்னல் நிறுத்து!

உன் ஆத்துமாவோடு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையை விசுவாசத்தோடு இணைத்துவிடு!

உன் ஆவியோடு, பரிசுத்தாவியானவரின் உன்னத பெலனுகிய பரிசுத்தாவியை ஒன்ருய் இசைத்துவிடு!

தேவபலம் உன்னில் பரிபூரணமாக இறங்கட்டும்! தேவனிலே பெலன் கொள்; ''என்னிலே வல்லமையோ பெலனே ஒன்றுமேயில்லை; உமது பெலத்தை எனக்குத்தாரும்'' என்று மன்ருடிக்கேள்!

அப்பொழுது—

தேவ பெலன் உன்னில் இறங்கும்! மகாபெரிய வல்லமை உன்னிலிருந்து புறப்படும்! உன் கண்களை ஏறெடுத்து வேதத்திலுள்ள மனுஷரைப்பார்! எல்லோரும் பொதுவாக தாழ்மையான நிலையிலிருந்து வந்தவர்கள் தான்! ஒரு காரியம் அவர்கள் செய்தார்கள்! தேவ பெலத்தைத் தரித்துக் கொண்டார்கள்!

அப்பொழுது—

ராஜ்யங்களை ஜெயித்தார்கள்!

நீதியை நடப்பித்தார்கள்!

வாக்குத் தத்தங்களைப் பெற்றார்கள்!

சிங்கங்களின் வாய்களை அடைத்தார்கள்!

அக்கினியின் உக்கிரத்தை அவித்தார்கள்!

பட்டயக்கருக்குக்குத் தப்பினார்கள்!

பலவீனத்தில் பெலன் கொண்டார்கள்!

யுத்தத்தில் வல்லவர்களானார்கள்!

அந்நியருடைய சேனைகளை முறியடித்தார்கள்!!

இன்னும் ஆயிரம் ஆயிரம்!! வேதம் உனக்கு சாட்சி கூறுகிறது! நேற்றும் இன்றும் என்றும் மாறாத தேவ வல்லமை உன்னையும் பெலனடையப் பண்ண வாஞ்சிக்கிறது!

பெலனடைவாயாக, இப்பொழுதே பெலனடைவாயாக.

அத்தியாயம் 2

தாழ்வு மனப்பான்மையைத் தகர்க்கும் தேவ பெலன்!

தாழ்வு மனப்பான்மை!

தன் பெலத்தையும் கிறிஸ்துவின் பெலத்தையும் குறைவாக மதிப்பிடுவது! அடிக்கடி சோர்ந்து போய்விடுவது! இது கிறிஸ்தவ சமூதாயத்தைப் பிடித்திருக்கும் பயங்கரமான நோய்!

வனாந்திரத்தில் மோசே இஸ்ரவேல் ஜனங்களை வழி நடத்திக் கொண்டுவரும்போது, கானான் தேசத்தைச் சுற்றிப் பார்க்கும்படி, கோத்திரத்தில் ஒருவர் வீதம் பன்னிரண்டு பேரை தேர்ந்தெடுத்து அனுப்பினான்!

அதில் பத்து பேர் தாழ்வு மனப்பான்மையுள்ளவர்கள்! அவர்கள் கொடுத்த செய்தியை 'துர் செய்தி' என்று வேதம் வர்ணிக்கிறது. (எண். 13 அதி) ''அந்த தேசத்திலே குடியிருக்கிற ஜனங்கள் பலவான்கள்; பட்டணங்களும், அரணிப்பானவைகளும், மிகவும் பெரியவைகளுமாய் இருக்கிறது. அங்கே ராட்சசபிறவியான ஏனாக்கின் குமாரராகிய இராட்சதரையும் கண்டோம். நாங்கள் எங்கள் பார்வைக்கு வெட்டுக்கிளிகளைப்போல் இருந்தோம்; அவர்கள் பார்வைக்கும் அப்படியே இருந்தோம் என்று சொல்லி, இப்படி இஸ்ரவேல் புத்திரருக்குள்ளே தாங்கள் சுற்றிப் பார்த்து வந்த தேசத்தைக்குறித்துத் துர்செய்தி பரம்பச் செய்தார்கள்'' (எண். 13:31,33)

ஆனால் யோசுவாவும், காலேபும் தேவபலத்தை விசுவாசிக்கிறவர்கள். அவர்கள் ஜனங்களை அமர்த்தி, 'நாம் அதை எளிதாய் ஜெயித்துக் கொள்ளலாம்; அந்த தேசத்து ஜனங்களுக்கு நீங்கள் பயப்படவேண்டியதில்லை; அவர்கள் நமக்கு இரையாவார்கள்; அவர்களைக் காத்த நிழல் அவர்களை விட்டு விலகிப் போயிற்று; கர்த்தர் நம்மோடே இருக்கிறார்; அவர்களுக்குப் பயப்படவேண்டியதில்லை'' என்றார்கள்.

கானான் தேசத்துக்குள் பிரவேசித்தவர்கள் காலேபும், யோசுவாவும்தான்!

தாழ்வு மனப்பான்மை அவிசுவாசத்தையும், பயத்தையும் கொண்டுவரும்! கடைசியாக அக்கினிக் கடலில் பங்கடையச் செய்யும்.

சோதனை வரும்பொழுது, உடனே தேவனுடைய பெலத்தில் சார்ந்துகொள்; தாழ்வு மனப்பானமைக்கு ஒருக்காலும் இடங்கொடுக்காதே!

கோலியாத்தைக் கண்டபோது சவுல் தாழ்வு மனப்பான்மையடைந்தான்; தாவீதோ கர்த்தருக்குள் தன்னை பெலப்படுத்திக் கொண்டான்!

ஆபத்துக் காலத்தில் நீ சோர்ந்து போவாயானால் உன் பெலம் குறுகினது!

அத்தேனே பட்டணம் விக்ரகங்களால் நிறைந்திருக்கிறதைப் பவுல் கண்டு, தன் ஆவியில் மிகுந்த வைராக்கியமடைந்தான் (அப். 17:16).

''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்குப் பெலனுண்டு'' இதுவே தாழ்வு பான்மையைத் தகர்த்தெறியும், விரட்டியடிக்கும் தேவனுடைய வசனம்!

நான் எழுதிய பரீட்சை ஒன்றில் தொடர்ந்து தோல்வியடைந்து கொண்டிருந்தபடியால் மனம் சோர்ந்து போனேன்: எவ்வளவு முயற்சியெடுத்தேன், எத்தனை மணி

நேரம் படித்தேன்! எல்லாம் வீண்! இனி பரீட்சை எழுதுவதைவிட சும்மா இருப்பது நல்லது என்று தீர்மானித்தேன். என்னை ஓர் தாழ்வு மனப்பான்மை பற்றிப் பிடித்துக் கொண்டது. என் மனச் சோர்வை அறிந்த மனைவி, ''சோர்ந்து போகவேண்டாம். நீங்கள் தேர்ச்சியடைய ஒரு வழி சொல்லுகிறேன். தன்னம்பிக்கையோடு, 'என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு' என்று சொல்லிக் கொண்டே படியுங்கள்'' என்று ஒரு பெரிய இரகசியத்தைக் கற்றுக் கொடுத்தாள். அல்லேலூயா! மறுதேர்வில் தேர்ச்சிப் பெற்றேன்!

பிலிப்பியர் 4:13ல் உள்ள அந்த தேவ வசனம் அநேகரை தைரியப்படுத்தியிருக்கிறது; அநேகரை விசுவாச வீரர்களாக்கியிருக்கிறது! அநேக சாட்சிகளை நான் வாசித்திருக்கிறேன். தாழ்வு மனப்பான்மை வருமானால், உன் மேலேயே உனக்கு நம்பிக்கையில்லாத எண்ணங்கள் உன் உள்ளத்தில் அலைமோதுமானால் இந்த வசனத்தை திரும்பத் திரும்ப சொல்; உன் நரம்புகளையும், எலும்புகளையும், முறிந்துபோன ஆவியையும், இந்த ஜீவனுள்ள வசனம் பெலப்படுத்தும்! பரிட்சித்துப்பார்! ருசித்துப்பார்! நிச்சயமாக பெலனடைவாய்! தாழ்வு மனப்பான்மையை தகர்த்தெறியக்கூடிய ஓர் ஆயுதம் உண்டானால் அது வேத வசனமே என்று நீயே சாட்சி கூறுவாய்!

ஒருமுறை சிலராக தெருப்பிரசங்கத்திற்காக ஓர் இடத்திற்குப் போயிருந்தோம்! கைத்தட்டி, பாட்டுப்பாடி ஆரம்பித்தோம்! ஒரு சிலரே நின்று கவனித்துக் கொண்டிருந்தார்கள். எங்களோடு வந்தவருக்கு தன்னைப்பற்றிய ஓர் தாழ்வு மனப்பான்மை இருந்தது! அவர், ''நாம் இங்கு நின்று பேசிப் பிரயோஜனமல்லை; யாரும் ஒப்புக் கொடுக்க மாட்டார்கள்; அப்படியே ஒப்புக் கொடுத்தாலும் உண்மையான மனதோடு ஒப்புக் கொடுக்காமல், நம்மிடத்தில் ஏதாவது எதிர்பார்த்துதான் முன்னே வருவார்கள். நாம் வீணாக இங்கு நின்று சத்தம்போட்டு பேசிக் கொண்டிருக்கிறோம்'' என்று அதைரியப்பட ஆரம்பித்துவிட்டார்!

ஆம்; தாழ்வு மனப்பான்மை ஓர் நோய் மாத்திரமல்லாமல் மற்றவர்களுக்கும் தொற்றக்கூடிய ஓர் வியாதியாகும்! மற்றவர்களையும் விசுவாசத்திலிருந்து வழுக்கிப் போகப் பண்ணக்கூடியது!

ஆனால் கர்த்தர் எங்களுக்கு ஓர் அதிசயத்தை செய்தார்! திடீரென்று ஒரு கார் அங்குவந்து நின்றது. அதிலிருந்து இறங்கிய ஓர் டாக்டர் எங்களோடு கலந்துகொண்டு தம் சாட்சியைக் கொடுத்தார்! அவர் போதைப் பொருட்களை உட்கொண்டு, எல்லா கெட்ட வழிகளிலும் திரிந்து தன் ஆத்துமாவையும், சரீரத்தையும் கெடுத்துக் கொண்டதாகவும், கடைசியில் பைத்தியக்கார ஆஸ்பத்திரியில் அடைக்கப்படும் நிலை வந்ததாகவும்; அங்கே ஓர் சிறுவன் அவருக்குக் கொடுத்த துண்டுப்பிரதி (Tract) மூலமாக இயேசுவை ஏற்றுக் கொண்டு, இன்று தேவனுடைய ஊழியத்தை பகுதி நேரமாக செய்து வருவதாகவும் அறிவித்தார்!

நம் முயற்சி வீண்; ஆனால் கர்த்தர் நம்முடனேகூட இருந்து செயல்படும்பொழுது, அது நம் புத்திக்கு எட்டாத ஆச்சரியமாயிருக்கும்! நமது ஊழியத்தின் பலன் என்ன என்று நமக்குத் தெரியாது! ஆனால் அவருடைய வருகை அதை வெளிப்படுத்தும். நம்மை அறியாமலேயே தேவ பெலன்; தேவ வசனம் கிரியை செய்துகொண்டே யிருக்கும்! வருகையில் மாத்திரமே நம்மால் கிறிஸ்துவை ஏற்றுக் கொண்ட அனைவரையும் நாம் அறியமுடியும்!

அந்த நாள் நெருங்கி இருக்கிறது!

அத்தியாயம் 3

சிங்கங்களின் வாயிலிருந்து...!

இரும்புத்திரை நாடுகளும், வலு சர்ப்பத்தின் நேரடி ஆட்சியும் உள்ளதுமான கம்யூனிஸ்ட் நாடுகளில் மிகத் துணிவாக வேதாகமங்களைக் கடத்திச் சென்று, அங்குள்ள இரகசிய கிறிஸ்தவர்களுக்குப் பிரசங்கித்து வருபவர் கிறிஸ்பனேஸ்.

''உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்துபோவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்'' (சங் 18:29) என்றபடி, தேவ பெலத்தின் வல்லமையோடுகூட உயிரையும் பொருட்படுத்தாமல், கிறிஸ்துவுக்காக சுவிசேஷத்தை கம்யூனிஸ்ட் தேசங்களுக்கு சுமந்து சென்றிருக்கிறார். அவர் சாட்சியைக் கேளுங்கள்!

"நான் ரஷ்யாவுக்கு வேதாமங்களைக் கடத்திச் செல்லும்படியாக வேதாமங்களை சிறிய பாக்கெட்டுகளில் அடைத்து, எனது சூட்கேஸ்களில் நிறப்பிக்கொண்டு விசுவாசத்தோடே புறப்பட்டேன். கர்த்தரின் வார்த்தையை,வேத புத்தகத்தை ரஷ்யாவுக்குள் எடுத்துச் செல்வது அந்த தேசத்துச் சட்டத்திற்கு மகா விரோதமானது. ஆகையால், கள்ளக் கடத்தல் போலத்தான் எடுத்துச் செல்லமுடியும்! பிடிபட்டால் என்ன நடக்கும் என்பதை வார்த்தைகளால் வர்ணிக்கமுடியாது!

சுங்கச்சாவடிக்கு (Customs) வந்து சேர்ந்தேன், ரஷ்ய சுங்க அதிகாரிகளோ மகா திறமையானவர்கள்; கல்லிலே நார் உரிப்பவர்கள்; தண்ணீரிலே தடம் பார்க்கும் நிபுணர்கள்; ஒரு மனிதனின் முகப் பார்வையிலிருந்தும், ஐந்து ஆறு

கேள்விகளுக்குப் பதில் சொல்வதிலிருந்தும், அந்த ஆள் எப்படிப்பட்டவன்; அவன் உள்ளத்தில் ஓடும் எண்ணங்கள் என்னென்ன என்று எல்லாம் கண்டு பிடித்து விடுவார்கள்.

அப்படிப்பட்ட ஓநாய்களுக்கு முன்பாக ஆட்டுக் குட்டியைப்போல் நின்று கொண்டிருந்தேன்.

" உன் சூட்கேஸைத் திற"

திறந்தேன் !

" உள்ளே என்ன இருக்கிறது ? "

நான் பதில் சொல்லவில்லை !

விஞடிகள் நகர்ந்து கொண்டிருந்தன. திடீரென்று அவன் அதிலே தன் கையைப் போட்டு ஒரு வேதாகமத்தை உருவினான். மறுவிநாடி, ஜீவனுள்ள தேவனுடைய ஆவியானவர் என்மேல் வல்லமையாக இறங்கினார்.

" இயேசுவின் நாமத்தினால் இவனுடைய கண்களைக் குருடாக்கிப்போடு" என்றார். உடனே நான் தாமதிக்காமல் இயேசுவின் நாமத்தில் அவன் கண்களைக் கட்டினார்.

அவ்வளவுதான்! அவன் கண்கள் திறந்திருந்ததே தவிர அதில் பார்வையின் கவனம் இல்லாமற் போய்விட்டது! வேதாகமத்தை அவன் கையில் வைத்திருந்தானே ஒழிய அது என்னவென்று உணரமுடியாதபடி அவன் மனக் கண்கள் குருடாகிவிட்டது!

இயேசு கிறிஸ்து தம் ஜீவிய நாட்களில் குருடரின் கண்களைத் திறந்தார்! நானோ அவர் நாம மகிமைக்காக, திறந்திருக்கும் கண்களைக் குருடாக்க வேண்டியதாயிற்று!

எனக்கு ஒன்று ஞாபகம் வந்தது அப்போஸ்தலனாகிய பவுல், எலிமா என்ற மந்திரவாதிக்கு இப்படித்தான் செய்

தார்! "இதோ, இப்பொழுதே கர்த்தருடைய கை உன் மேல் வந்திருக்கிறது. சிலகாலம் சூரியனைக் காணுமல் நீ குருடனுய் இருப்பாய் என்ருன்", உடனே மந்தகாரமும் இருளும் அவன்மேல் விழுந்தது. அவன் தடுமாறி கைலாகு கொடுக்கிறவர்களைத் தேடினுன் (அப். 13:11).

பின்பு அந்த சுங்க அதிகாரி என்னிடமிருந்த மற்ற பெட்டியைத் திறந்தான். அதனுள்ளும் ஏராளமானவேதாகமங்கள் இருந்தன ஆனல் அவனுடைய கண்களோ 'பரிசுத்த வேதாகமம்' என்ற எழுத்துக்களைக் காணவேயில்லை. என்ன ஆச்சரியம்!

என் பக்கமாகத் திரும்பினுன். சிறிதுநேரம் அமைதியாக நின்று கொண்டிருந்தான். பின் என்னிடமாக, "நீங்கள் போகலாம்" என்று பாஸ் செய்தான். அல்லேலூயா!

இப்படி எத்தனையோ முறை ரஷ்ய அதிகாரிகளின் கண்களில் படாமல், சிக்கிக்கொள்ளாமல், வேதாகமங்களைக் கடத்திக்கொண்டு இரும்புத்திரை நாடுகளுக்குள் பிரவேசித்திருக்கிறேன். ஒவ்வொரு முறையும் தேவனே என்னைப் பாதுகாத்தார்! அவருக்கே மகிமையுண்டாவதாக!

தானியேல் சிங்கக் கெப்பிக்குள் போகவேண்டிய சந்தர்ப்பம் வந்தது! ஆ, நம்முடைய தேவனுடைய அன்புக்கு ஓர் அளவேயில்லை! அவர் தம்முடைய தூதனை அனுப்பி சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டார்!

தம்முடைய பிள்ளைகளை பெலப்படுத்தி, அவர்களுக்காக பரிந்துபேசி வழக்காடி, யுத்தம் செய்கிற நமது தேவன், தம்முடைய பிள்ளைகளைப் பாதுகாக்கும்படி, சிங்கங்களின் வாய்களைக் கட்டிப்போடுகிருர்! துஷ்டர்களின் கண்களைக் குருடாக்கிப் போடுகிருர்!

அதுமட்டுமா? அவர் வாக்குத் தத்தம் என்ன தெரியுமா? "சிங்கத்தின் மேலும், விரியன் பாம்பின்மேலும் நீ

நடந்து, பால சிங்கத்தையும், வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்! (சங்.91;13)

"உனக்கு விரோதமாய் உருவாக்கப்படும் எந்த ஆயுதமும் வாய்க்காதேபோம்; உனக்கு விரோதமாய் நியாயத்தில் எழும்பும் எந்த நாவையும் நீ குற்றப்படுத்துவாய்! இது கர்த்தருடைய ஊழியக்காரரின் சுதந்திரமும், என்னாலுண்டான அவர்களுடைய நீதியுமாயிருக்கிறதென்று கர்த்தர் சொல்லுகிறார்" (ஏசாயா 54;17).

இந்த வாக்குத் தத்தங்கள் உனக்குரியது! சொந்தமாக்கிக் கொள்! கிறிஸ்துவில் பெலப்படு!! ஆமென்!

அத்தியாயம் 4

போர்களத்தில் நீ!

கிறிஸ்தவ ஜீவியம் ரோஜாமலர் மெத்தையல்ல—அது ஓர் போர்க்களம்! நீ என்று கிறிஸ்தவ ஜீவியத்தில் அடியெடுத்து வைக்கிருயோ, என்று இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்கிருயோ, அன்று நீ ஓர் போர்களத்தில் பிரவேசித்துவிட்டாய் என்று நினைத்துக் கொள்!

உலகம், மாமிசம், பிசாசு என்ற மூன்றும் ஒவ்வொரு விநாடியும் உன்னை வீழ்த்த போராடிக் கொண்டிருக்கும்!

என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலனுண்டு என்று சொல்லிக் கொண்டே கிறிஸ்துவின் பெலத்தில் சார்ந்து நீ முன்னேற வேண்டும்!

கிறிஸ்து ஒருக்காலம் தோல்வியைக் கண்டவரல்ல! அவர் பெலத்தில் நீ சார்ந்து கொள்வாயானால் ஒருக்காலமும் நீயும் தோல்வியைக் காண்பதில்லை!

ஜெயக் கிறிஸ்துவான அவர் உன்னை எல்லாவற்றிலும் எப்பொழுதும் வெற்றி சிறக்கப்பண்ணுவார்!

பிசாசின் கிரியைகளை அழிக்கும்படி வெளிப்பட்ட தேவ குமாரன், உனக்கும் சத்துருவின் சகல வல்லமைகளையும் மேற்கொள்ளும் அதிகாரத்தைத் தந்தருளுவார்.

அவர், சிலுவையிலே உலகம், மாமிசம், பிசாசை வெற்றி சிறந்தபடியினாலே அவர் வெற்றியை வாக்குத்தத்தமாக்கிக்

கொண்டு "என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லா வற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு" என்று உற்சாகத் துடனே, மார்தட்டிக் கொண்டே எழுந்து பிரகாசி!

கிறிஸ்துவுக்காய் பெரிய காரியங்களைத் திட்டமிடு!

அவர் பெலத்தால் பெரிய காரியங்களைச் செய்வாய்!!

உலகமாகிய எகிப்தை ஜெயிக்கும் பெலன்!

பழைய ஏற்பாட்டு இஸ்ரவேலருக்கு எகிப்து எப்படியோ, அப்படியே புதிய ஏற்பாட்டு விசுவாசிகளுக்கு உலகமும் அதன் ஆசை இச்சைகளும் ஆகும்;

அவைகள் உன்னை சிவந்த சமுத்திரம் வரையிலும் தொடர்ந்துவரும்! இன்றைக்கு நீங்கள் காண்கிற எகிப்தி யரை இனி என்றென்றைக்கும் காணமாட்டீர்கள்! என்று மோசே இஸ்ரவேலரைத் திடப்படுத்தினான். இஸ்ரவேல் ஜனங்கள் தேவனின் பெலத்திற்குள் அடைக்கலம் புகுந்தார் கள், கர்த்தர் அவர்களுக்காக யுத்தம் பண்ணினார் (யாத். 14;14),

செங்கடலைக் கடந்தபோது மோசேயும் இஸ்ரவேல் புத்திரரும் கர்த்தரைப் புகழ்ந்து பாடினபாட்டு "கர்த்தர் என் பெலனும், என் கீதமுமானவர்" (யாத் 15:2), அப்பொழுதுதான் இஸ்ரவேலருக்குத் தெரிந்தது, தங்களை பெலப்படுத்துகிறவர் யார் என்றும், அவர் எகிப்தியரை செங் கடலில் தள்ள வல்லவர் என்றும் அறிந்து கொண்டார்கள்! அவரைத் தங்கள் "பெலன்" என்று பாடினார்கள், ஆனந்த மாய் ஆடினார்கள்.

இதே மோசே தன் சுய பெலத்தால் கிரியை செய்த நாட்களுண்டு; தன் பெலத்தாலே, தன் ஞானத்தாலே இஸ்ர வேலை மீட்டுவிடலாம் என்று தீவிரப்பட்ட நேரங்களுண்டு; எகிப்தியன் ஒருவனை வெட்டி, மணலிலே புதைத்துப் போட்

டான்! அதனால் பார்வோனுக்குப் பயந்து மீதியான் தேசத்திற்கு ஓடவேண்டியதாயிற்று!

தேவனுடைய பிள்ளையே, உன் பெலன் கொஞ்சமே! உன் பெலத்தில் நீ சார்வாயானால், உன்னால் சிறிய காரியங்களைத்தான் செய்யமுடியும்; அதுவும் தோல்வியில்தான் உன்னைக் கொண்டுபோய் சேர்க்கும்!

உன் பெலத்தோடு கிறிஸ்துவின் உயிர்த்தெழுந்த வல்லமையைச் சேரவிடு! உன் ஆவியின் பெலத்தோடு உன்னத பெலத்தை இணைத்துவிடு! உன்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எகிப்து என்ன—முழு உலகத்தையே அசைத்துவிடுவாய்!

மோசே ஏறத்தாழ நாற்பது ஆண்டுகள் தனது மாமனாகிய எத்திரோவினிடத்தில் தங்கியிருந்தான், அங்கே தேவ பெலத்தின் இரகசியங்களை அறிந்தான்!

"பார், உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்;' என்று கர்த்தர் மோசேயிடம் சொன்னார்! (யாத், 7:1).

பாருங்கள்! தேவன் தம் பெலத்தில் சாருகிற மக்களை எவ்வளவாக உயர்த்துகிறார்; மேன்மைப்படுத்துகிறார்!

"உன்னை நான் பார்வோனுக்கு தேவனாக்கினேன்"

பார்வோனைக் கண்டு பயந்து ஓடிய மோசே இப்பொழுது பார்வோனுக்கு தேவன்! தேவ பெலத்தால் எகிப்தியருடைய தலைப் பிள்ளைகளையெல்லாம் சங்கரித்தது மாத்திரமல்ல; பார்வோனையும் அவன் சேனைகளையும், தனது கையிலுள்ள கோலை நீட்டி சிவந்த சமுத்திரத்தில் கவிழ்த்துப் போட்டான்!

சிவந்த சமுத்திரத்தைக் கிழிக்கவும், சேர்க்கவும் வல்லமையுள்ள தேவ பெலம்!

சிவந்த சமுத்திரத்தைக் கிழிக்கவும், சேர்க்கவும் வல்லமையுள்ள தேவபெலம்!

மழை பெய்யாதபடி வானத்தை அடைக்கவும், பெய்யும்படி வானத்தைத் திறக்கவும் வல்லமையுள்ள ஜெபம்!

பரலோகத்தில் நீ கட்டவும், கட்டவிழ்க்கவும் வல்லமையுள்ள வாக்குத்தத்தங்கள்!

பாதளத்தின் வாசல்கள் உன்னை மேற்கொள்ள முடியாத உன்னத அடைக்கலம்!

சூரியனையும், சந்திரனையும் தடுத்து நிறுத்தவும், ஏன் பின்னிட்டுப் போகவும் பண்ணக்கூடிய தேவனுடைய கையின் கிரியைகளைக் குறித்து கட்டளை கொடுக்கக்கூடிய உரிமைகள்!

மரணமே, உன் கூர் எங்கே? பாதாளமே, உன் ஜெயமெங்கே என்று மரணத்திற்கும், பாதாளத்திற்கும் சவால் விடும் ஜெபத்தின் ஜீவியம்!

எல்லாம்—

உன் பெலத்தினாலல்ல; உன்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலேயே எல்லாவற்றையும் உன்னால் செய்ய முடியும்!

இனி நீ கோழையாய் இராதே! சோம்பலாய்த் திரியாதே! உலகத்தின் கடைசி வினாடி நேரம் இது! கிறிஸ்துவில் பெலப்படு! உடனே தனியறை தேடி முழங்காற்படியிடு! ''ஆண்டவரே, இதுவரை நான் வீண் வாழ்க்கை வாழ்ந்தது போதும்! இனிமேலும் நான் உதவாக்கரையாக, பெலனற்றவனாக, விழுந்து விழுந்து எழுகிற அனுபவம் உள்ளவனாக வாழவேண்டாம்! உமது இரத்தத்தால் என்னை ஒரு முறையாய் கழுவி பரிசுத்தப்படுத்தும்!

பழைய ஏற்பாடு, புதிய ஏற்பாடு பக்தர்களை பெலப்படுத்தி பெரிய காரியங்களைச் செய்த வல்லமையுடைய

வரே, நீர் நேற்றும் இன்றும் மாருதவராயிருக்கிறபடியால் என்னையும் இப்பொழுதே பெலப்படுத்தும்; உமது ஆவியாலும் உமது வசனத்தாலும், உமது உயிர்த்தெழுந்த வல்லமையினுலும் இப்பொழுதே என்னைப் பெலப்படுத்தும்; பெலப்படுத்தும்'' என்று கதறி அழுது ஜெபி; அவர் பெலம் பரிபூரணமாய் உன்னில் விளங்கும் வரை ஜெபத்தை நிறுத்தாதே! உன்னை பெலப்படுத்துவதே தேவனுடைய சித்தம்; அவரது வாக்குத்தத்தம்! நீ அவருடைய பிள்ளையானதால், அவரிடம் கேட்க உனக்கு முழு உரிமை உண்டு; அப்பா பிதாவே என்று அழைக்கக்கூடிய புத்திர சுவிகாரத்தை அவர் கொடுத்திருக்கிருர். அவர் வாக்குத்தத்தில் சார்ந்து கொள்

யாக்கோபு தேவனிடத்தில் போராடி மேற்கொண்டான் என்று வாசிக்கிறோம்! நீயும் உன்னை தேவன் பெலப்படுத்தும் வரை தமது ஆசீர்வாதங்களால் நிரப்பும்வரை அவரை விடாதே!

இயேசு சொன்னர்: ''பரலோக ராஜ்யம் இது முதல் பலவந்தம் பண்ணப்படுகிறது; பலவந்தம் பண்ணுகிறவர்கள் அதைப் பிடித்துக் கொள்வார்கள்''

கர்த்தரே தரட்டும் என்று காத்திராதே! நீ கேட்டால் மாத்திரமே பெற்றுக் கொள்வாய்; பலவந்தம் பண்ணிஞல் மாத்திரமே பிடித்துக் கொள்வாய்!

கைகளை வானத்துக்கு நேராய் உயர்த்தி, உன் உள்ளத்தை அவருக்கு நேராய் ஏறெடு! வானத்தையும் பூமியையும் படைத்த கர்த்தரிடத்திலிருந்து உனக்கு ஒத்தாசை மட்டுமல்ல; தேவ பெலனும் கிடைக்கும்!

ஆமென்; அல்லேலூயா! கிறிஸ்து அப்படிச் செய்வார்! உன்னை பெலப்படுத்துகிறவர் அவரே! உன்னை பெலப்படுத்தவே, அவர் தம் ஆவி ஆத்துமா சரீரத்தை ஊற்றிக் கொடுத்தாரே! நிச்சயமாய் உன்னை பெலப்படுத்துவார்!

விசுவாசி! அப்படியே ஆகும். ஆமென்! ஆமென்!!

அத்தியாயம் 5

நாவில் தேவ பெலம்!

கப்பல் கரையைத் தொட்டது!

எத்தனையோ நாட்கள் கடலையே பார்த்துக் கொண்டிருந்துவிட்டு; அழகிய நிலப்பரப்பைக் காணும்போது உள்ளத்தில் மகிழ்ச்சி பொங்குவது இயற்கைதானே!

கப்பலிலுள்ள பிரயாணிகள் தங்கள் மூட்டைமுடிச்சுகளை ஆயத்தப்படுத்தத் தொடங்கினார்கள்!

துறைமுகம் வந்துவிட்டது! ஓர் புதிய தேசம்!

ஜப்பான்!!

அந்த மிஷினெரி தாயின் உள்ளத்தில்தான் எத்தனை பாரம்!

ஜப்பான் தேசத்திற்காக—கர்த்தரை அறியாத—அறிய நேரமும் கிடைக்காத அந்த மக்களுக்காக எவ்வளவு கண்ணீர் சிந்தி ஜெபித்திருக்கிறார்கள்!

உலகிலேயே தொழில் வளமிக்க நாடு! மிகச் சுறுசுறுப்பாக இயங்கும் தேசம் அது! ஆனால் இயேசுவுக்கோ அங்கு இடமில்லை!

அங்கிருக்கும் ஒரு சில கிறிஸ்தவர்கள் மூலம் பொதுக் கூட்டங்களை ஒழுங்கு செய்து அதன் மூலம் ஜப்பானிலுள்ள புறஜாதிகளுக்கும் சுவிசேஷம் அறிவிக்க வேண்டும் என்ற வாஞ்சை அந்த மிஷினெரி அம்மாளுக்கு!

துறைமுகத்தில் வந்து சந்திக்கிறேன் என்று எழுதிய யாரும் வந்து சந்திக்கவில்லை. ஆனால் இந்த அம்மாவோ கூட்டம் நடக்க வேண்டிய இடத்திற்கு எப்படியோ வந்து சேர்ந்து விட்டார்கள்.

ஜப்பானிலும் தாகமுள்ள ஜனங்களைக் கர்த்தர் கூட்டி சேர்த்து அந்த பொதுக்கூட்டத்திற்கு கொண்டு வந்திருந் தார். கூட்டம் ஆரம்பமானது.

அப்பொழுது ஓர் திடுக்கிடும் செய்தி அந்த மிஷினெ ரிக்குக் கிடைத்தது! அந்த அம்மாளுக்கு மொழி பெயர்ப் பாளாராக நியமிக்கப்பட்டிருந்தவரைக் காணோம்; கிறிஸ் தவம் பரவக்கூடாது என்ற எண்ணத்தில் மற்ற மதத்தினரும் அரசாங்கமும் சேர்ந்து மொழி பெயர்க்கக்கூடிய அவரை இழுத்துச் சென்றுவிட்டனர்; இந்த அம்மாளுக்கோ ஜப்பானிய மொழி கொஞ்சமும் தெரியாது! ஆங்கிலத்தில் மட்டுமே பேசி என்ன பயன்? ஜப்பான் மொழியில் மொழி பெயர்க்கக்கூடியவர்கள் வேண்டாமா?

பிரசங்க நேரம் வந்தது!

அந்த மிஷினெரித் தாய், தன்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவின் பெலத்தில் தஞ்சம் புகுந்து, எழுந்து மேடைக்கு வந்தார்கள். பொருத்தப்பட்டிருந்த 'மைக்கில்' பேச ஆரம்பிக்கும்போது—

கர்த்தர் அற்புதத்தைச் செய்தார்!

அந்தத் தாய் திடீரென்று ஜப்பான் மொழியில் பிர சங்கம் செய்ய ஆரம்பித்துவிட்டார்கள். எந்த தடுமாற்ற மும் இன்றி, தாய்மொழி பேசுவதைப்போல ஜப்பான்மொழி அவர்கள் உதட்டில் பொங்கிவர ஆரம்பித்தது!

எல்லோருக்கும் ஆச்சரியம்! மொழி பெயர்ப்பாளரை ஒளித்துவைத்து விட்டோமே, இப்பொழுது என்ன செய்

வார்கள் என்று கேலி செய்ய நினைத்த வஞ்சகர்களுக்கும் ஒரே ஆச்சரியம்!

எப்படி இது நடந்தது? மனுஷ புத்திக்கு இது எட்டாதது! பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே அப்படி ஆயிற்று!

கர்த்தர் ஒருக்காலமும் தம் பிள்ளைகளை அவமானத்திற்கும், நிந்தைக்கும் ஒப்புக்கொடுக்கிறவரல்ல! அவருடைய முகத்தை நோக்கிப் பார்த்தவர்கள் வெட்கப்பட்டுப் போனதில்லை! உறங்காமலும் தூங்காமலும் உன்னைப் பாதுகாக்கும் தேவன் ஒருக்காலும் உன் காலைத் தள்ளாடவொட்டார்!

கர்த்தருக்கோ எல்லா பாஷைகளும் அவருடைய பாஷைகளே!

சீஷர்கள் பரிசுத்தாவியினாலே நிரப்பப்பட்டபோது, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின்படியே வெவ்வேறு பாஷைகளில் பேசத் தொடங்கினார்கள்; அப்போது கிரேக்கரும், அரபியரும் இன்னும் மற்ற தேசத்தவர்களும், ''நாம் நம்முடைய பாஷைகளிலே தேவனுடைய மகத்துவத்தைப் பேசக் கேட்கிறோமே என்றார்கள் அல்லவா? (அப். 2:4-12).

அதே வரத்தினால் கிறிஸ்து, அந்த பாரமுள்ள மிஷினெரித் தாயை பெலப்படுத்தினார்!

கூட்டம் முடிந்தபின் எல்லோரும் அந்த மிஷினெரி தாயைச் சூழ்ந்து கொண்டார்கள்!

''எப்படி ஜப்பான் மொழி உங்களுக்குத் தெரியும்?''

''யார் உங்களுக்குக் கற்றுக் கொடுத்தார்கள்?'' கேள்விக்குமேல் கேள்வி! ஆச்சரியத்திற்குமேல் ஆச்சரியம்!!

''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே!'' என்பதைத் தவிர வேறு பதில் சொல்ல முடியவில்லை!

இன்னும் அநேகக் கூட்டங்கள்; பிரசங்கங்கள்; வீடு சந்திப்புகள்; தனிப்பட்ட உரையாடல்கள்; எல்லாம் ஜப்பானிய மொழியிலேயே செய்தார்கள். அநேக ஆத்துமாக்களை கிறிஸ்துவிடம் வழி நடத்தினார்கள்!

ஊர் திரும்பும் நேரம் வந்தது; துறைமுகத்திற்கு அநேகர் வழியனுப்ப வந்திருந்தனர்! ஜப்பானில் சுவிசேஷத்தை வெற்றியோடு நிறைவேற்றின தாய் கப்பலில் ஏறினார்கள்.

கப்பலின் மேலிருந்து கொண்டு, கீழே வழியனுப்ப வந்த மக்களோடு ஜப்பான் மொழியிலே உரையாடிக் கொண்டிருந்தார்கள்.

விசில் சப்தம்! கப்பல் மெதுவாக நகர்ந்தது! மறு விநாடி திடீரென்று—

கீழே நிற்பவர்கள் பேசுவது இவர்களுக்குப் புரியவில்லை! இவர்களால் ஜப்பானிய மொழியில் பதில் சொல்ல முடியவில்லை! என்ன ஆச்சரியம்!!

பார்வோனிடத்தில் பேச, தேவன் மோசேயை அழைத்த போது, மோசே, ''நான் வாக்கு வல்லவனல்ல; நான் திக்கு வாயன், மந்த நாவும் உள்ளவன்'' என்றான்!

தேவன் தம்முடைய ஊழியத்திற்கு அழைக்கும்போது அநேகருடைய சாக்குபோக்கு இதுதான்! ''நான் படிக்காதவன்; ஆங்கில அறிவு இல்லாதவன்; பிரசங்கம் பண்ணத் தெரியாதவன்!'' தங்கள் குறைகளையே மீண்டும் மீண்டும் சொல்லி, தேவ பெலத்தை அசட்டை செய்துவிடுவார்கள்!

எனக்கு ஒருவரைத் தெரியும்! அவர் படித்த யாரோடும் பேசமாட்டார்; தனக்கு ஆங்கில அறிவு இல்லையே என்று தன்னையே நொந்து கொள்வார்! அவரைப் பார்க்கும் போது பரிதாபமாக இருக்கும்!

மோசேக்கு கர்த்தர் கொடுத்த பதில் என்ன தெரியுமா? ''மனுஷனுக்கு வாயை உண்டாக்கினவர் யார்? ஊமையனை

யும் செவிடனையும், பார்வையுள்ளவனையும், குருடனையும் உண்டாக்கியவர் யார்? கர்த்தராகிய நான் அல்லவா? ஆதலால் நீ போ; நான் உன் வாயோடு இருந்து நீ பேச வேண்டியதை உனக்குப் போதிப்பேன் என்றார் (யாத் 4:12)

அப்படியே இயேசுவும் சீஷர்களை பெலப்படுத்தினார்; "எப்படிப் பேசுவோம் என்றும், என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள். பேச வேண்டியது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும்" (மத். 10:19).

கர்த்தர் இவ்வளவு பெரிய வாக்குத்தத்தைக் கொடுத்து உன்னை பெலப்படுத்துகிறபடியால்—

அந்த தேவனைக் குறித்து சாட்சி சொல்ல கூச்சப் படாதே!

தெருக்களிலே நின்று கிறிஸ்துவை சூழ நிற்பவர்களுக்கு அறிமுகப்படுத்துவதற்கு வெட்கப்படாதே!

சமயம் வாய்த்தாலும் வாய்க்காவிட்டாலும், திரு வசனத்தை பிரசங்கம் செய்!

உனக்கு ஞானத்தை தந்து உன் நாவை பெலப்படுத்து கிறவர் கிறிஸ்துவல்லவா? அவர் ஞானத்தின் ஊற்றல்லவா?

கர்த்தர் உன்னை ஆசீர்வதிப்பாராக!

அத்தியாயம் 6

தேவ பெலனைப் பெற்றுக் கொள்வது எப்படி?

தேவ பெலத்தால் பெரிய பெரிய காரியங்களைச் செய்ய முடியும் என்று கடந்த அத்தியாயங்களில் கண்டோம். இனி தேவ பெலனைப் பெற்றுக் கொள்ளும் வழிகளைக் காண்போம்!

1. தேவனுடைய நாமத்தை சுதந்தரித்துக் கொள்!

இயேசு கிறிஸ்து தமது நாமத்தின் வல்லமையைக் குறித்து பல இடங்களில் பேசியிருக்கிறார்! ''என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்'' (யோவான் *14:14*). அவருடைய நாமத்தைத் திரும்பத் திரும்ப சொல்லுவதிலிருந்தும் அவர் நாமத்தில் கேட்பதிலும் மிகுந்த பெலன் நமக்குக் கிடைக்கிறது.

கர்த்தருடைய நாமம் பலத்த துருகம்! தாவீது கர்த்தருடைய நாமத்திலே பெலன் கொண்டவன்.

பழைய ஏற்பாட்டுச் சரித்திரத்தில் தாவீது எக்காளத் தொனியில் முழங்கினான், ''உம்மாலே ஒரு சேனைக்குள் பாய்ந்து செல்வேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்'' (சங். *18:29*).

இந்தக் குரலை பவுல் புதிய ஏற்பாட்டில் எதிரொலிக்கிறார். ''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு'' (பிலிப். *4:13*).

தாவீதின் உதடுகளிலிருந்த ஜெயகீதம் என்ன தெரியுமா? "கர்த்தர் என் அடைக்கலமும் பெலனும் ஆபத்துக் காலத்தில் அனுகூலமான துணையுமானவர், ஆகையால் பூமி நிலை மாறினாலும், மலைகள் நடுச் சமுத்திரத்தில் சாய்ந்து போனாலும், அதன் ஜலங்கள் கொந்தளித்துப் பொங்கி, அதன் பெருக்கினால் பர்வதங்கள் அதிர்ந்தாலும் நாம் பயப்படோம்" (சங். 46:1-3).

கர்த்தருடைய நாமத்தை உனது அடைக்கலமாகவும் பெலனாகவும் நீ அனுபவித்து வருகிறாயா?

இளைஞனான தாவீது, கோலியாத்தைக் கொன்றது எப்படி? "நீ பட்டயத்தோடும், ஈட்டியோடும், கேடகத்தோடும் என்னிடத்தில் வருகிறாய்; நானோ நீ நிந்தித்த இஸ்ரவேலுடைய இராணுவங்களின் தேவனாகிய சேனைகளின் கர்த்தருடைய நாமத்தில் வருகிறேன்" என்றான் (I சாமு. 17:45).

கோலியாத்தை தனது பெலத்தால் எதிர்க்காமல் கர்த்தரின் நாமத்தின் பெலத்தினால் எதிர்த்தான். அல்லேலூயா! ஜெயம் தாவீதுக்குத்தான்! தாவீதை பெலப்படுத்தின கர்த்தராலே அப்படி ஆயிற்று!!

2. கழுகைப்போல புது பெலனடைவாயாக!

ஜெபம் தூபவர்க்கமாய் தேவனுடைய சமூகத்தைப் போய்ச் சேரும்! அந்த வழியே தேவபெலன் கீழே இறங்கி ஜெபிக்கும் விசுவாசியை பெலப்படுத்தும்! ஜெபிக்க, ஜெபிக்க தேவனின் மகா பெலன் மனுஷரின்மேல் இறங்கி தேவனுக்காய்ப் பெரிய காரியங்களைச் செய்ய நிறைவேற்ற பெலப்படுத்துகிறது! இதனால்தான் ஏசாயா 40:31-ல் "கர்த்தருக்குக் காத்திருக்கிறவர்களோ புது பெலன் அடைந்து கழுகுகளைப்போல செட்டைகளை அடித்து எழும்புவார்கள்; அவர்கள் ஓடினாலும் இளைப்படையார்கள்; நடந்தாலும் சோர்ந்து போகார்கள்" என்று ஜெபிக்கிறவர்களுக்குக் கிடைக்கும் பெலனைக் குறித்து எழுதியிருக்கிறது!

கர்த்தருக்குக் காத்திரு! கழுகைப்போல் பெலனடைவாய்! சோர்ந்து போகிறவனுக்கு அவர் பெலன் கொடுத்து சத்துவமில்லாதவனுக்கு சத்துவத்தைப் பெருகப் பண்ணுவார்! (ஏசாயா 40: 9).

மங்கியெரிகிற திரியை பிரகாசிக்கப் பண்ணி, தள்ளாடுகிற முழங்கால்களை பெலப்படுத்துவார்! ஆமென்!

முழங்காலின் பெலமே தேசத்தை அசைத்து எழுப்புதலை உண்டாக்கும் பெலன்!

3 வேத வசனங்களை உரிமை பாராட்டி சொந்தமாக்கிக் கொள்!

வேத வாக்கியங்களெல்லாம் பெலம் பொருந்தின, வல்லமை நிறைந்த (Power Packed) ஜீவனுள்ள வார்த்தைகள்!

இயேசு கிறிஸ்துவின் ஆயுதம் வேதவாக்கியங்களே ஆகும்! நாற்பது நாள் உபவாசம் எடுத்து பசியோடு இருக்கும்போது வந்த சாத்தானை வேத வாக்கியங்களின் பெலனால் முறியடித்தார்!

''மனுஷன் அப்பத்தினால் மாத்திரமல்ல; தேவனுடைய வாயிலிருந்து வருகிற ஒவ்வொரு வார்த்தையினாலும் பிழைப்பான்'' அப்பம் எப்படி சரீரத்தின் பலமோ, அப்படியே வேத வாக்கியமும் ஆத்துமாவின் பெலனாகும்!

வேத வாக்கியத்தால் பெலன் கொண்ட டாக்டர் ஹென்ரியின் சாட்சியை உங்கள் முன் வைக்கிறேன்!

''இருபத்தைந்து ஆண்டுகளுக்கு முன் மிகுந்த வியாதியால் என் சரீரம் நொந்து சிதைந்து போய் இருந்தது. செப்பனியா 3:17ல் உள்ள வாக்குத்தத்தத்தை ஒருநாள் வாசித்தேன். ''உன் தேவனாகிய கர்த்தர் உன் நடுவில் இருக்கிறார்; அவர் வல்லமையுள்ளவர்'' இதை வாசித்தபொழுது, மிகுந்த வல்லமையுள்ள தேவன் என் சரீரத்தின் நடுவில்

இருப்பதை விசுவாசித்தேன். அந்த மகத்துவமுள்ள தேவன் என் உள்ளத்தின் தேவனுமானார் சுகமடைந்தேன். பெலனடைந்தேன் அவர் என் நடுவில் இருக்கிற நினைவு என்னை விட்டு அகலவில்லை! இப்பொழுது எனக்கு எழுபது வயதாகிறது! நான் முப்பது வயதுள்ள வாலிபனைக் காட்டிலும் இரண்டு மடங்கு பெலனுள்ளவனாயிருக்கிறேன். இரண்டு மடங்கு சரீரத்திலும் ஆத்துமாவிலும் தினமும் உழைக்கிறேன். என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு இதை நான் அனுபவித்து வருகிறேன் ஆகவே எழுதுகிறேன்.''

4. விசுவாசத்தில் பெலப்படு!

விசுவாசத்தினாலே சாராளும் வாக்குத்தத்தம் பண்ணினவர் உண்மையுள்ளவர் என்றெண்ணி, கர்ப்பந்தரிக்க பெலனடைந்து வயது சென்றவளாயிருந்தும் பிள்ளை பெற்றாள்! (எபி 11:12).

பிள்ளைபேறு மகா வேதனையான காரியம்! அதிலும் வயது சென்று, சரீரம் செத்து, வழிபாடு நின்று போய்விட்ட முதிர்வயதுள்ளவள் பிள்ளைபெற பெலனடைகிறாள் என்றால் அது அதிசயமே! விசுவாசத்தால் உண்டாகும் பெலனை இந்தச் சம்பவம் உறுதிப்படுத்துகிறது!

விசுவாசியே, விசுவாசி! அப்பொழுது கர்த்தர் உன்னை ஆவிக்குரிய தாயாக, அநேகரை இயேசுவண்டை வழி நடத்தும் அற்புதக் கருவியாக, கர்த்தர் உன்னை உபயோகிப்பார்! விசுவாசிகளின் தாயாக நீ விளங்குவாய்! உன்னை செயல்படுத்துகிறவர் ''அவர்'' அல்லவா?

5 உன்னத பெலனாகிய பரிசுத்தாவியை பெற்றுக் கொள்!

தேவன், தாம் நேசிக்கிற ஜனத்தை மிகுந்த பெலத்தால் இடைகட்டும்படியாக அந்தகார சக்திகளை எதிர்த்துப் போரிடும் பலவான்களாக்கும்படியாக, உள்ளான மனுஷ

னில் வல்லமையாய் பெலப்படும்படியாக, தம்முடைய பல முள்ள பரிசுத்தாவியால் நிரப்புகிறுர்!

இயேசு கிறிஸ்துவின் வாக்குத்தத்தம் என்ன தெரியுமா? ''பரிசுத்தாவி உங்களிடத்தில் வரும்போது நீங்கள் பெலன டைந்து எருசலேமிலும் யூதேயா முழுவதிலும், சமாரியா விலும், பூமியின் கடைசி பரியந்தமும் எனக்கு சாட்சிகளா யிருப்பீர்கள்''.

பரிசுத்தாவி—அதனுல் பெலன்—அதனுல் சாட்சியுள்ள ஜீவியம்! வேலைக்காரிக்குப் பயந்து நடுங்கிய பேதுரு பரிசுத் தாவியால் நிரப்பப்பட்டபோது, தேவ பெலனுல் நிறைந்து பிரசங்கித்தான்! ஆயிரம் ஆயிரமாக ஜனங்களை தேவனிடம் திருப்பினுன்.

பலத்தினுலுமல்ல, பராக்கிரமத்தாலுமல்ல, தேவனு டைய ஆவியாலே அப்படி ஆயிற்று!

தேவன் நமக்கு பயமுள்ள ஆவியைக் கொடாமல் பலமும், அன்பும், தெளிந்த புத்தியுமுள்ள ஆவியையே கொடுத்திருக்கிறுர் (II தீமோ. 1:7).

பிரசங்கிக்க மாத்திரம் பேதுரு பெலனடையவில்லை! பாடனுபவிக்கவும் ஏன்—இரத்த சாட்சியாய் மரிக்கவும் கூட அவன் ஆவியில் பெலனடைந்தான்

தேவனுடைய பிள்ளையே, உன்னதத்திலிருந்து வரும் பெலத்தால் தரிப்பிக்கப்படுங்கள் பரிசுத்தாவியின் அபி ஷேகத்தைப் பெற்றுக் கொள்ளுங்கள். அப்பொழுதுதான் ஒரு பெலனுள்ள கிறிஸ்தவ ஜீவியம் செய்ய முடியும்! பாவத்தை மேற்கொள்ளுகிற பெலன் உங்களுக்குகிடைக்கும்.

பரிசுத்த ஆவியால் எப்பொழுதும் நிறப்பப்பட்டுக் கொண்டேயிருங்கள்! பெலத்தின்மேல் பெலன் அடைவீர்கள்.

நீங்கள் இயேசுவுக்குத் தேவை! பெரிய காரியங்களை உங்களிடம் அவர் எதிர்பார்க்கிறுர்.

எனவே பெலனடைவாயாக! இப்பொழுதே பெலன டைவாயாக!

அத்தியாயம் 7

பலவீனத்தில் உண்டாகும் பெலன்!

ஒவ்வொரு பலவீனமும் தேவ பெலத்தைப் பெற்றுக் கொள்ள வழி செய்யும் வாய்க்காலாக இருக்கிறது!

நீ பலவீனமாய் இருந்தால் பாக்கியவான்; தேவபெலன் உன்னில் பரிபூரணமாக விளங்கும்!

பவுல் அப்போஸ்தலனுக்கு ஒரு பலவீனம் இருந்தது! ''அது என்னைவிட்டு நீங்கும்படி மூன்று தரம் கர்த்தரிடத்தில் வேண்டிக் கொண்டேன். அதற்கு அவர் என் கிருபை உனக்குப் போதும், பலவீனத்தில் என் பலம் பூரணமாய் விளங்கும் என்றார், ஆகையால் கிறிஸ்துவின் வல்லமை என்னில் தங்கும்படி என் பலவீனங்களைக் குறித்து நான் மிகவும் சந்தோஷமாய் மேன்மை பாராட்டுவேன். அந்தப்படியே நான் பலவீனமாய் இருக்கும்போதே பலமுள்ளவனாய் இருக்கிறேன்'' (II கொரி 12:8-10).

அதனால்தான் பழைய ஏற்பாட்டு விசுவாச வீரர்கள் எல்லாம் பலவீனத்தில் பெலன் கொண்டவர்கள் என்று எபி 11:34-ல் வாசிக்கிறோம்!

தேவனுடைய பிள்ளையே, உனக்கு இருக்கும் பெலவீனங்களையே மீண்டும்மீண்டும் நினைத்து துக்கப்படுகிறாயோ? சோர்ந்து போய்விட்டாயோ? வேண்டாம்!!

பலமுள்ளவர்களை வெட்கப்படுத்தும்படி தேவன் உலகத்தில் பலவீனமானவைகளைத் தெரிந்து கொண்டார் (I கொரி. 1:27).

ஒருவனும் தன்னைக் குறித்து மேன்மை பாராட்டாத படிக்கு பலவீனமுள்ளவைகளையே, பெலமுள்ளவர்களாக மாற்றி அவர் உபயோகிக்கிறார்!

கர்லான் பாப்பூ என்ற அருமையான தேவ ஊழியர் கம்யூனிஸ்ட் தேசத்திலே சிறைபிடிக்கப்பட்டார். அவர் மிகுந்த வேதனைக்குள்ளாக கடந்து செல்ல வேண்டிய தாயிற்று.

முதலாவது அவரது இரண்டு கைகளையும் கட்டி, ஒரு வெண் சுவரையே பார்த்துக்கொண்டு நிற்கும்படி உத்திர விட்டனர். கண்கள் மூடக்கூடாது; கொஞ்சமும் அசை யவோ திரும்பவோகூடாது! உணவின்றி, குடிக்க நீரின்றி இரவு பகலாக கண்களை மூடாமல் நின்று கொண்டேயிருந் தார்! இருபது நாட்கள் உருண்டன. கண்கள் வீங்கி மகா எரிச்சல் கொடுத்தது! அரைப்படி மிளகாயை அரைத்துக் கண்களுக்குள் பூசிவிட்டால் எப்படியிருக்கும்? கால்களும் வீங்கி மரத்துப்போய் விட்டன!

இன்னும் துன்பங்களும், துயரங்களும் தொடர்ந்தன! ஆனாலும் அவர் வாயில் முறுமுறுப்பில்லை. கிறிஸ்துவுக்காக பொறுமையோடு சகித்துவந்தார்!

ஒருநாள் அவரை அடித்து விசாரிப்பதற்காக ஒரு அறைக்குள் இழுத்துச் சென்றார்கள். அங்கே அவரை விசாரிக்க உட்கார்ந்திருந்தவனோ மகா முரடனும், தடியனு மான ஒரு போலீஸ் அதிகாரி! அவனுடைய கைகளெல் லாம் முறுக்கேறி இரும்புத் தூண்போல இருந்தது! அவன் முகத் தோற்றமோ; விவரிக்க முடியாத அளவு கொடூரமாய் இருந்தது!

எலும்புக் கூடாக இருந்த தேவனுடைய போதகருக்கு அந்தப் போலீஸ் அதிகாரியைப் பார்க்கக்கூட தைரியம் வர வில்லை!! சில வினாடி நேரத்திற்குள் தனது பற்கள், நாடி எலும்புகளெல்லாம் தனித்தனியாக துண்டுதுண்டாக சிதறும் என்று பயந்து நின்று கொண்டிருந்தார்!

போதகரை முகத்தில் குத்தும்படி அதிகாரி கையை ஓங்கினான்! போதகரோ தன்னை பெலப்படுத்தும் கிறிஸ்து விடம் அடைக்கலம் தேடுவதைத் தவிர, வேறு வழியில்லை! அப்பொழுது திடீரென்று மறு வினாடி—

போதகர் தன்னையாரோ மூடியிருப்பதுபோல் உணர்ந்தார்! வேறு யாருமில்லை; உயிர்த்தெழுந்த இயேசு கிறிஸ்துதான்! போதகரின் சரீரத்தை முழுவதுமாய்மூடி, அந்த போலீஸ் அதிகாரி கொடுத்த அடியெல்லாவற்றையும் தானே வாங்கிக் கொண்டார்! போலீஸ் அதிகாரியின் கரங்களே வலித்ததே ஒழிய அந்தப் போதகருக்கு சிறிதும் வலியில்லை; காயமில்லை.

திகிலோடு அந்த அதிகாரி அடிப்பதை நிறுத்திவிட்டார்! அன்று இரண்டாயிரம் ஆண்டுகளுக்குமுன் சவுக்கடிகளை பொறுமையோடு சகித்த தேவன், இன்றைக்கும் தம்முடைய பிள்ளைகளுக்காக தாமும் சேர்ந்து பாடனுபவித்துக் கொண்டிருக்கிறார்! அவர்களுடைய எல்லா நெருக்கத்திலும் அவர் நெருக்கப்பட்டார் (ஏசா. 63:9).

உன் பெலவீனங்களையெல்லாம் அவர் ஏற்றுக்கொண்டிருக்கிறார்! மெய்யாகவே அவர் நம்முடைய பாடுகளை ஏற்றுக்கொண்டு நம்முடைய துக்கங்களைச் சுமந்தார்: நாமோ அவர் தேவனால் அடிபட்டு வாதிக்கப்பட்டு, சிறுமைப்பட்டவரென்று எண்ணினோம்!

அவர் நெருக்கப்பட்டும் ஒடுக்கப்பட்டும் இருந்தார். ஆனாலும் தம்முடைய வாயை அவர் திறக்கவில்லை; அடிக்கப்படுப்படி கொண்டுபோகப்படுகிற ஒரு ஆட்டுக்குட்டியைப் போலவும், தன்னை மயிர் கத்திரிக்கிறவனுக்கு முன்பாக சத்தமிடாதிருக்கிற ஆட்டைப் போலவும் அவர் தம்முடைய வாயைத் திறவாதிருந்தார். இடுக்கணிலும், நியாயத் தீர்ப்பிலுமிருந்து அவர் எடுக்கப்பட்டார் (ஏசாயா 53ம் அதிகாரம்).

ஆ! இயேசு கிறிஸ்து நம்மீது வைத்த அன்பின் நிமித்தம் எவ்வளவு பாடுகளை மகிழ்ச்சியோடு சகித்தார்!

நம்மை பெலப்படுத்தும்படியாக நமது பெலவீனங்களையெல்லாம் எவ்வளவு பொறுமையோடு சுமந்தார்!

நம்மை விசுவாச வீரராக்கும்படி தன்னைத்தானே மரண பரியந்தம் தாழ்த்தி தன்னை மரணத்துக்கென்று எவ்வளவு உற்சாகமாய் ஒப்புக்கொடுத்தார்.

உன்னை பெலப்படுத்தும்படியாக அவர் சிந்தின இரத்தத்தின் ஆறு, உனக்காக இன்றும் ஓடிக் கொண்டிருக்கிறது!

சிலுவையைப் பற்றிய உபதேசம் கெட்டுப் போகிறவர்களுக்குப் பைத்தியமாயிருக்கிறது இரட்சிக்கப்படுகிற நமக்கோ தேவ பெலனாயிருக்கிறது அல்லேலூயா! சிலுவை நமக்கு தேவ பெலன்!

சத்துருவின் தலையை நசுக்க தேவன் நமக்குக் கொடுத்திருக்கும் தேவ பெலன்! அந்தகார சத்திகளின் அரண்களை நொறுக்கும் தேவ பெலன்!

அவரது மகாபெலன் வெளிப்படும் கல்வாரியை நோக்கிப்பார்! உன்னை பெலப்படுத்தும் தேவபெலன் அங்கிருந்தல்லவா இறங்கி வருகிறது! ஆ எவ்வளவு அன்பு! எவ்வளவு பெலன்!!

ஊற்றாய் பொங்கிவரும் தேவபெலத்தை விசுவாசத்தோடு பெற்று நீயும் வல்லமையாய் அவரிடம் பெலப்படு!

அத்தியாயம் 8

கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்?

1. அன்று மகாபெரிய பாவம் இஸ்ரேலுக்குள் புகுந்த நேரம் அது! அவர்கள் தேவனை அலட்சியம் பண்ணி, பொன்னினால் தங்களுக்கு தெய்வங்களை உண்டாக்கி ஆரவாரமாய்ப் பாடினார்கள்; நடனமாய் ஆடினார்கள்! மோசே கண்டபோது தேவவைராக்கியமும், கோபமும்கொண்டான் பாளையத்தின் வாசலில் நின்று. ''கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? என்று சத்தமிட்டான்! லேவியின் புத்திரர் கர்த்தருடைய பட்சத்தில் நிற்கிறவர்களாக அவனிடத்தில் கூடிவந்தார்கள் (யாத். 32:26).

இன்று அதைவிட மகா பாதகங்கள் தேசத்தில் தலைவிரித்தாடுகின்றன! விக்ரகங்களின் ஆதிக்கங்கள் பெருகுகின்றன! சபரிமலை சென்ற பக்தர்களின் எண்ணிக்கை 4 லட்சம்! அமெரிக்காவிலும் இங்கிலாந்திலும் இந்துக்கோவில்கள்! தேவன் இல்லை என்ற கொள்கை உலகில் மூன்றில் ஒரு பங்கை விழுங்கி விட்டது! கிறிஸ்தவ மதமோ இன்று வியாபாரப் பொருளாக மாறி வருகிறது! உலகத்தின் பின்னும், பணத்தின் பின்னும், கட்சிகளின் பின்னும் செல்பவர் அநேகர்! அநேகர்!! கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்? உன் நிலை என்ன?

2. அன்று கர்த்தருடைய உக்ரமான கோபத்தின் எரிச்சல் இஸ்ரவேல் புத்திரர் மேல் மூண்டது! இஸ்ரவேல் சித்தீமிலே தங்கியிருக்கையில் ஜனங்கள் மோவாபின்

குமாரத்திகளோடே வேசித்தனம் பண்ணத் தொடங்கினார்கள். பினகாஸ் எழுந்தான்; தேவனுக்காய் பக்தி வைராக்கியம் கொண்டான். ஈட்டியை எடுத்து வேசித்தனம் செய்த இஸ்ரவேல் மனிதனையும், மோவாபிய ஸ்திரியையும் ஈட்டி உருவிப்போகக் குத்திப் போட்டான். தேவன் அவனுக்கு தன் சமாதானத்தின் உடன்படிக்கையைக் கட்டளையிட்டார் (எண். 25:11).

இன்று எங்கு பார்த்தாலும் வேதப் புரட்டாகிய வேசித்தனம், கள்ளப் போதகங்களாகிய விபசாரம்! உலகத்தையும் தேவனையும் மூடிச்சுப் போடும் நவயுக சபைகள் எத்தனை! வேத மொழிபெயர்ப்பு என்ற போர்வையில் இயேசுவை தூதன் ஆக்குவதும், தீர்க்கதரிசிதான் என்பதும், அவர் பூரண மனிதன் என்பதுவான கிண்டல்கள் எத்தனை! பிசாசின் ஆதிக்கத்தில் மூழ்கியிருக்கும் வேதக் கல்லூரிகள் எத்தனை! ஐயோ, கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார்?

3. அன்று கர்த்தருடைய ஊழியக்காரர்களாகிய தீர்க்கதரிசிகளின் இரத்தத்தை யேசேபேல் சிந்திக்கொண்டிருந்தாள். யெகூ எழுந்தான். ''என் பட்சத்தில் இருக்கிறது யார்? யார்?'' என்று கேட்டான். இரண்டு மூன்று பிரதானிகள் அவனை எட்டிப் பார்த்தார்கள். அப்பொழுது அவன்; அவளைக் கீழே தள்ளுங்கள் என்றான். அவளைக் கீழே தள்ளினதால் அவளுடைய இரத்தம் சுவரிலும் குதிரைகளிலும் தெறித்தது! (II இராஜா 9:32-33).

இன்று ஆயிரம் ஆயிரம் கிறிஸ்தவப் போதகர்கள் விசுவாசிகள் இரும்புத்திரை தேசங்களில் இரத்தசாட்சியாய் மரித்துக் கொண்டிருக்கிறார்கள்! சித்திரவதை செய்யப்படுகிறார்கள் ஆலயங்கள் சினிமாச் சாலைகளாகவும், கழிவறைகளாகவும் (Latrine) ஆக்கப்பட்டு வருகிறது எழுபது தேசங்களில் 600 லட்சம் கம்யூனிஸ்டுகள் இன்று தேவனுக்கு விரோதமாய் கிரியை செய்து வருகிறார்கள்! ஒரு பக்கம்

கிறிஸ்தவர்களின் இரத்தம் ஆருக ஓடிக்கொண்டிருக்கிறது! மறுபக்கத்தில் கிறிஸ்தவர்கள் உண்டு, உறங்கி, உல்லாசமாய் சுகபோகமாய் வாழ்ந்து வருகிருர்கள்! கர்த்தருடைய பட்சத்தில் நிற்பவர்கள் யார்? இப்பொழுதே எழுந்து வைக்கியம் பாராட்டட்டும்!!

4. அன்று பெலிஸ்தியரின் தாணையம் பெத்லகேமிலே இருந்தது. தாவீது பெத்லகேமின் ஒலிமுக வாசலிருக்கிற கிணற்றின் மீது ஆவல் கொண்டு, என் தாகத்திற்குக் கொஞ்சம் தண்ணீர் கொண்டு வருகிறவன் யார் என்ருன். அப்பொழுது மூன்று பேர் பெலிஸ்தியரின் பாளையத்திற்குள் துணிந்து புகுந்துபோய், பெத்லகேமின் ஒலிவ முகவாசலிலே இருக்கிற கிணற்றிலே தண்ணீர் மொண்டு தாவீதினிடத்தில் கொண்டு வந்தார்கள் (I நாளா. 11:16-19).

இந்தப் பகுதியின் பொருள் என்ன? இது இயேசு கிறிஸ்துவின் வாஞ்சையையும் தாகத்தையும் வெளிப்படுத்துகிறது!

16ஆம் வசனத்தில் பெலிஸ்தியரின் தாணையம் பெத்லேகேமில் இருந்தது என்று வாசிக்கிரேம். பெத்லேகேம் என்பது இயேசு பிறக்கப்போகும் இடம்! இரட்சிப்பை உலகத்திற்குக் கொடுக்க இயேசு உதிக்கப்போகும் இடம்! ஆனல் அந்த இடம் பெலிஸ்தியரின் கையில் இருக்கிறது! உலகம் முழுவதும் பொல்லாங்களுக்குள் கிடக்கிறது என்று அறிந்திருக்கிரேம். இதை I யோவான் 5:19ல் நாம் வாசிக்கிரேம்.

தாவீதுக்குத் தாகம் எடுத்தது; தண்ணீர் வேண்டும் என்று மாத்திரம் கேட்கவில்லை! ''தாவீது பெத்லகேமின் ஒலிமுக வாசலிலிருக்கிற கிணற்றின் தண்ணீர்மேல் ஆவல் கொண்டு'' என்று வாசிக்கிரேம்! எத்தனையோ கிணறுகள், குளங்கள் இருக்கும்போது, பெலிஸ்தியரின் தாணயம் இருக்கிற ஒரு கிணற்றின்மீது அவனுக்கு ஆவல் எழ வேண்டிய அவசியம் என்ன?

ஆ! தாவீதின் தூரதிருஷ்டியுள்ள தீர்க்கத்தரிசனக் கண்கள் நமக்கு இருந்தால் நலமாயிருக்கும்! உலகத்திலுள்ள மக்கள் யாவரின் ஆத்தும தாகம் தீர்க்கும்படியாய் பெத்லகேமில் பிறந்த இயேசு கிறிஸ்துவே அந்தக் கிணறு! சாதாரணக் கிணற்றின் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கு மறுபடியும் தாகமுண்டாகும்; ஆனால் இயேசு கிறிஸ்து கொடுக்கும் தண்ணீரைக் குடிக்கிறவனுக்கோ ஒருக்காலமும் தாகமுண்டாகாது! அது அவனுக்குள்ளே நித்திய ஜீவகாலமாய் ஊறுகிற நீரூற்றாயிருக்கும்! அந்தத் தண்ணீர் இரட்சிப்புக்குள் வழிநடத்தும், பரிசுத்தாவியை அடைய கொண்டு செல்லும், பூரணத்திற்குள் அழைத்துப் போகும்! தாவீதின் தாகமெல்லாம் அந்த பெத்லகேம் கிணற்றின் தண்ணீர்மேல் இருந்தது! ''வறண்டதும் விடாய்த்ததும் தண்ணீரற்றதுமான நிலத்திலே என் ஆத்துமா உம்மேல் தாகமாயிருக்கிவது'' (சங். 63:1) என்று வாஞ்சித்துக் கதறினார்!

''அப்பொழுது மூன்றுபேர் பெலிஸ்தியரின் பாளையத்திற்குள் துணிந்து புகுந்துபோய்'' என்று வாசிக்கிறோம். மூன்றுபேர் என்பது ஆவி ஆத்துமா சரீரத்தைக் காட்டுகிறது. மூன்றையும் முற்றிலும் கல்வாரி பலிபீடத்தில் சமர்ப்பித்து புறப்படுகிறவனே ஆத்துமாக்களை பொல்லாங்கானவனிடமிருந்து மீட்கமுடியும்.

ஆத்துமாக்கள்மீது தாகமும் வாஞ்சையும் உள்ள நம் சிலுவையிலிருந்து ''தாகமாயிருக்கிறேன்'' என்று கதறினாரே! தாவீதின் தாகத்தைத் தீர்க்க மூன்றுபேர் புறப்பட்டுச் சென்றார்கள். ஆனால் இயேசுவுக்கோ யாருமில்லை! அன்று சிலுவையில் இயேசு தாகமுடையவராகவே ஜீவனைக் கொடுத்தார். திரளான தண்ணீர்கள் நேசத்தை அவித்துப் போடமாட்டாது!

தாகமுள்ளவராய் தமது இரத்தத்தைச் சிந்தினார்; மரித்தார்! ஆகவே இரத்தத்தால் கழுவப்படுகிறவர்களுக்கு

அதே தாகமுண்டாகவேண்டும் ஆத்துமாக்கள்மீது! தாவீ தின் மூன்று பெலசாலிகளைப்போல உன் ஆவி ஆத்தும சரீரத்தை தேவ ஊழியத்திற்காக, தாகத்தோடு மரித்த உன் நேசரின் கல்வாரி பாதப்பீடத்தில் சமர்ப்பித்துவிடு! அப்பொழுது பெலிஸ்தியரின் பாளையத்திற்குள்—பிசாசான வனின் அந்தகாரக் கோட்டைக்குள் துணிந்து புகுந்துபோக நீ பெலனடைவாய்! அநேக ஆத்துமாக்களை அழிவினின்று மீட்பாய்! உன் தேவனின் தாகத்தைத் தீர்ப்பாய்!

அந்த மூன்று பெலசாலிகள் கொண்டுவந்த தண்ணீரை தாவீது தண்ணீராகக் காணவில்லை; மிகுந்த தியாகமாகக் குடிப்பேனே என்று எண்ணி, அதைக் கர்த்தருக்கென்று ஊற்றிப்போட்டான்.

கிறிஸ்தவம் தியாகத்தில் அடிக்கல் நாட்டப்பட்டது. மூலைக்கல்லாகிய கிறிஸ்து தன்னை மூலைக்கல்லாக்கும்படி முழு இரத்தத்தையும் ஊற்றினார் சீஷர்கள் சுவிசேஷம் பரவும்படி பல தேசங்களுக்குச் சென்று தங்களை பானபலியாக வார்த்து அந்த மூலைக்கல்லின்மேல் கட்டப்பட்டார்கள். எனவே நீ கிறிஸ்தவத்தில் இருப்பாயானால், இதை உன் சுயநலனுக்காக விளம்பரத்திற்காக, வியாபாரப் பொருளாக்காதே! தாவீது கர்த்தருக்கென்று ஊற்றிப்போட்டு பிரதிஷ்டை செய்தான்!

தாகமாயிருக்கிறேன் என்று கிறிஸ்து கொல்கதா மேட்டில் கதறிய அந்தக் கூக்குரல் மலைகளிலும் பள்ளத் தாக்குகளிலும் எதிரொலித்துக் காற்றில் கலந்து, காலச் சூழலைக் கழித்துக் கடந்து, இன்று உன் காதில் எட்டியிருக் கிறது! உன் நேசரின் தாகத்தைத் தீர்ப்பாயா? அவரது கண்ணீரைத் துடைப்பாயா?

இன்று உலகம் பொல்லாங்கானவனுக்குள் கிடக்கிறது! கிறிஸ்துவின் தாகமோ தீரவில்லை. ஆவி, ஆத்துமா, சரீரத்தை அர்ப்பணித்து, இரட்சிப்பின் சுவிசேஷத்தை அறிவிக்கச் செல்பவர்கள் எத்தனை பேர்! தாகமாயிருக்கிறேன் என்று அவர் கல்வாரியில் கதறி, இன்று இரண்டாயிரம் ஆண்டுகள்

ஆன பிறகும் கூட அவர் தாகம் தீரவில்லையே! கோடிக்கணக்கான பேர் இன்னும் இரட்சிக்கப்படவில்லையே! இருளில் அலைந்து அழிகிருர்களே! கர்த்தருடைய பட்சத்தில்நிற்பவர்கள் யார்?

5. அன்று உசியா மரணமடைந்த வருஷம் அது! மிகுந்த பாரத்தோடும் தான் ஓர் அசுத்த உதடுகளுள்ள மனுஷன் என்ற பாவ உணர்வோடும் ஏசாயா தீர்க்கதரிசி தேவ ஆலயத்திற்குள் இருந்தார்! அங்கே அவருக்கு தேவ தரிசனம் வெளியாயிற்று. ''யாரை நான் அனுப்புவேன்; யார் என் காரியமாகப் பேசுவான் என்று உரைக்கிற ஆண்டவருடைய சத்தத்தைக் கேட்டார்! ''இதோ அடியேன் இருக்கிறேன்; என்னை அனுப்பும்'' என்று ஒப்புக்கொடுத்தார் (ஏசாயா, 6:8) மாபெரும் தீர்க்கதரிசியாஞர்!

இன்று ஆண்டவருடைய அதே சத்தம் எதிரொலித்துக் கொண்டேயிருக்கிறது! தங்களின் சுயசித்தத்தின்படியே அலைந்து திரிகிறவர்களும், தங்களையே விளம்பரப்படுத்திக் கொள்கிறவர்களும் நிறைந்து விட்ட கிறிஸ்தவ சமுதாயத்தில் கர்த்தரின் பூரண சித்தம் நிறைவேற அனுப்புமிடமெல்லாம் செல்லும் கீழ்ப்படிதலுள்ளவர்கள் எத்தனை பேர்? அறுப்பு மிகுதி! வேலையாட்களோ கொஞ்சம் பேர்! ''அவர்'' முகம் துக்கத்தால் நிறைந்திருக்கிறது நீயாவது அவரை மகிழ்ச்சிபடுத்த மாட்டாயா? கர்த்தருடைய பட்சத்தில் நிற்கிறவர்கள் யார்?

6. அன்று பூமியில் பாவம் பிரவேசித்தது; மரணம் சரீரத்தையும் ஆத்துமாவையும் ஆண்டு கொண்டது. அப்பொழுது குமாரஞகிய தேவனே, தன்னை அடிக்கப்படும் ஆட்டுக்குட்டியாக ஒப்புக்கொடுத்தார். ''தேவனே உம்முடைய சித்தத்தின்படி செய்ய இதோ வருகிறேன்'' என்று கூறி ஆயத்தமாக்கப்பட்ட சரீரத்தைக் கொண்டு உலகத்தில் பிரவேசித்தார் (எபி. 10:5.7.) பல பாடுகளையும், நிந்தைகளையும் அவமானங்களையும் அமைதியாய் ஏற்றுக்கொண்டு

பாரச்சிலுவையைச் சுமந்து, தனது சரீரம் பலியிடப்பட்ட மகிழ்ச்சியோடு ஒப்புக்கொடுத்தார்!

இன்று நீ அவருக்கு ஒப்புக்கொடுப்பாயா? அநேகர் அவரை மறுதலித்தாலும், மீண்டும் மீண்டுமாய் சிலுவையிலடித்தாலும், பணத்துக்காக கல்வாரி அன்பை விலை பேசினாலும், நீயாவது அவருடைய பட்சத்தில் உத்தமமாய், உண்மையாய், உறுதியாய் நிற்பாயா? நிற்பாயா? அவர் உன் பட்சத்திலிருக்கிறார் (சங். 56:9 சங். 118:6) உலகத்தின் முடிவு பரியந்தமும் சகல நாட்களிலும் நான் உங்களுடனே கூட இருக்கிறேன் என்று அவர் வாக்குத்தத்தம் செய்யவில்லையா? அந்த தேவனுக்காக ஜீவனைக் கொடுப்பதே உன் வாழ்க்கையின் நோக்கமாக உறுதி எடுத்துக்கொள். ஏதோ காய்ச்சலில், சுகவீனமாக, படுக்கையிலிருந்து பரணமடைய நினைக்காதே! இயேசுவின் சேவையில், ஊழியத்தில் அனுதினமும் சாகும்படி ஒப்புக்கொடுத்து விடு!

7. அன்று கத்தோலிக சபையில் மூடப்பழக்க வழக்கங்கள் நிறைந்து, பாவமன்னிப்புச் சீட்டுகள் விலையாகிய பயங்கரமான நிலையில், மார்ட்டின் லூத்தர் கர்த்தருடைய பட்சத்தில் எழுந்தார்! பிரகாசித்தார்! இந்தியா தேசம் இருளில் மூழ்கிக்கிடப்பதை சகிக்க முடியாத சாது சுந்தர்சிங், இந்தியாவில் இயேசுவின் ஆச்சரியமான ஒளியைக் கொண்டு வரும்படி வைராக்கியம் கொண்டார்! நடந்தே சுவிசேஷம் அறிவித்தார்! பேர்க்கிறிஸ்தவர்களாய் விசுவாசத்தை இழந்திருந்த இருதயத்திற்கு விசுவாசத்தின் வல்லமையை தெளிப்படுத்த ஜார்ஜ்முல்லர் எழுந்தார் விசுவாச வீரர் ஆனார். அந்தந்த நேரங்களில், தேவ வாஞ்சையை அறிந்து தேவமக்கள் தங்கள் ஜீவனைப்பாராது உறுதியாக, தேவ வைராக்கியம் கொண்டனர். தேவனுடைய பட்சத்தில் நின்றனர்! அந்திக்கிறிஸ்துவின் ஆட்சி நெருங்கிவிட்ட இந்த கடைசி விநாடி நேரத்தில் சகோதரனே, சகோதரியே நீ விழித்து எழமாட்டாயா? இயேசுவுக்காய் நிற்கமாட்டாயா?

இன்று காலம் இல்லை. கர்த்தருடைய பட்சத்தில் இருக்கிறவர்கள் யார் யார் என்பதை எக்காளத் தொனி வெளிப்படுத்தும் அவர்கள் ஒரே நிமிடத்தில் மறுரூபமடைந்து மத்திய ஆகாயத்தில் இயேசுக் கிறிஸ்துவுக்கு எதிர்கொண்டு போவார்கள். நித்திய மகிழ்ச்சியடைவார்கள்.

உலகத்தின் பட்சத்தில் இருக்கிறவர்கள். தேவபக்தியின் வேஷம் தரித்து பெலனை மறுதலிக்கிறவர்கள் தங்கள் மார்பில் அடித்துக்கொண்டு அழுவார்கள். முடிவு மகா பயங்கரம். இந்த நிலை நமக்கு வேண்டாம்!

இன்றே இயேசுவின் பட்சத்தில் நிற்க தீர்மானிப்பாயாக! அவர் சீக்கிரமாய் வருகிறார்! ஆமென்!

இயேசுவே வாரும்!

G.B. Sathyanesan, B.A.

அத்தியாயம் 9

பரிசுத்த அக்கினி பற்றி எரியட்டும்!

''பூமியிலே அக்கினியைப் போடவந்தேன்; அது இப்பொழுதே பற்றி எரியவேண்டும் என்று விரும்புகிறேன்'' (லூக். 12:19).

இயேசு கிறிஸ்து பூமிக்கு வந்த நோக்கமும் அவரது அளவற்ற தாகமும் வாஞ்சையும் இந்த வசனத்தில் வெளியாகிறது.

''பூமியிலே பரிசுத்த அக்கினி பற்றி எரியவேண்டும்!''

என் ஜனங்களிடம் பாவம் நெருங்க முடியாதபடி அவர்கள் அக்கினியாய் ஜீவிக்கவேண்டும்!

அவர்கள் நீதி அக்கினி ஜுவாலைப் போல் பிரகாசிக்க வேண்டும்.

அவர்களிலுள்ள எழுப்புதலால் அநேக ஜாதிகள் ஆச்சரியமான ஒளியினிடத்திற்கு ஓடி வரவேண்டும்!

பரிசுத்த ஆவியினாலும் அக்கினியாலும் ஞானஸ்நானம் பண்ணப்படவேண்டும்!

ஆவிக்குரிய வரங்கள் திருச்சபையிலே பொழிந்தருளப்பட்டு, குமாரரும் குமாரத்திகளும் தீர்க்கதரிசனம் சொல்லவும், மூப்பர் சொப்பனங்களையும் வாலிபர் தரிசனங்களையும் காணவேண்டும்.

பூமி முழுவதும் பரலோக மகிமையால் நிறைந்திருக்க வேண்டும்!

'பூமியிலே அக்கினியைப் போடவந்தேன்' என்று உனக்காக ஜீவனைக் கொடுத்தவர் கதறுகிறார்; வாஞ்சிக்கிறார்; வைராக்கியம் கொண்டிருக்கிறார்!

தேவனுடைய பிள்ளையே, உன் ஜெபம் என்ன? உன் மன்றாட்டு என்ன? ''தேவனே! உமது வருகைக்காக எதிர் பார்த்துக் கொண்டு இருக்கும் இந்த கடைசி வினாடி நேரத்திலே, எனது குளிர்ந்த நிலையை மாற்றி உமக்காக என்னை அக்கினி ஜுவாலையாய் பிரகாசிக்கப் பண்ணமாட்டீரா? எங்கள் திருச்சபைகளிலே ஓர் உயிர்மீட்சியும் பெரிய எழுப்புதலும் ஏற்படுத்தும் ஆண்டவரே! பரலோக மகிழ்ச்சியை பூமிக்கு இழுக்கும் இலட்சக்கணக்கான ஜெப வீரரை எங்கள் தேசத்தில் எழுப்பித்தாரும்'' என்று விடாமல் மன்றாடுவோம். இயேசு ராஜா வருகிறார்; நாம் அக்கினி ஜுவாலையாய் இருந்து நம்மைக் காத்துக் கொள்ளுவோம்.

முன்மாரியையும், பின்மாரியையும் வாக்குத்தத்தம் பண்ணின தேவன் (யோவேல் 2:25), கிறிஸ்துவின் உயிர்த்தெழுதலுக்குப்பின் ஒரு பெரிய முன்மாரியைக் கட்டளையிட்டார். ஆதித் திருச்சபையின் நாட்களில் அக்கினிமயமான நாவுகள் போல பிரிந்திருக்கும் நாவுகள் அவர்களுக்கு காணப்பட்டு, அவர்கள் ஒவ்வொருவர் மேலும்வந்து அமர்ந்தது. பரிசுத்தாவியால் நிரப்பப்பட்டு உயிர்த்தெழுந்த வல்லமையால் தைரியமாகப் பிரசங்கித்தார்கள்! ஆயிரம் ஆயிரம் மக்கள் அனுதினமும் சபையில் சேர்க்கப்பட்டார்கள். ஜெப வீரர்களும், இரத்த சாட்சிகளும், இயேசுவுக்காக படைபடையாய் புறப்பட்டார்கள்; தேசத்தைக் கலக்கினார்கள்; அக்கினியாய் பிரகாசித்தார்கள்; ஓர் எழுப்புதல் அக்கினி நதி கரை புரண்டு ஓடியது! அதுதான் முன்மாரி

ஆதித்திருச்சபையின் காலத்திற்குப்பின் திருச்சபையின் வரலாற்றை ஓர் இருண்ட காலம் சூழ்ந்து கொண்டது. மார்ட்டின் லுத்தர் காலம் வரை அந்த இருள் நீடித்தது!

ஆனால் இன்று நமது நாள் பின்மாரியின் நாள்! மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்றுவேன் என்று தேவன் சொன்ன வாக்குத்தத்தம் நிறைவேறும் கடைசி நாள்! நமது தீவெட்டிகளில் எண்ணெயோடுகூட மணவாளனுக்காக ஆயத்தப்பட வேண்டிய எதிர்பார்ப்பின் நாள்! இப்பொழுதே பற்றி எரிய வேண்டும் என்று விரும்புகிறேன் என்று வாஞ்சித்த தேவன் வைராக்கியம் கொண்டு கிரியை செய்கிற நாள்! அவர் பின்மாரியை ஊற்றிக் கொண்டிருக்கிறார்! தாகமுள்ள பாத்திரங்களை நிரப்பிக் கொண்டிருக்கிறார் ஆமென். ஜெபத்தோடு காத்திருப்போம்! பரலோக அக்கினியை பூமிக்கு இழுக்கும் வழி என்ன?

1. பலிபீடத்தைச் செப்பனிட்டபோது இறங்கின அக்கினி (*1 ராஜா. 18:38*)

வானத்திலிருந்து அக்கினியை இறக்கிய ஜெப வீரன் எலியா. நம்மைப்போல பாடுள்ள மனுஷனாய் இருந்தும் தேவனிடத்திலிருந்து அக்கினியை இறக்கும் வழியை அறிந்திருந்தான்! அவன் செய்தது என்ன? (*1 ராஜா 18:38*)

எலியா சகல ஜனங்களையும் கர்மேல் பர்வதத்தில் கூட்டி கர்த்தருடைய பலிபீடத்தைச் செப்பனிட்டான். கர்த்தருடைய பலிபீடம் தகர்க்கப்பட்ட நிலையில் இருந்ததை அவனால் பொறுத்துக் கொள்ள முடியவில்லை. முதலில் பலிபீடத்தைச் செப்பனிட்ட பிறகே மற்ற காரியங்களைக் கவனிக்கலானான். அந்திப்பலி செலுத்தும் நேரத்தில் கர்த்தரிடத்தில் இருந்து அக்கினி இறங்கியது.

தேவனுடைய பிள்ளையே! உன்னில் ஓர் எழுப்புதல் ஏற்பட வேண்டும் என்று விரும்புகிறாயா? உன் ஆவிக்குரிய ஜீவியத்தில் ஓர் மறுமலர்ச்சியும் ஜெய ஜீவியமும் காண வேண்டும் என்று வாஞ்சிக்கிறாயா? அப்படியானால் தாறுமாறான உன் வாழ்க்கைச் செப்பனிடப்படவேண்டும், தேவனிடம் உடன்படிக்கைச் செய்து மீறி நடந்தவைகள் அறிக்கைச் செய்யப்படவேண்டும்! ஆகையால் நீ இன்ன நிலை

யிலிருந்து விழுந்தாய் என்பதை நினைத்து மனந்திரும்பி ஆதியில் செய்த கிரியைகளைச் செய்வாயாக (வெளி 2:5) என்று கர்த்தர் எச்சரிக்கிறார்!

யாக்கோபும் யோவானும் படகிலே வலைகளைப் பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது, இயேசு கண்டு தமது ஊழியத்திற்கு அழைத்தார் என்று மாற்கு 1:29ல் வாசிக்கிறோம். வலைகளை பழுது பார்த்தார்கள். இயேசு அழைத்தார்! ஆமென்! ஓட்டை வலையில் மீன் தங்காது. பாவமுள்ள ஜீவியத்தில் ஆசீர்வாதம் தங்காது. எனவே உன் ஜீவியத்தைப் பழுது பார்த்து செப்பனிட்டு தேவ அக்கினி உன்னில் இறங்க ஒப்புக் கொடுத்து விடு!

தேவனுக்குப் பிரியமில்லாத எல்லாக் காரியங்களையும் திடமனதோடும் உபவாசத்தோடும் உன்னை விட்டு அகற்று. எலியா, பாகால் தீர்க்கதரிசிகள் நானூறு பேரை வெட்டவில்லையா? உன் ஆத்துமாவாகிய திராட்சைத் தோட்டத்தைக் கெடுக்கிற சிறு நரிகளையும் குள்ள நரிகளையும் உயிரோடு பிடித்து சங்காரம் செய்துவிடு! இயேசு கிறிஸ்துவின் அன்பை விட்டுப் பிரிக்கக் கூடிய எந்த காரியமும் உன் வாழ்க்கையில் இருக்க வேண்டாம்! தேவனே, உமக்கு பிரியமில்லாத எல்லா அசுத்தங்களையும். வீண் வார்த்தைகளையும் உமது அக்கினியால் சுட்டெரித்துவிடும். பாவம் என்னை அணுகாதபடி சோதனை என்னை மேற்கொள்ளாதபடி, என்னை அக்கினி ஜுவாலையாக்கும் என்று கதறி அழுது ஜெபி. அப்பொழுது மகிமையின் தேவனானவர் உன்னை பிரகாசிக்கச் செய்வார். அல்லேலூயா! நீ அனேகம் ஜாதிகளுக்கு ஆசீர்வாதமாய் இருப்பாய்! உன்னில் தேவ அன்பு பொங்கிக்கொண்டிருக்கும்! நீ தேவனுக்காக பெரிய காரியங்களைச் செய்வாய்!

அக்கினியாய் ஜீவித்து, வானத்திலிருந்து அக்கினியை இறக்கிய எலியாவை வரவேற்க அக்கினி ரதமும், அக்கினி குதிரைகளும் இறங்கி வந்தன. எலியா அஞ்சி ஓடவில்லை, அவனிலே பற்றி எரிந்து கொண்டிருந்த பரலோகத்தின் அக்கினி, இறங்கி வந்த அக்கினி ரதத்தைவிடவும் அதிகமா

யிருந்தபடியால் அது அவனை சேதப்படுத்தவில்லை. அவன் சுழல் காற்றிலே பரலோகத்திற்கு ஏறிப்போனான்! (II ராஜா 2 ; 11) மரணத்தைக் காணாதபடிக்கு எடுத்துக் கொள்ளப் பட்டான்; இரண்டாம் வருகையில் அதாவது ரகசிய வருகை யில் எடுத்துக் கொள்ளப்படும் பரிசுத்தவான்களுக்கு, எலியா முன் அடையாளமாக இன்றும் திகழ்கிறான்!

எனவே பலிபீடத்தை இப்பொழுதே செப்பனிடுவோமா? வலைகளை பழுதுபார்ப்போமா?

2. ஜெபம் பண்ணி முடிக்கிறபோது இறங்கின மகிமை யான அக்கினி :-

"சாலமோன் ஜெபம் பண்ணி முடிக்கிற போது அக்கினி வானத்திலிருந்து இறங்கி, சர்வாங்க தகனபலியையும் மற்ற பலிகளையும் பட்சித்தது. கர்த்தருடைய மகிமையும் ஆலயத்தை நிறப்பிற்று. கர்த்தருடைய மகிமை கர்த் தருடைய ஆலயத்தை நிறப்பினதினால், ஆசாரியர்கள் கர்த்தருடைய ஆலயத்துக்குள் பிரவேசிக்கக் கூடாமல் இருந் தது. அக்கினி இறங்குகிறதையும், கர்த்தருடைய மகிமை ஆலயத்தின்மேல் தங்கியிருக்கிறதையும் இஸ்ரவேல் புத்திரர் எல்லோரும் கண்டபோது, தளவரிசைமட்டும் தரையிலே முகங்குப்புறக்குனிந்து பணிந்து, கர்த்தர் நல்லவர் அவர் கிருபை என்றுமுள்ளது என்று சொல்லி அவரை துதித்தார் கள் (II நாளா. 7 : 1-3) ஆ! என்ன மேன்மையான அனுபவம்!

தேவனுடைய பிள்ளையே! உன்னுடைய ஜெபம் அக்கினி யையும் தேவ மகிமையையும் பூமிக்கு இழுக்கும் வல்லமை யுள்ளதாய் இருக்கிறதா? அல்லது வீண் அலப்பு வார்த்தை களால் இருக்கிறதா? கருத்தாய் ஜெபிக்கிறாயா? அல்லது கடமைக்காக ஏதோ ஜெபிக்கிறாயா?

சாலமோன் ஜெபம்பண்ணி முடிக்கையில் ஆலயத்தில் இறங்கின அக்கினியும் தேவமகிமையும் நம்மில் இறங்கட்டும்; ஏனென்றால் நாம் தாம் அவருடைய ஆலயம்.

ஊக்கமான ஜெபத்துக்கு இருக்கும் வல்லமை அணு ஆயுதங்களுக்குக் கூட இல்லை. ஜெபத்தால் கூடாத காரியம் ஒன்றுமில்லை!

இயேசு ஞானஸ்நானம் பெற்று, ஜெபம் பண்ணுகையில் வானம் திறக்கப்பட்டது; பரிசுத்த ஆவியானவர் ரூபங் கொண்டு புறாவைப் போல அவர்மேல் இறங்கினார்'' (லூக். 3:21,22).

மருரூபமலையில் இயேசுவானவர், ''ஜெபம் பண்ணுகையில் அவருடைய முகரூபம் மாறிற்று! அவருடைய வஸ்திரம் வெண்மையாகிப் பிரகாசித்தது'' (லூக். 22:43).

தானியேல் ஜெபம்பண்ணிக் கொண்டிருக்கும் போதே காபிரியேல் தூதன் வேகமாய்ப்பறந்து வந்து அந்திப்பலியின் நேரமாகிய வேளையிலே அவனைத் தொட்டான் தானி 9:21

ஆயிரம் ஆயிரம் உதாரணங்கள் வேதத்தில் நிறைந்திருக்கின்றன! எல்லாம் ஜெபத்தின் வல்லமையையும், ஜெபத்தினால் மாத்திரமே பரிசுத்த அக்கினி கீழே இறங்கும் என்பதையும் திட்டத்தெளிவாய் வெளிக்காட்டுகிறது!

எனவே, விசுவாசியே! கர்த்தர் உன்னை ஆவியாலும் அக்கினியினாலும் நிறப்பும் வரை, உன் தேசத்தில் எழுப்புதல் பின் மாரி ஊற்றப்படும் வரை உன் ஜெபத்தை நிறுத்தாதே! போராடி ஊக்கமாய் மன்றாடு!

1903 ஆம் ஆண்டு வேல்ஸ் தேசத்தில் ஓர் எழுப்புதல் தீ பற்றிப்பிடித்து ஜுவாலித்தது. காரணம், அங்கிருந்த 300 ஜெபக்குழுகளும், ஜெபவீரனான இவான் இராபட்ஸ்மே ஆகும்! ஒரு சிறு ஜெபக் கூட்டத்தில் ஓர் ஏழை சகோதரி, ''இயேசு ராஜா உம்மை என் முழு இருதயத்தோடு நேசிக்கிறேன்'' என்று உண்மையாய் கதறிய வேலையில், மின்சாரம் போன்ற வல்லமை அங்கிருந்த அனைவரையும் தாக்கிற்று எல்லோரும் ஆவியால் நிறப்பட்டார்கள்!

இன்று இருண்டு கிடக்கும் இந்தியா தேசத்தில் அக்கினியைப் போடவேண்டும் என்று தேவன் வாஞ்சிக்கிறார்! கதறி அழுது எழுப்புதலுக்காகவும் தேசத்திற்காகவும் ஜெபிக்கும் ஜெப வீரரே இன்று நமக்குத் தேவை! தேவனுடைய பிள்ளையே, எழுந்து திறப்பின் வாசலில் உறுதியோடு, நிற்பாயா? பரலோக அக்கினியை ஜெபத்தினால் இறக்குவாயா?

3. ஆவி ஆத்துமா, சரீரத்தை ஒப்புக் கொடுக்கும் போது இறங்கும அக்கினி :-

ஆபிரகாம் வானத்திலியிருந்து அக்கினி ஜுவாலையை இறக்கக்கூடிய விசுவாச வீரனாக இருந்தான். அவன் கடைபிடித்த தேவ இரகசியம் என்ன?

மூன்று வயது கிடாரியையும், மூன்று வயது வெள்ளாட்டையும் மூன்று வயது ஆட்டுக்கடாவையும் துண்டித்து துண்டங்களை ஒன்றுக்கொன்று எதிராக வைத்தான்; பறவைகள் அந்த உடல்களின் மேல் இறங்கின; அவைகளை ஆபிராம் துரத்தினான்... சூரியன் அஸ்தமித்துக்காரிருள் உண்டான பின்பு, இதோ புகைகிற சூளையும், அந்தத் துண்டங்களின் நடுவே கடந்து போகிற ஜுவாலையும் தோன்றின'' (ஆதி. 15:9,11,17).

மூன்று வயது என்று மூன்று முறை வருவது ஆவி, ஆத்துமா, சரீரத்தைக் குறிக்கும், ஆவி, ஆத்துமா, சரீரத்தை கர்த்தருடைய சமூகத்தில் தாழ்த்தி நொறுங்குண்ட இருதயத்தோடு கண்ணீரோடு மிகுந்த பாரத்தோடு ஒப்புக் கொடுக்கவேண்டும்.

பறவைகள் இறங்கியபோது ஆபிரகாம் அவைகளைத் துரத்தினான். இது எதைக்காட்டுகிறது? வீண் சிந்தனைகளையும், அதைரியத்தையும் அவிசுவாசித்தையும் கொண்டு வரும் பிசாசைத் துரத்தி ஒருமனதோடு, எதிர்பார்ப்போடு காத்திருக்கவேண்டும் என்பதைக் காட்டுகிறது!

எனவே அக்கினி இறங்க, நொறுங்குண்ட இருதயத்தோடு ஒருமனப்பட்ட உள்ளத்தோடு, ஆவி ஆத்தும சரீரத்தைக் கல்வாரி பலிபீடத்தில் படைக்கவேண்டும்! அப்பொழுது வல்லமையான அக்கினி நம் மத்தியில் இறங்கும்!!

சங்கீதக்காரன் சொல்லும்போது, "தேவனுக்கேற்கும் பலிகள் நொறுங்குண்ட ஆவிதான்; தேவனே, நொறுங்குண்டதும், நருங்குண்டதுமான இருதயத்தை நீர் புறக்கணியீர்' என்று சொல்லி, தன்னைத் தாழ்த்தி ஒப்புக்கொடுக்கிறதைக் காண்கிறோம் (சங். 51:17).

தனது அனுபவத்தை இவான்ஸ் இவ்விதமாய் எழுதியிருக்கிறார், "ஒரு கூட்டத்தில் கலந்து கொள்வதற்காக நான் குதிரை மீது ஏறிச் சென்று கொண்டிருந்தேன்; வழியில் ஆவியானவர், என் ஆத்துமா "குளிர்ந்து" போயிருக்கிறதைச் சுட்டிக்காட்டி உணர்த்தினர்.

அந்த இடத்திலேயே குதிரையை விட்டு கீழே குதித்தேன்; தனித்த இடத்திற்கு நடந்து சென்று என்னை தேவ சமூகத்தில் நிறுத்தி என்னை ஆராய்ந்து பார்த்தேன்; குறுக்கும் நெடுக்கும் நடந்து நடந்து வேதனையோடும், மிகுந்த பாரத்தோடும், கண்ணீரோடும் ஏறத்தாழ மூன்று மணி நேரங்கள் காத்திருந்தேன்! கர்த்தரின் இரக்கமுள்ள, மன்னிக்கிற இனிமையான அன்பு என்மேல் நிழலிடும் வரை என் ஜெபத்தை நிறுத்தவில்லை!

அந்த நிமிடமே, கர்த்தர் என்னை புதிய அபிஷேகத்தால் நிறப்பினர்! அதன் பின்பே நான் சாலைக்குப்போய், என் குதிரையைக் கண்டு மீண்டும் பிரயாணப்பட்டேன் மறு நாட்காலை! மலையின் அடிவாரத்தில் கூடியிருந்க விசுவாசிகளின் மத்தியில் தேவனுடைய செய்தியை வல்லமையோடு பிரசங்கித்தேன்; அந்த நாளில் மாபெரும் எழுப்புதல் அக்கினி இறங்கி வேல்ஸ் தேசத்தையே நிரப்பிற்று.

ஆம்! நொறுங்குண்ட இருதயத்தோடு கல்வாரியில் கிறிஸ்துவின் பாதத்தண்டை பலியாக ஒப்புக் கொடுக்கு

எந்த ஆத்துமாவையும் அவர் தமது வல்லமையாலும், பரிசுத்த ஆவியாலும், அக்கினியாலும் அபிஷேகிப்பார். ஆமென்!

தேவனுடைய பிள்ளையே; உன் ஆவி, ஆத்துமா சரீரத்தை தேவனுக்கென்று அக்கினி இறங்க ஒப்புக்கொடுத்திருக்கிறாயா?

4. இயேசு கிறிஸ்துவின் நாமத்தில் கேட்கும்போது இறங்கும் அக்கினி:

''என் நாமத்தினாலே நீங்கள் எதைக் கேட்டாலும் அதை நான் செய்வேன்'' (யோவான் 14;14).

எவ்வளவு பெரிய வாக்குத்தத்தம்! எவ்வளவு பெரிய ஆசீர்வாதம்! அல்லேலூயா!

இயேசுக்கிறிஸ்துவின் நாமம் மனுஷனுக்குக் கிடைக்கப் பெற்ற விலைமதிக்க முடியாத பொக்கிஷம்!

பழைய ஏற்பாட்டின் பரிசுத்தவான்களுக்கு அவர் நாமம் மறைமுகமாகத் தரப்பட்டது. கிறிஸ்து கன்மலையாக இஸ்ர வேல் ஜனங்களுக்கு வனாந்தரத்தில் காட்சி அளித்தார்! அவரது நாமம் 'அதிசயமாகக் காட்சியளித்தது!

நியாயாதிபதியின் புத்தகத்தில் மனோவா, தன்னிடம் வந்த கர்த்தருடைய தூதனானவரிடம், ''நாங்கள் உம்மைக் கனம்பண்ணும்படி உம்முடைய நாமம் என்ன?'' என்று கேட்டான்.

''அது அதிசயம்'' என்ற பதில் கிடைத்தது. மனோவா போய் வெள்ளாட்டுக் குட்டியையும், போஜன பலியையும் கொண்டுவந்து அதைக் கன்மலையின்மேல் கர்த்தருக்குச் செலுத்தினான். அப்பொழுது மனோவாவும் அவன் மனைவியும் பார்த்துக் கொண்டிருக்கையில் ''அதிசயம்'' விளங்கினது.

அக்கினி ஜுவாலை பலிபீடத்திலிருந்து வானத்திற்கு நேராக எழும்புகையில் கர்த்தருடைய தூதனானவர் பலிபீடத்தின் ஜுவாலையிலே ஏறிப்போனார் (நியாதி. 13:19,20).

பாருங்கள்! அக்கினி இறங்கும்படியாக, மனோவா அதிசய நாமமுடையவருக்கு ஓர் பலியை கன்மலையின்மேல் செலுத்தினான். மற்ற பரிசுத்தவான்கள் பலிபீடத்தின்மேல் பலியைச் செலுத்தியிருக்க, மனோவா கன்மலையின்மேல் தன் பலியை செலுத்த காரணம் என்ன?

''அந்தக் கன்மலை கிறிஸ்துவே!'' (I கொரி. 10:4).

''அவர் நாமம் அதிசயமானவர்'' (ஏசா. 9:6)

நமக்காக பலி ஆடாகி, உலகத்தோற்றத்திற்கு முன்னால் அடிக்கப்பட்ட ஆட்டுக்குட்டியானவரின் நாமமாகிய இயேசுக் கிறிஸ்துவின் நாமத்தில் விசுவாசத்தோடு கேட்கும் பொழுது அதிசயமாக அக்கினி இறங்கும்!

எனவே ஜெபிக்கும் போது, ''கடவுளே''; ஆண்டவனே; இறைவனே'' என்று கூப்பிடாமல், நமக்குக் கொடுக்கப் பட்ட வானத்திலும் பூமியிலும் சகல அதிகாரமுடைய இயேசுக்கிறிஸ்துவின் நாமத்தில் ஜெபிப்போம்; மகிமையின் பிதாவானவர் நமது வேண்டுதல்களை நிறைவேற்றுவார்! ஆவியானவர் நம்மை நிறப்புவார். ஆமென்!

5. காத்திருக்கும் போது ஜுவாலிக்கும் அக்கினி:

இயேசுக்கிறிஸ்து பரலோகத்திற்கு எடுத்துக் கொள்ளப் படுமுன் சீஷர்களை நோக்கி ''என் பிதா வாக்குத்தத்தம் பண்ணினதை, இதோ, நான் உங்களுக்கு அனுப்புகிறேன் நீங்களோ உன்னதத்திலிருந்து வரும் பெலனால் தரிப்பிக்கப் படும் வரைக்கும் எருசலேம் நகரத்தில் இருங்கள் என்றார்'' (லூக். 24;49).

''ஆகையால் நீங்கள் எருசலேமை விட்டுப் போகாமல் என்னிடத்தில் கேள்விப்பட்ட பிதாவின் வாக்குத்தத்தம்

நிறைவேறக் காத்திருங்கள் என்றுக் கட்டளையிட்டார்'' (அப். 1:5).

விசுவாசித்த சீஷர்கள் கர்த்தரின் கட்டளைபடியே காத்திருந்தார்கள் என்ன நடந்தது தெரியுமா? அப்போஸ்தலர் 2ம் அதிகாரம் முழுவதையும் முழங்காலில் நின்று வாசித்துப் பாருங்கள்.

''அவர்களெல்லோரும் பரிசுத்த ஆவியினாலே நிரப்பப் பட்டு, ஆவியானவர் தங்களுக்குத் தந்தருளின வரத்தின் படியே வெவ்வேறு பாஷைகளிலே பேசத் தொடங்கினார்கள்'

எழுப்புதல் தீ பற்றிப்பிடித்தது!

மூவாயிரம் பேர் அன்றையத் தினத்தில் சபையில் சேர்க்கப்பட்டார்கள்!

ஜெபம் பண்ணுதலில் உறுதியாய்த் தரித்திருந்தார்கள்!!

அநேக அற்புதங்களும் அடையாளங்களும் செய்யப் பட்டன!!

தேவனுடைய பிள்ளையே! உன் மூலம் ஓர் பெரிய எழுப்புதல் ஏற்படுத்த தேவன் வாஞ்சிக்கிறார்!

ஓர் உயிர் மீட்சியின் அக்கினி, கிராமங்களிலும், பட்டணங்களிலும் கரைபுரண்டு ஓடுமட்டும், கடைசி இந்தியனும், கர்த்தரை அறிந்து கொள்ளுமட்டும் காத்திரு! பெருமூச்சோடு விழித்திரு! விசுவாசத்தின் நம்பிக்கையோடு எதிர்பார்த்திரு! ஜெபத்தில் தரித்திரு!!

''எருசலேமே, உன் மதில்களின் மேல் பகல் முழுதும் இராமுழுதும் ஒருக்காலமும் மவுனமாயிராத ஜாமக்காரரைக் கட்டளையிடுகிறேன். கர்த்தரைப் பிரஸ்தாபம் பண்ணுகிறவர்களே, நீங்கள் அமரிக்கையாயிருக்கலாகாது'' என்று கர்த்தர் ஜெபவீரர்களுக்கு கட்டளை கொடுக்கிறார் (ஏசா. 62;6).

தேவாதி தேவனும், தேசத்தில் ஓர் பின்மாரி மழையைக் கட்டளையிட வைராக்கியங் கொண்டிருக்கிறார்.

"சீயோனினிமித்தமும், எருசலேமினிமித்தமும் நான் மவுனமாயிராமலும், அதன் நீதி பிரகாசத்தைப் போலவும், அதன் இரட்சிப்பு எரிகிற தீவட்டியைப் போலவும் வெளிப்படுமட்டும் அமராமலும் இருப்பேன்" (ஏசா. 62:1).

இன்று தேவன் அமராமல் வைராக்கியம் கொண்டு கிரியை செய்து வருகிறார். "தேவனே நீர் அனுப்பும் எழுப்புதல் அக்கினியில், என்னை தீவட்டியாக, விறகாக பயன்படுத்தும்" என்று கதறுவோம்! பயன்படுவோம்!!

6. வசனத்தைக் கேட்டுக் கொண்டு இருக்கும்போது பொழிந்தருளப்பட்ட பரிசுத்த அக்கினி:

(அப். 10:44-46)

"இந்த வார்த்தைகளைப் பேதுரு பேசிக்கொண்டிருக்கையில் வசனத்தை கேட்டவர்கள் யாவர் மேலும் பரிசுத்த ஆவியானவர் இறங்கினார்.

அவர்கள் பல பாஷைகளைப் பேசுகிறதையும், தேவனைப் புகழுகிறதையும், பேதுருவோடு கூட வந்திருந்த விருத்த சேதனமுள்ள விசுவாசிகள் கேட்கும் போது, பரிசுத்த ஆவியின் வரம் புற ஜாதிகள் மேலும் பொழிந்தருளப்பட்டதைக் குறித்துப் பிரமித்தார்கள்.

ஆ! என்ன ஆனந்தமான அனுபவம்! வசனம் கேட்ட யாவர் மேலும் பரிசுத்தாவியானவர் இறங்கினார்! அல்லேலூயா! "யாவர் மேலும்"—ஒருவர் பாக்கியில்லாமல் புறஜாதி இஸ்ரவேல் என்ற வேறுபாடில்லாமல், சபை வித்தியாசமில்லாமல் இறங்கினார்.

தேவனே, எங்கள் தேசத்தில் எவ்வளவு சபை வேறுபாடுகள், எத்தனைக் கசப்புகள், தடுப்புச் சுவர்கள், ஒருவருக்

கொருவர் சண்டைகள், அன்புத் தாழ்ச்சிகள்! இராஜா உமது நாமத்தினிமித்தம் இந்த பிரிவினைகளையும், பேதங்களையும், நொறுக்கி அன்பென்னும் அக்கினியால், சகோதரராக இணைத்துவிடும்.

பரிசுத்தாவியானவரே யாவர் மேலும் இறங்கியருளும். ஆமென்!

பேதுரு வசனத்தைப் பிரசங்கித்தான்! கேட்டவர்கள் தாகத்தோடு கேட்டார்கள்! வல்லமையாயும் ஆவியாயும் ஜீவனுமான வசனம் அக்கினியைப் பற்ற வைத்தது! உலகக் கல்வி மனுஷன் சரீரத்தோடு அழிகிறது. ஆனால் தேவனுடைய வார்த்தைகளோ அக்கினி மயமானது! வானமும், பூமியும் ஒழிந்து போனாலும் தேவனுடைய வார்த்தைகள் ஒழிந்து போவதில்லை! தான் செய்ய வேண்டிய காரியத்தைச் செய்யும் வரை ஓய்வதில்லை; வெறுமையாகத் திரும்புவதில்லை வேத வசனம் நரம்புகளிலும், எலும்புகளிலும் அக்கினியைப் பற்ற வைக்கக்கூடிய வல்லமை பொருந்தியதாய் இருக்கிறது.

எம்மாவூருக்குப் போன சீஷர்கள் ஒருவரை ஒருவர் நோக்கி, ''வழியிலே அவர் (இயேசு) நம்முடனே பேசி வேத வாக்கியங்களை நமக்கு விளங்கக் காட்டின போது நம்முடைய இருதயம் நமக்குள்ளே கொளுந்துவிட்டு எரியவில்லையா என்று சொல்லிக் கொண்டார்கள்.

உண்மை தான்! அக்கினியைப் பற்ற வைக்கக் கூடிய வல்லமை, கொளுந்துவிட்டு எரிய வைக்கும் வாக்குதத்தங்கள் பிரகாசிக்கச் செய்யும் கிரியைகள் எல்லாம் வேத வசனங்களில் இருக்கிறது

உறுதியாகப் பற்றிக் கொள்ள வேண்டிய வாக்குத்தத்தங்களை கீழே தருகிறேன்.

''உலகத்தில் அக்கினியைப் போடவந்தேன்'' (லூக். 12:49).

''பரிசுத்தாவியினாலும், அக்கினியாலும், ஞானஸ்நானங் கொடுப்பார்'' (மத். 3:1).

''தமது ஊழியக்காரரை அக்கினி ஜுவாலையாக்குவார்'' (எபி. 1:7).

''மாம்சமான யாவர் மேலும் என் ஆவியை ஊற்று வேன்'' (யோவேல் 2:28).

''ஜீவத்தண்ணீருள்ள நதிகள் புறப்படும்'' (யோவான் 7:37).

என்ற இதுபோன்ற வாக்குத்தத்தங்களை, தேவ வசனங்களை ஜெபத்தில் வைத்து விசுவாசத்தோடு கேட்போமாக! ஆமென். அவர் பரிசுத்த அக்கினியை இறக்கியே தீருவார்.

7. தியானிக்கும்போது மூளும் அக்கினி : (சங். 39:3)

''என் இருதயம் எனக்குள்ளே அனல் கொண்டது. நான் தியானிக்கையில் அக்கினி மூண்டது. அப்பொழுது என் நாவினால் விண்ணப்பஞ் செய்தேன்'' (சங். 39:3).

தாவீது ஓர் தியானப் புருஷன். தேவன் செய்த நன்மைகளையும், அவரது கரங்களின் கிரியைகளையும் தியானித்து தன்னை வல்லமையினாலும், அக்கினியாலும் இடைகட்டிக் கொள்கிறவர். அக்கினி மூள்வதற்கு முன் அவர் செய்தது என்ன? சங். 39:1,2ல் வாசிக்கலாம்.

நாவினால் பாவம் செய்யாதபடிக்கு வழிகளைக் காத்துக் கொண்டு வாயைக் கடிவாளத்தால் அடக்கி வைத்து நலமானதையும் பேசாமல் அமர்ந்திருந்து பின்னால் தியானிக்க ஆரம்பித்தார். அக்கினி மூண்டது.

வீண்வார்த்தைகளும், பரியாசப் பேச்சுகளும் அக்கினி இறங்க தடையாக நிற்பவை. தடுப்புச் சுவராக வளர்ந்து

விடும்! தேவனுக்கும் நமக்கும் இடையில் பிரிவினை உண்டாக்கிவிடும்!

''உங்களில் ஒருவன் தன் நாவை அடக்காமல், தன் இருதயத்தை வஞ்சித்து, தன்னை தேவ பக்தியுள்ளவனென்று எண்ணினால் அவனுடைய தேவ பக்தி வீணாயிருக்கும்'' (யாக். 1:26)

நாவானது முழுச் சரீரத்தையும் கறைப்படுத்தி, ஆயுள் சக்கரத்தைக் கொளுத்தி விடுகிறதாயும், நரக அக்கினியில் கொளுத்தப்படுகிறதாயும் இருக்கிறது (யாக் 3:6)

எனவே ஜாக்கிரதையாக இருப்போம். உலக சினேகிதம் தேவனுக்கு விரோதமான பகை என்று அறிந்து, உதறிவிட்டு கர்த்தரின் பாதத்தில் தியானத்தோடு காத்திருப்போம். நிச்சயமாகவே இருதயம் அனல் கொள்ளும்! தியானிக்கையில் அக்கினி மூளும்! ஆமென்.

தியானம் தான் ஆத்துமாவின் விருந்து! தியானபீடம் கல்வாரிச் சிலுவையாக இருக்கட்டும். தலையிலிருந்து பாதம் வரை நமக்காக பலியாகக் கொடுத்தவரின் அன்பைத் தியானிக்க, தியானிக்க உள்ளத்தில் தேவ அன்பு, அக்கினி நதியாக கரைபுரண்டு ஓடும். சிலுவைத் தியானத்தைப் போல் சிறந்த தியானம் வேறு ஒன்றுமில்லை.

தியானித்து அக்கினியைப் பெற்றுக் கொண்ட அனுபவம் உங்களுக்கு உண்டா?

கிறிஸ்துவின் ஜெபவீரரே, மேற்கண்ட பகுதிகளில், இயேசுவின் வாஞ்சை தீரவேண்டும் என்றால், ''உலகத்திலே அக்கினியைப் போட வந்தேன். இப்பொழுதே பற்றி எரிய வேண்டும்'' என்ற கிறிஸ்துவின்கதறுதல் நிறைவேறவேண்டும் என்றால், பலிபீடத்தைச் செப்பனிட்டு, ஜெபத்தோடு கூட ஆவி ஆத்துமா சரீரத்தை ஒப்புக் கொடுத்து கிறிஸ்துவின் நாமத்தில் கேட்க வேண்டும் என்றும் தியானித்து காத்

திருந்து வேத வசனங்களால் அக்கினியை அனல்மூட்டி எழுப்பிவிடவேண்டும் என்று கவனித்தோம். கருத்தோடு ஜெபித்து நிறைவேற்றுங்கள், நமது கர்த்தர் சீக்கிரமாய் வருகிறார். அக்கினியால் புடமிடப்பட்ட பரிசுத்தவான்களை அவர் தம்முடன் நித்திய மகிமையிலே சேர்த்துக்கொள்வார். அவர் பரிசுத்தவான்களை தம்முடன் நித்திய மகிமையிலே சேர்த்துக் கொள்வார். அவர் பரிசுத்தமாகவும், அக்கினியாகவும் இருக்கிற படியால் நாமும் அனுதினமும் நம்மை அக்கினியால் நிறப்பிக் கொள்ளுவோம். அனலுள்ள ஜீவியம் செய்வோம்.

இனிவரும் நாட்கள் பயங்கரமான நாட்கள்! நமது தேசத்தில் திறவுண்ட வாசல்கள் அடைக்கப்படும் அந்தகாரத்தின் நாட்கள்! ''அஸ்திபாரங்கள் நிர்மூலமாகிறதே யார் நிலை நிற்கக் கூடும் ஆண்டவரே?'' என்று சங்கீதக்காரன் புலம்புகிற காட்சி நிறைவேறும் நாட்கள். எனவே தேவன் கிருபையாய் கொடுத்த இந்த நாட்களில் முழு பெலத்தோடு கர்த்தருக்காய் ஜீவிப்போம். அவரது கண்ணீரைத் துடைப்போம். திறப்பின் வாசலில் நிற்போம் நமது தேசத்தில் எழுப்புதலை இறக்குவோம். அக்கினியாய் ஜீவிப்போம்.

சாத்ராக், மேஷாக், ஆபெத்நெகோவை அக்கினியால் நிறப்பின தேவன், அக்கினிப் போன்ற சோதனைகளில் அவர்களோடு உலாவி, விடுவித்த தேவன், உங்களோடுகூட இருந்து உங்களை ஆவியாலும், அக்கினியாலும் அபிஷேகித்து ஆசீர்வதிப்பாராக! ஆமென்!!

அத்தியாயம் 10

என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்!

''என் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லும்; நான் உனக்கு இளைப்பாறுதல் தருவேன்'' என்றார். அதற்குமோசே அவரை நோக்கி ''உம்முடைய சமூகம் என்னோடே கூடச் செல்லாமற் போனால், எங்களை இவ்விடத்திலிருந்து கொண்டு போகாதிரும். எனக்கும் உமது ஜனங்களுக்கும், உம்முடைய கண்களிலே தயவு கிடைத்ததென்பது எதினால் அறியப்படும்; நீர் எங்களோடே வருவதினால் அல்லவா? இப்படியே பூமியின் மேலுள்ள ஜனங்கள் எல்லோரிலும் நானும் உம்முடைய ஜனங்களும் விசேஷித்தவர்கள் என்று விளங்கும் என்றான்'' (யாத். 33:14,15).

இன்று மட்டுமல்ல; உன் ஜீவிய நாளெல்லாம், அவருடைய வருகை பரியந்தமும் அவர் சமூகம் உனக்கு முன்பாகச் செல்லட்டும்!

''உலகத்தின் முடிவு பரியந்தம் சகல நாட்களிலும் நான் உங்களுடனேகூட இருக்கிறேன்'' என்று இயேசு கிறிஸ்து உறுதிமொழி கொடுத்திருக்கிறார்! (மத் 28:20),

பெரிய ராஜாவோ அல்லது மந்திரியோ சென்றால் அவர்களுக்கு முன்பாக பாதுகாவலாக வீரர்கள், அதிகாரிகள் ஜீப்களில் செல்வார்கள்! ஆனால் புழுக்களாகிய நமக்கு முன்பாக கர்த்தர் தம்முடைய சமூகத்தை வைக்கிறார் என்றால் அது எவ்வளவு பெரிய பாக்கியம்! ஆமென்!!

அவர் சமூகத்தில் ஆனந்தமுண்டு; ஆறுதலுண்டு; வல்லமையுண்டு; அற்புத அடையாளங்களுண்டு; ஸ்தோத்திர துதியுண்டு; நித்திய மகிழ்ச்சியுண்டு!

1. வல்லமையின் பராக்கிரமமான அவர் சமூகம்:

இஸ்ரவேல் ஜனங்களுக்கு முன்பாக தேவ சமூகம் சென்றபடியால் எந்த சக்திகளும், ராஜாக்களும் அவர்களை எதிர்த்து நிற்க முடியவில்லை. மோசே தன் கோலை நீட்டியபோது செங்கடல் இரண்டாய்ப் பிளந்தது! தேவ சமூகம் முன் செல்ல மகிழ்ச்சியாய்க் கடலை கடந்தார்கள்!

எரிகோ கோட்டை இஸ்ரவேலருக்கு முன்பாக அடைக்கப்பட்டிருந்தது. அவர்கள் துதியோடு சுற்றி வந்தபோது எரிகோ கோட்டை விழுந்தது!

''சூரியனே, நீ கிபியோன் மேலும்; சந்திரனே, நீ ஆயலோன் மேலும் தரித்து நில்லுங்கள்'' என்று யோசுவா கட்டளையிட்டபோது, பல கோடி டன் எடையுள்ள அக்கினி பிழம்பான சூரியன் தரித்து நின்றது!''

தாவீது தேவனுடைய சமூகத்தோடு புறப்பட்டுவந்து இராட்சசனான கோலியாத்தைக் கொன்று பெலிஸ்தியரை முறிய அடித்தான்!

தானியேலோடு தேவ சமூகம் சிங்கக் கெபிக்குள் இறங்கி சிங்கங்களின் வாயைக் கட்டிப்போட்டது!

அக்கினிச் சூளையில் அவர் சமூகம் உலாவி; சாத்ராக், மேஷாக் ஆபெத்நெகோவைப் பாதுகாத்தது!

எல்லோரும் நம்மைப்போல பாடுள்ளமனுஷர்கள்தான்! தேவ சமூகத்தோடு எழுந்து வந்து அற்புதங்களையும் அடையாளங்களையும் செய்தார்கள்!

இன்று ஏன் நம்மூலம் அற்புதங்களும் அடையாளங்களும் நடைபெறவில்லை? அந்த தேவன் மாறிப்போய் விட்டாரோ?

இல்லை; இல்லை; இல்லவே இல்லை. நமது ஜெபக் குறைவும் பாவங்களும் தான் தேவனுடைய வல்லமையான கிரியைகள் நம்மத்தியில் நடைபெருதபடி தடுத்துக் கொண்டிருக்கிறது!

இவ்வளவு வல்லமையும், பராக்கிரமமும் உள்ள தேவனைக் கண்டு கொண்டபின் நீ ஏன் வியாதியாய், சோம்பலாய் பிரச்சனைகளோடு சோர்ந்துபோய் இருக்கவேண்டும்?

எழுந்திரு! உன் இடையைக் கட்டிக்கொள்!! உனக்குக் கொடுக்கப்பட்ட வரங்களை அனல்மூட்டி எழுப்பிவிடு!! இந்த நாட்களில் உன் தேவனுக்காய் நீ வைராக்கியம் கொண்டு பெரிய காரியங்களைச் செய்யவேண்டும் என்று அவர் எதிர்பார்க்கிருர்!

''நீ உயிரோடிருக்கும் நாளெல்லாம் ஒருவனும் உனக்கு முன்பாக எதிர்த்து நிற்பதில்லை'' (யோசு 1:15)

''உங்களை விரோதிக்கிறவர்கள் ஒருவரும் எதிர்பேசவும் எதிர்நிற்கவும் கூடாத வாக்கையும் ஞானத்தையும் நான் உங்களுக்குக் கொடுப்பேன்'' (லூக். 21:25).

''நான் உன்னை விட்டு விலகுவதுமில்லை; உன்னைக் கைவிடுவதுமில்லை'' யோசுவா. 1:5

''என் சமூகம் உனக்கு முன்பாக செல்லும்''

அல்லேலூயா! ஆமென்!

தேவ சமூகத்தை உணர்ந்த யோசுவா, கானானைச் சுதந்தரித்துக் கொண்டான்! பரம கானானைச் சுதந்தரிக்கும் காலம் வந்துவிட்டபடியால், தேவனுடைய பிள்ளையே, நீ பலங்கொண்டு திடமனதாயிரு!

'என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினுலே எல்லாவற்றையுஞ் செய்ய எனக்கு பெலனுண்டு (பிலிப். 4:13) என்று திரும்ப திரும்ப சொல்லி பவுல் பெலனடைந்தார்.

"உம்மாலே நான் ஒரு சேனைக்குள் பாய்ந்து போவேன்; என் தேவனாலே ஒரு மதிலைத் தாண்டுவேன்'' சங். 18:29 என்று சொல்லிக் கொண்டே தாவீது பெரிய யுத்தங்களில் பராக்கிரமம் காண்பித்தார்!

அவர் சமூகம் எப்பொழுதும் உனக்கு முன்பாகச் செல்லட்டும்! அவர் சமூகத்தைச் சொந்தமாக்கி அதில்நிலைத்திரு!

2. பரிபூரண ஆனந்தமான அவர் சமூகம்!

"உம்முடைய சமூகத்தில் பரிபூரண ஆனந்தமும், உம்முடைய வலது பாரிசத்தில் நித்திய பேரின்பமும் உண்டு'' (சங். 16:11).

உலகமும், பணமும், படிப்பும், செல்வமும் கொடுக்கக்கூடாத ஆனந்தம் அவர் சமூகத்தில் உண்டு! பலமணி நேரங்கள் ஸ்தோத்திரத்தோடு அவர் பாதத்தில் உட்கார்ந்து அவர் சமூகத்தை உணர்ந்தால் உள்ளம் எவ்வளவு பூரிப்படையும் தெரியுமா? அந்த மகிழ்ச்சியை வார்த்தைகளால் வர்ணிக்க முடியாது!

அந்த ஆனந்தத்தை அடக்ககூடாமல் தாவீது அரசன், தான் மன்னன் என்பதை மறந்து, பல பெண்கள் தன்னைக் கவனித்துக் கொண்டிருக்கிறார்களே என்பதை நினைக்காமல் தேவனுடைய உடன்படிக்கைப் பெட்டியின் முன்னால் முழு பெலத்தோடு நடனமாடினான் "என்னை இஸ்ரவேலாகிய கர்த்தருடைய ஜனத்தின்மேல் தலைவனாகக் கட்டளையிடும்படிக்குத் தெரிந்துகொண்ட கர்த்தருடைய சமூகத்திற்கு முன்பாக ஆடிப்பாடினேன்'' என்றார் மகிழ்ச்சியோடு!

பாவங்களை மன்னித்து, அக்கிரமங்களையெல்லாம் நீக்கிப்போட்டு, பின்தொடர்ந்த சாபங்களை முறித்து, கட்டுகளிலிருந்து விடுதலையாக்கி, சேற்றிலிருந்து தூக்கியெடுத்து, தன் மார்பிலே அணைத்து, அனாதி சிநேகத்தால் சிநேகிக்கும் அருமையான ஆண்டவரின் சமூகத்தில் நன்றியோடுகூட

ஆடிப்பாடாமல் எப்படி இருக்கமுடியும்? களிகூராமல் எப்படி இருக்கக்கூடும்!

எனவே தேவ சமூகத்தில் கைகளை உயர்த்தி, ஸ்தோத்தரித்து, துதித்து. ஆனந்தப் பரவசமடைய, களிகூர்ந்து பாடி, அவர் அன்பினால் நிறைய, பரலோக மகிமையை பூமியில் அனுபவிக்க, நேரத்தை ஒதுக்கிக்கொள்! அப்பொழுது உன்னதமான ஆவிக்குரிய ரகசியங்களை அறிந்து கொள்வாய்!

எந்த காரணங்களாலும் அவர் சமூகத்தை இழந்து விடாதே! இரண்டு சாட்சிகளை உங்கள் முன்னால் வைக்க விரும்புகிறேன.

இரட்சிக்கப்பட்டு, ஆழமான அனுபவங்களை அடைந்த ஒரு சகோதரி, பின்வாங்கி சினிமாக் காட்சியைப் பார்த்துக் கொண்டிருந்தபோது, தேவ சமூகம் அவளைவிட்டுவிலகினது. அப்பொழுதே இரண்டு கண்களும் குருடானது! சினிமாவை விட்டு குருடாய், கதறி அழுதுகொண்டு வெளியே வந்தாள்!

இன்னொரு சகோதரி இரட்சிக்கப்பட்டவள். கணவன் இயேசுவை அறியாதவன், கணவன் மனைவியைக் கட்டாயப் படுத்தி சினிமாவுக்கு அழைக்க இரண்டுபேரும் சினிமாவுக்குச் சென்றார்கள். சினிமா ஓடிக்கொண்டிருந்தது' கணவன் மனைவியைத் திரும்பிப்பார்த்தான்: அவளோ சினிமாவைப்]பார்க்காமல் கண்களை மூடி, ஆவியால் நிறம்பி ஜெபித்துக் கொண்டிருந்தாள். சினிமா முடியும்வரை கண்களைத் திறக்கவேயில்லை. தேவ சமூகத்தை சினிமா சாலைக்குள்ளும் இழுத்துச் சென்றாள். இன்று கணவனும் மனைவியும் முழு நேரமாய் தேவனுடைய ஊழியம் செய்து கொண்டிருக்கிறார்கள். அல்லேலூயா!

தேவ சமூகம் இல்லாத எந்த இடமும், எந்தஉல்லாசமும் உனக்கு வேண்டாம்! ஆதாம் பாவம் செய்தபோது முதலாவது இழந்தது தேவ சமூகத்தைத்தான்! தாவீது பாவம் செய்தபோது எப்படிக் கதறி அழுதார் தெரியுமா? 'உமது,

சமூகத்தைவிட்டு என்னைத் தள்ளாமலும் உமது பரிசுத்த ஆவியை என்னைவிட்டு எடுத்துக் கொள்ளாமலும் இரும்!'' (சங். 51:11).

நீ தேவ சமூகத்தை இழந்திருக்கிறாயா? அவர் சமூகத்தில் ஆனந்திக்க முடியவில்லையா? ஆராதனைகளில் தேவனை ஆவியோடும், உண்மையோடும் துதிக்க முடியாதபடி உன் வாயும் இருதயமும் கட்டப்பட்டிருக்கிறதா?

ஒன்று செய்! தாவீதைப்போல அவர் சமூகத்தை வாஞ்சித்துக் கதறு! அவர் சமூகம் உன்னைத் தாங்கும்வரை ஜெபத்தை நிறுத்தாதே!

3. மகிமையும் கனமும் அவர் சமூகத்திலிருக்கிறது!

உசியா மரணமடைந்த வருடத்தில் ஏசாயா பரம தரிசனம் கண்டான்! கேராபீன்கள் இரண்டு செட்டைகளால் தன் தன் முகத்தை மூடி இரண்டு செட்டைகளால் தன் தன் கால்களைமூடி இரண்டு செட்டைகளால் பறந்து, ஒருவரை ஒருவர் நோக்கி, 'சேனைகளின் கர்த்தர் பரிசுத்தர், பரிசுத்தர், பரிசுத்தர், பூமியனைத்தும் அவருடைய மகிமையால் நிறைந்திருக்கிறது என்று கூப்பிட்டுச் சொன்னார்கள்'' (ஏசா. 6:8).

மகிமையும் கனமும் அவர் சமூகத்தில் இருக்கிறது! எனவே ஒவ்வொரு காரியத்திலும் மகிமையையும் கனத்தையும் அவருக்கே செலுத்துவோம்! அவர் பரிசுத்தராயிருக்கிறது போல நாமும் பரிசுத்தமாயிருப்போம்! பரிசுத்த அலங்காரத்துடனே அவரைத் தொழுது கொள்வோம்! பரிசுத்தமில்லாமல் ஒருவனும் தேவனைத் தரிசிப்பதில்லையே!

கொஞ்ச நாள் வாழ்க்கை!

காலங்கள் ஓடிக் கொண்டிருக்கிறது! கடைசி நாட்களுக்குள் வந்திருக்கிறோம்!

நம் வாழ்க்கை முழுவதும் அவர் சமூகம் நமக்கு முன்பாக செல்லட்டும்!

அப்பொழுது ஜீவனுள்ள நாளெல்லாம் நன்மையும் கிருபையும் நம்மைத் தொடரும்!

நித்திய மகிழ்ச்சி நம் தலை மேலிருக்கும்! கிருபை நம்மைச் சூழ்ந்து கொள்ளும்!

நாம் கர்த்தருடைய வீட்டிலே நீடித்த நாட்களாய் நிலைத்திருப்போம்! ஆமென்!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக.

உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா?

சர்த்தர் கிதியோனை நோக்கிப் பார்த்து, "உனக்கு இருக்கிற இந்த பலத்தோடேபோ; நீ இஸ்ரவேலை மீதியானியரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்; உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா'' என்ருர் (நியா. 51:4).

இதைத் தொடர்ந்து படிக்குமுன், சில நிமிடங்கள் உன் கண்களை மூடி, "அனுப்புகிற'' சர்வ வல்லமையுள்ள தேவனின் மகா மகிமையையும், மேன்மையையும், வல்லமையையும் உணர்ந்து பார்!

கர்த்தருக்கு ஊழியஞ் செய்வதுபோல பெரிய பாக்கியம் வேறு எதிலுமில்லை வானங்களையும், நட்சத்திரங்களையும், காணப்படுகிறவைகளையும், காணப்படாதவைகளையும் தமது சொல்லினல் சிருஷ்டித்த அவர், "உன்னை அனுப்புகிறவர் நான் அல்லவா?'' என்று உன்னிடம் கேட்கிருர்.

தேசத்தின் தேவையோ மகா அதிகம்; அறுப்புக்கு ஆட்களோ இல்லை கர்த்தர் அங்கலாய்க்கிருர்; "அவரைக் குறித்துக் கேள்விப்படாதவர்கள் எப்படி விசுவாசிப்பார்கள்? பிரசங்கிக்கிறவன் இல்லாவிட்டால் எப்படிக் கேள்விப்படுவார்கள்? அனுப்பப்படாவிட்டால் எப்படி பிரசங்கிப்பார்கள்'' (ரோமர். 10:14)

1. உன்மேல் விழுந்த கடமை:

இயேசு தமது இரத்தத்தைச் சிந்தி உன் பாவங்களை மன்னித்தார் தாம் நொறுக்கப்பட்டு உன் அக்ரமங்களைச்

சமூவினுர். தம் ஆத்துமாவை மரணத்திலூற்றி உன் ஆத்துமாவை நரக தண்டனையிலிருந்து தப்ப வைத்தார். அவர் தன்னையே மூலதனமாக்கி, உனக்காக பானபலியாய்வார்த்து உன்னை மீட்டெடுத்தபடியாலே நீயும் அவருக்காக ஊழியஞ் செய்ய வேண்டியது, உன்மேல் விழுந்த கடமையாகிறது!

இதனுல்தான் பவுல் அப்போஸ்தலனும், ''சுவிசேஷத்தை நான் பிரசங்கித்து வந்தும், மேன்மை பாராட்ட எனக்கு இடமில்லை, அது என்மேல் விழுந்த கடமையாயிருக்கிறது; சுவிசேஷத்தை நான் பிரசங்கியாதிருந்தால் எனக்கு ஐயோ'' (I கொரி. 9:16).

நான் ஆரோனைப்போல அழைக்கப்படவில்லையே? எபிரேயர். 5:3ம் வசனம், "ஆரோனைப்போலத் தேவனுல் அழைக்கப்பட்டாலொழிய ஒருவனும் இந்த கனமான ஊழியத்திற்குத் தானுய் ஏற்படுகிறதில்லை'' என்று தெளிவாய் பேசுகிறதே? என் நிலை என்ன என்று கேட்கலாம்!

சுவிசேஷகனுய் இருப்பது வேறு; மேய்ப்பனுய் இருப்பது வேறு! சாட்சியாய் நிற்பது வேறு; சபையை நடத்துவது வேறு!

இயேசுவின் இரத்தத்தால் மீட்கப்பட்ட ஒவ்வொருவரும் சுவிசேஷகனுய், சாட்சியாக, நிச்சயமாக இருக்க வேண்டும்; இதற்கு தனிப்பட்ட அழைப்பு தேவையில்லை!

ஆனுல் எல்லாவற்றையும் விட்டுவிட்டு, ஆசாரிய ஊழியத்திற்காக முழுவதுமாய் இறங்குமுன், கர்த்தரின் திடமான அழைப்பு ஆரோனின் அழைப்பைப்போல — உனக்கு இருக்கிறதா என்று உறுதி செய்து கொள்!

விசேஷ அழைப்பாக — முழுநேர ஊழியனுக — மேய்ப்பனுக அழைப்பு திட்டமாக இருந்தால், ஊழியப் போர்க்களத்தில் தைரியமாக இறங்கு! ''கலப்பையின் மேல் தன் கையை வைத்துப் பின்னிட்டுப் பார்க்கிற எவனும் தேவனு

னுடைய இராஜ்யத்துக்குத் தகுதியுள்ளவன் அல்ல'' என்று கர்த்தராகிய இயேசு கிறிஸ்து சொல்கிறார்; லூக். 9:62.

''காற்றைக் கவனிக்கிறவன் விதைக்கமாட்டான்; மேகங்களை நோக்குகிறவன் அறுக்கமாட்டான்'' (பிர. 1:14).

முழு நேரத்திற்கு அழைப்பு இல்லாவிட்டால், நீ நிச்சயமாக சுவிசேஷகனாய் இருக்க வேண்டும் என்பதே தேவனுடைய சித்தமாயிருக்கிறது! வயிற்றுப்பிழைப்புக்காக, உலக வேலைக்குச் செலுகிற நேரத்தைத் தவிர, மீதிநேரத்தையெல்லாம் கர்த்தருக்காகச் செலவிடு! வெட்கப்படாதே! ''என்னைக் குறித்தும் என் வார்த்தைகளைக் குறித்தும் எவன் வெட்கப்படுகிறானோ, அவனைக் குறித்து மனுஷ குமாரனும் தம்முடைய மகிமையோடும், பரிசுத்த தூதர்களின் மகிமையோடும் வரும்போது வெட்கப்படுவார்'' (லூக். 9:26). சுவிசேஷ ஊழியத்தைச் செய்யாமல், அசதியாய் இருந்துவிட்டு சாக்குப்போக்குச் சொல்லி தப்பித்துக் கொள்ளலாம் என்று நினைக்காதே! கிறிஸ்துவின் கட்டளை தெளிவாய் வெளிவருகிறது!

''நீங்கள் உலகமெங்கும்போய் சர்வ சிருஷ்டிக்கும் சுவிசேஷத்தைப் பிரசங்கியுங்கள்'' (மாற்கு 16:15).

''நீங்கள்... பூமியின் கடைசி பரியந்தமும் எனக்குச் சாட்சிகளாயிருப்பீர்கள்''.

ஆகையால் உனக்கிருக்கிற இந்த பெலத்தோடேபோ.. தாமதம் பண்ணாதே!

2. உன்னை அனுப்புகிறவர் நானல்லவா?

மனித சிருஷ்டியைத்தவிர கர்த்தரின் எல்லாப் படைப்புகளும், கர்த்தரின் சத்தத்திற்குக் கீழ்படியும். ஆனால் மனிதன் மட்டுமே, எப்பொழுதும் கர்த்தரைக் கேள்வி கேட்கிறவனாக கீழ்ப்படியாதவனாக, சாக்குப் போக்கு சொல்கிறவனாக நடந்துகொண்டு வருகிறான்!

கர்த்தர் மோசேயை அழைத்தார். அவனோ –நான் எம்மாத்திரம்! நான் வாக்கு வல்லவனல்ல. நான் திக்கு வாயும் மந்த நாவும் உள்ளவன்......

எத்தனை சாக்குபோக்குகளானாலும், அவரது வாக்குத் தத்தங்கள் முன்னால் எடுபடாது! அவர் செய்ய நினைத்தது தடைப்படாது!

யோனாவை கர்த்தர் அனுப்பினார். அவனோ—

நினிவேக்குப் போகாமல் தர்சீசுக்கு கப்பல் ஏறினான். பின்னால் கர்த்தருடைய இரக்கத்தைக் கண்டு மிகவும் விசன மடைந்தான்; கடுங்கோபங் கொண்டான், எரிச்சலடைந் தான்! மனித உள்ளம் தேவனிடம் சாக்குபோக்கு சொல் கிற உள்ளம் மட்டுமல்ல. எதிர்த்து பேசுகிறதாகவும் இருக் கிறது.

கிதியோனை, கர்த்தர் அழைத்து "நீ இஸ்ரவேலை மீதி யானவரின் கைக்கு நீங்கலாக்கி இரட்சிப்பாய்" என்று வாக்குத்தம் கொடுத்தார்!

அவன் பதிலென்ன தெரியுமா? '"ஆ! என் ஆண்டவரே நான் இஸ்ரவேலை எதினாலே இரட்சிப்பேன்; இதோ மனா சேயில் என் குடும்பம் மிகவும் எளியது! என் தகப்பன் வீட்டில் நான் எல்லோரிலும் சிறியவன்.." ....சாக்குப் போக்குக்கு அளவில்லை!

ஆனால் கர்த்தரின் வாக்குத்தத்தங்கள், கிறிஸ்துவுக்குள் ஆம் என்றும் ஆமென் என்றும் இருக்கின்றன! "உன்னை அனுப்புகிறவர் நானல்லவா" என்று கூறி கிதியோனை பெலப்படுத்தின தேவன் அப்படியே மீதியானியரை முறி யடித்து கிதியோனிடம் ஒப்புக் கொடுத்தார்.

தேவனுடைய பிள்ளையே, நீ உன் பெலத்திலல்ல; உன்னை அனுப்புகிற தேவனுடைய பெலத்தில் சார்ந்து கொள்!

அவர் ஆடுகளை ஓநாய்களுக்குள்ளே அனுப்புகிறதுபோல உங்களை அனுப்புவார், கவலைப்படாதே! உன்னை அனுப்புகிற கர்த்தரின் பெலத்தால், நீ சிங்கத்தின் மேலும் விரியன் பாம்பின் மேலும் நடந்து, பாலசிங்கத்தையும் வலுசர்ப்பத்தையும் மிதித்துப் போடுவாய்

ஒரு வீட்டில் தீப்பற்றிக்கொண்டது. வீட்டின் மாடியில் ஒரு சிறுபையன் சிக்கிக் கொண்டான். வீட்டைச் சுற்றிலும் அநேக ஜனங்கள் சூழ்ந்து கொண்டிருந்தனர் சிலர் ஓடி வந்து, அந்த பையனுக்கு நேராக கீழே நின்று கொண்டு, அவனை குதிக்கும்படி சொன்னார்கள். அவனோ அழுது கொண்டிருந்தானே தவிர குதிக்கவில்லை, திடீரென்று பையனின் தகப்பனார் ஓடிவந்தார். மகனைக் குதிக்கச் சொன்னார். மகன் உடனே குதித்தான், தகப்பனார் பத்திரமாக அவனை ஏந்திக்கொண்டார்!

பையன் குதிக்கக் காரணம் என்ன? சொன்னவர் தகப்பனல்லவா? தகப்பனார் ஒருபோதும் தன்னைக் கைவிட மாட்டார் என்ற நம்பிக்கையல்லவா? அந்த நம்பிக்கை உன்னில் உருவாகாதா என்று உனக்காய் ஜீவனைக் கொடுத்தவர் வாஞ்சிக்கிறார்!

உன்னை அனுப்புகிறவர் நானல்லவா?

கர்த்தருக்கு ஊழியம் செய்வதையும், அவர் அனுப்புமிடமெல்லாம் நீ செல்வதையும், அவருடைய நாமத்தை உயர்த்திக் காட்டுவதையும் உனக்கு கிடைத்த பெறும் பாக்கியமாக கருதுவாயாக! சாக்குப்போக்குச் சொல்லாதே!

நீ எனக்கு பிரசங்கிக்கத் தெரியாது என்று சொல்லுகிறாயா? [கர்த்தரின் பதில் இதோ. "எப்படிப் பேசுவோம் என்றும் என்னத்தைப் பேசுவோம் என்றும் கவலைப்படாதிருங்கள்; நீங்கள் பேசவேண்டுவது அந்நேரத்தில் உங்களுக்கு அருளப்படும். பேசுகிறவர்கள் நீங்கள் அல்ல! உங்கள் பிதாவின் ஆவியானவரே உங்களிலிருந்து பேசுகிறவர்"

எனக்கு வயது முதிர்ந்து விட்டது என்று அலுத்துக் கொள்கிறாயா?

''உன் வயதுக்குத்தக்க உன் பெலனும் இருக்கும்'' என்று கர்த்தர் சொல்லுகிறார். ''உன்னை இதுவரை தாங்கினேன்; இன்னமும் தாங்குவேன்'' இதுவே அவர் வாக்குத்தத்தம்.

வீண் வாதங்களினால் ஒருக்காலமும் நீ தேவனுடைய ஆலோசனையை நீ அசட்டை செய்யாதபடி அவரது வாக்குத்தத்தங்கள் உன்னை பெலப்படுத்த வல்லமையுடையதாக இருக்கிறது!

''உன்னை அனுப்புகிறவர் நானல்லவா?'' என்று அவர் கேட்கும் கேள்விக்கு உன்னால் நிச்சயமாக பதில் சொல்ல முடியாது! உமது சித்தமே என் பாக்கியம் என்று சொல்லி அவரது ஆவல் தீரும்படி, உன் ஆவி ஆத்தும சரீரத்தை அவர் பாத பீடத்தில் சமர்ப்பித்துவிடு!

அவரல்லவா உன் பாவத்தை மன்னித்தவர்; அவரல்லவா தமது இரத்தத்தைச் சிந்தி உன்னை விலைக்கு வாங்கியவர்! அவரல்லவா உன் சிருஷ்டிகர்த்தரும் தகப்பனுமானவர்! அவரே முற்றும் முடிய வழிநடத்தவல்லவர்! ஒப்புக் கொடுப்பாயா?

காலமில்லை; இனி காலம் தாழ்த்த முடியாது! தேவன் மேல் விசுவாசம் வைத்து உனக்கு இருக்கும் இந்த பெலத்தோடு போ! அதிகமான தாலந்துகளைப் பெறும்படியாக ஆசைப்பட்டு இருக்கும் தாலந்துகளை புதைத்து வைக்காதே!

தேவன் எவனிடத்தில் அதிகமாக கொடுக்கிறாரோ அவனிடத்தில் அவர் அதிகமாகக் கேட்பார்!

எனக்கு ஒருவரைத் தெரியும்; எச்சுக் கையால் காக்கா விரட்டாதவர்; திடீரென்று அவருக்கு அனாதைகள் மேல் அளவில்லாத கருணை வந்து விட்டது! வெளிநாட்டில்

இருந்து பணம் வரவழைத்து அனாதைகளைக் காப்பாற்ற போகிறாராம்!!

உனக்கிருக்கும் இந்த பெலத்தோடே போ. உன் கையில் இரண்டு காசு மட்டுமே இருக்கட்டும் பரவாயில்லை! அல்லது ஐந்து அப்பமும் இரண்டு மீனுமே இருக்கட்டும் பரவாயில்லை; உன்னை ஆசீர்வதிப்பவர் கர்த்தர் அல்லவா?

உனக்கிருக்கும் கொஞ்சம் பெலத்தில் பக்கங்களிலுள்ள குடிசைகளுக்குச் சென்று சுவிசேஷம் அறிவி. அதுபோதும். வெளிநாட்டு பணங்களை மிகுதியாய் வரவழைத்து பெரிய அளவில் உன் பெயர் பிரஸ்தாபமாக கூட்டங்களை நடத்த நினையாதே! உன் ஆத்துமாவை இழந்து போவாய்!

கர்த்தரின் ஆலோசனை என்ன? உனக்கு இருக்கும் இந்த பெலத்தோடே போ. கிதியோனோடு கூட இருந்தவர்கள் முன்னூறு பேர்கள் மட்டுமே! ஆனால் மீதியானியரும்' அமலேக்கியரும், சகல கிழக்கத்திய புத்திரரும், வெட்டுக் கிளிகளைப்போல திரளாய்ப் பள்ளத்தாக்கிலே படுத்துக் கிடந்தார்கள். இவர்களுடைய ஒட்டகங்களுக்கும் கணக் கில்லை; கடற்கரை மணலைப் போலத் திரளாயிருந்தது!

ஜெயம் கர்த்தருக்குத்தான்! ஜெயம் அவராலே கிதியோனுக்கு வந்தது. உன்னை அனுப்புகிறவர் நானல்லவா; உனக்கு இருக்கும் இந்த பெலத்தோடு புறப்பட்டுப் போ என்று சொன்னவர் வாக்கு மாறாதவர்!

உனக்கிருக்கும் இந்த பெலத்தோடே போ. கீழ்ப்படி தலின் மகிமையை சீக்கிரமாய்க் கண்டுகொள்வாய்! அவரது வருகை அதை வெளிப்படுத்தும்!

மூன்று குதிரை வீரர்கள், ஒரு நாட்டின் எல்லையைவிட்டு மறுநாட்டை நோக்கி வேகமாக வந்து கொண்டிருந்தனர். வழியிலே ஒரு ஆறு குறுக்கிட்டது. ஆகவே இறங்கி ஆற்றை கடந்தார்கள். அது இரவு நேரம். "நீங்கள் கீழே கிடக்கு

கூழாங்கற்களைப் பொறுக்கிக் கொள்ளுங்கள்'' என்று சொல்லும் சத்தத்தைக் கேட்டார்கள். எண்ணற்ற கூழாங் கற்கள் கிடந்தன. ஒரு சிலவற்றை மட்டும் பொறுக்கிக் கொண்டு பயணத்தைத் தொடர்ந்து தங்கள் தேசத்திற்கு வந்து சேர்ந்தார்கள். அங்கே தாங்கள் பொறுக்கிய கூழாங் கற்களைப் பார்த்த போது, அது விலையேறப்பெற்ற வைரக் கட்டிகளாக இருக்கக் கண்டு ஆச்சரியப்பட்டார்கள்! அதே நேரத்தில், ஐயோ நாம் இன்னும் அநேக கூழாங்கற்களை எடுத்துக் கொண்டு வரவில்லையே என்று மிகவும் வேதனைப் பட்டார்கள்.

மரித்த பின்னுல்தான், ஐயோ நான் உயிரோடிருந்த போது இன்னும் அநேக ஆத்துமாக்களை ஆதாயம் பண்ணமற் போய் விட்டேனே என்று எண்ண வேண்டியது வரும்!

உன் தேசத்தில் எண்ணிறந்த கூழாங்கற்கள் உண்டு! அவைகளை வைரமாகக் காணும் நாட்கள் சீக்கிரம் வருகிறது! காலம் தாழ்த்தாதே! கிதியோனின் தேவன், உன் தேவன். எனவே உனக்கிருக்கிற இந்த பெலத்தோடே போ—

அத்தியாயம் 12

...எல்லாவற்றையும் செய்ய எனக்குப் பெலனுண்டு!

இந்த உலகத்தின் வழியாக ஒரே ஒருமுறைதான் கடந்து செல்ல முடியும் இந்த சிறிய காலத்திற்குள் உனக்காக ஜீவனைக் கொடுத்த இயேசு கிறிஸ்துவுக்காக உன்னால் எவ்வளவு காரியங்களைச் செய்ய முடியுமோ அவ்வளவையும் செய்துவிடு!

ஏதோ, சாப்பட்டேன், தூங்கினேன், வாழ்க்கை முடித்துவிட்டது என்று துக்க முகத்தோடு தூதனிடம் சொல்லாதே!

இயேசு கிறிஸ்துவை அவரது மகிமையான பிரசன்னத்தில் சந்திக்கும்போது, வெறுங்கையாக அல்ல; இலட்சக்கணக்கான ஆத்துமாக்களோடு சந்திக்கத் தீர்மானஞ் செய்!

எனக்கு ஒரு இஞ்சினியர் அவர்களைத் தெரியும் இந்து மதத்திலிருந்து கிறிஸ்துவை ஏற்றுக்கொண்டவர், "ஆண்டவரே! ஒரு லட்சம் ஆத்துமாக்களை உம்மிடம் வழிநடத்த ஞானம் தாரும் என்று ஜெபிப்பார்! அப்படியே அந்த ஒரு இலட்சம் ஆத்துமாக்களை சம்பாதிக்க இடைவிடாமல் உழைத்து வருகிறார்;

நீ எவ்வளவு சிறியவனாயிருந்தாலும் கூட, மற்றவர்கள் பார்வையில் அற்பமாய் எண்ணப்பட்டாலுங்கூட, உன்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவால் எல்லாவற்றையுஞ் செய்ய உனக்கு பெலனுண்டு!

எல்லாவற்றையும்—கர்த்தருடைய நாமம் மகிமைப் படும்படியாக — எல்லாவற்றையுஞ் செய்ய நீ பெலனடைவாய்!

முழு தேசத்தின் அஸ்திபாரங்களையும் அசைக்கக்கூடிய பெலன்; அந்தகார சக்திகள் முழுவதையும் பாதாளத்தில் தள்ளக்கூடிய பெலன்; இயேசுக் கிறிஸ்துவின் சுவிசேஷ ஒளியை உலக முழுவதிலும் ஏற்றக்கூடிய பெலன்; உன் கையில் நிச்சயமாயிருக்கிறது!

பவுலும் சீலாவும் "உலகத்தைக் கலக்குகிறவர்கள்" என்று பெயர் பெற்றார்கள். வரலாற்றிலே மிகப் பெரிய கீர்த்தி பெற்றார்கள்! "உன் ஆகாரத்தைத் தண்ணீர்களின் மேல் போடு; அநேக நாட்களுக்குப் பின்பு அதன் பலனைக் காண்பாய்!" (பிரசங்கி 11. 1).

நீ திடன் கொண்டு, முழு பெலத்தோடு தேவனுக்கு ஊழியஞ் செய்யும்படியாக பல ஊழியங்களைப் பற்றிய குறிப்புகளைக் கீழே கொடுத்திருக்கிறேன்; இன்றைக்கே, அதில் உன்னோடு தேவன் பேசும் ஊழியங்களை எடுத்துக் கொள்!

1. ஜெப ஊழியம்;

கிறிஸ்தவன் செய்யக்கூடிய அநேக ஊழியங்களிலே மிகவும் வல்லமையுள்ள ஊழியம் மன்றாட்டு ஜெப ஊழியமே!

யுத்தக் களத்திலே காலாட்படைகள் முன்னேறுவதற்கு முன்னால், ஆகாய விமானங்கள் போய் அந்தந்த இடங்களில் குண்டுகளையிட்டு இடங்களைப் பிடிக்க வழிசெய்து கொடுக்கும்; அது மாத்திரமல்ல; யுத்தக் களத்தில் முன்னணியில் நிற்கும் வீரர்களுக்கு உணவும் கொண்டு செல்லும்.

ஆகாய விமான ஊழியமே ஜெப ஊழியம்!

போர்க்களத்தின் முன்னணியில் நிற்கும் ஊழியக்காரர் களுடைய பெயர்களை ஒரு குறிப்பேட்டில் எழுதி வைத்துக் கொள்ளுங்கள். ஐம்பது பெயர்களோ நூறு பெயர்களோ, உங்களால் முடிந்த அளவுக்குத் தேர்ந்தெடுங்கள்

அதிகாலை வேளை நல்லது; ஒரு மணி நேரம் இதற்காக ஒதுக்கிக் கொள்ளலாம்! தேவனிடத்தில் மன்றாடி, தேவன் அவர்களைப் பாதுகாக்கும்படியாக, வல்லமையாக தேவன் பயன்படுத்தும்படியாக, தேவனுடைய இரத்தக்கோட்டைக் குள் வைத்துக் கொள்ளும்படியாக ஊக்கமாக ஜெபியுங்கள். தினந்தோறும் ஜெபிக்க வேண்டும்! போகப்போக ஜெப நேரத்தையும், தேவ ஊழியக்காரர்களின் எண்ணிக்கையை யும் அதிகரித்துக் கொண்டே வாருங்கள். தேவாவியானவர் ஏவினால், நீங்கள் எந்த ஊழியக்காரர்களை ஜெபத்தில் தாங்கி வருகிறீர்களோ அவர்களுக்கு, நீங்கள் அவர்களுக்காக தொடர்ந்து ஜெபிக்கிறீர்கள் என்றும்; தேவன் அவர்கள் மூலம் பெரிய காரியங்கள் செய்வார் என்றும் உற்சாகப் படுத்தி, கடிதம் எழுதுங்கள். மற்றவர்களுக்குத் தெரியாமல் தனியறை ஜெபமாய், தேவனிடத்தில் மன்றாடும் ஜெபமாக இருக்கட்டும்!

திறப்பின் வாசலில் ஆபிரகாம் போல், மோசே போல், எஸ்தரைப் போல், நின்றுவிடு! கைலாச மகாரிஷியைக் குறித்துக் கேள்விப்படுகிறோமே! அவர் இமயமலைச் சாரலில் ஏதோ குன்று ஒன்றில் பல நூறு ஆண்டுகளாக உலகுக்காக ஜெபித்து வருகிறார்! இயேசுவுக்கு அருமையான சீஷனாகிய யோவானும்கூட மரிக்காமல் இந்த ஊழியத்தை இன்னும் செய்து கொண்டிருக்கிறார் என்று பலரும் அபிப்பிராயப் படுகின்றனர்!

நொறுங்குண்ட இருதயத்தோடு ஜெபி! விண்ணப்பத் தின் ஆவியாலும் கண்ணீரின் ஆவியாலும் கர்த்தர் உன்னை நிறப்பும்படி அவரிடம் கேள்! சாதாரண நிலையில் நான்கு மணி நேரம் ஜெபிப்பதைக் காட்டிலும் நொறுங்கிய இரு தயத்தோடு, கண்ணீரோடு அரை மணி நேரம் ஜெபிப்பது மேன்மையானது வல்லமையானது!

2, அதிகாலைப் பிரசங்கம் (Dawn Preaching)

விடியற்காலை 4½ மணி முதல் 6 மணி வரை ஏற்றநேரம், இரண்டு பேருக்கு மேற்பட்டவர்கள் இதற்காகக்கூடி ஜெபித்து ஆயத்தப்படுங்கள். சிலர் ஞாயிற்றுக்கிழமைகளில் செல்லுவார்கள்; தினந்தோறும் புறப்படுபவர்களும் உண்டு!

அதிகாலை வேளையில் பேசும் வசனங்கள் கிருபை பொருந்தினதாக இருக்கட்டும். காலைதோறும் உம்முடைய கிருபைகள் புதியதாயிருக்கிறது'' என்ற வேதவாக்கின்படி, ஆசீர்வாதமான, வாக்குத்தத்தங்களடைங்கிய கர்த்தராகிய இயேசுக் கிறிஸ்துவை உயர்த்திக் காட்டுகிற, வசனங்களையே தேர்ந்தெடுப்பது நல்லது!

நரகத்தைக் குறித்தோ, நியாயத் தீர்ப்பைக் குறித்தோ, சாபங்களைக் குறித்தோ பயமுறுத்துகிற வார்த்தைகளை அதிகாலையில் உபயோகிக்க வேண்டாம்!

குணமளிக்கிறவர், இரட்சிக்கிறவர்; நேசிக்கிறவர்; பாவங்களை மன்னிக்கிறவர்; பிசாசின் பிடியிலிருந்து விடுவிக்கிறவர், இயேசுக் கிறிஸ்துவே என்பதை தெளிவாக, உறுதியான குரலில் சொல்லுங்கள்.

சொந்த வார்த்தைகளாகப் பேசாமல் வசனங்களை மட்டுமே கோர்வையாக சொல்லுவது நல்லது, ஒவ்வொரு வாரமும் இதற்காக பத்து வசனங்கள் மனப்பாடம் செய்து வந்தால் ஓராண்டு காலத்திற்குள் 520 வசனங்கள் மனப்பாடம் செய்து விடலாம்!

ஒரேயிடத்தில் நின்று கொண்டிருக்காமல் மெதுவாக நடந்து கொண்டே வசனத்தைப் பிரசங்கித்தால் அநேகர் பயனடைய முடியும்.

புறப்படுவதற்கு முன்னால் ஜெபித்து நாய்களின் வாய்களையும், அந்தகார சக்திகளையும் கட்டி விட்டு, கிறிஸ்து

வேண்டும், அவரது பிரசன்னத்தோடும் தேவதூதர்கள் படைகளோடும் கெம்பீரமாய் போய்விட்டு வாருங்கள்.

சில வேளைகளில் பிசாசு சோதிப்பதுண்டு, ஒருமுறை ஏறத்தாழ இருபது வாலிபர்களாக நாங்கள் ஓரிடத்தில் இரவு தங்கி, விடியற்காலை பிரசங்கம் செய்ய தீர்மானித்திருந்தோம். ஓர் வீட்டில் மாடியில் எங்களுக்கு இடம் கிடைத்தது, இரவு 12 மணி வரை ஜெபத்திலிருந்தோம். இயேசுக் கிறிஸ்துவுக்காக இரத்த சாட்சியாகக்கூட மரிக்கத் தயாராயிருக்க வேண்டும் என்று உறுதி எடுத்துக் கொண்டு படுக்க சென்றோம்.

விடியற்காலை 4 மணிக்கு எழுந்து புறப்பட ஆயத்தமானோம். அப்பொழுது—நாங்கள் இரவு கழற்றி வைத்த ஒரு துணியையும் காணோம். எல்லோருடைய Shrit-களும் காணாமற்போய்விட்டது. இரவு 12 மணிக்கும் காலை 4 மணிக்கும் இடையில் திருடன் வந்து எல்லா துணிகளையும் எடுத்துச் சென்று விட்டான்!

என்ன செய்வது? வெறும் உடம்போடு சட்டையில்லாமல் பிரசங்கத்திற்குச் சென்றால் அவமானம் ஒரு பக்கம் போலீசார், சந்தேகக் கேஸில் உள்ளே பிடித்துப் போட்டு விடுவார்கள். எனவே அன்று அதிகாலை பிரசங்கம் வேண்டாம் என்று முடிவுக்கு வந்தோம். ஆனால் ஒரு சகோதரன் எழுந்து, ''நாம் இரவில் இயேசுவுக்காக இரத்த சாட்சிகளாகக்கூட மரிக்கத் தயங்கக் கூடாது என்று சொல்லவில்லையா? பிசாசை வெட்கப்படுத்த சட்டையில்லாமலே செல்லுவோம்'' என்று எங்களைத் திடப்படுத்தினான்.

நாங்கள் புறப்பட்டபோது வீட்டின் கீழிருந்த அம்மா ஒருவர் எங்கள் நிலைமையை அறிந்து ஓடிப்போய், சில வருடங்களுக்கு முன் மரித்துப்போன தன் கணவனின் ஆடைகளை எடுத்து ஒவ்வொருவருக்கும் ஒவ்வொன்றைக் கொடுத்தார்கள்! நாங்கள் உற்சாகமாய் ஊழியம்செய்தோம். பிசாசானவன் எங்களைச் சோதித்தாலும் எங்கள் ஜீவனுள்ள

G.B. Sathyanesan, B.A

தேவன் எங்களை அவமானத்திற்கு ஒப்புக் கொடுக்கவில்லை! எங்கள்மேல் கண்ணும் கருத்துள்ளவருமாயிருக்கிறார்!

3. தெருப் பிரசங்கம்

முதல் தெருப் பிரசங்கி கர்த்தரே! அவர் ஏதேன் தோட்டத்தில் நின்று "ஆதாமே நீ எங்கேயிருக்கிறாய்" என்று கேட்டு பிரசங்கித்தார்!

இன்றும்கூட அநேகர் தெருப் பிரசங்கங்கள் மூலமாய் இரட்சிக்கப்பட்டேன் என்று சொல்லுகிற சாட்சிகளைக் கேட்டிருக்கிறேன்!

ஆனாலும் திரளான ஜனங்கள் அழிவை நோக்கி ஓடுகின்றனர்; இந்த ஜனங்களின் இரத்தப் பழியைக் குறித்து உன்னிடம் தேவன் கணக்குக் கேட்பார் என்பதை மட்டும் மறந்து போகாதே (எசே, 3:18).

எனவே வெறும் கடமைக்காக போகாமல், எப்படியாவது கர்த்தர் சில ஆத்துமாக்களையாகிலும் இரட்சிக்க மாட்டாரா என்ற மிகுந்த மனபாரத்தோடும், ஜெபத்தோடும் கூடப்போங்கள்.

ஒருவர் பிரசங்கித்தால் மற்றவர்கள் வீணாக பேசாமல், அமைதியாக அவரை ஜெபத்தில் தாங்க வேண்டும்.

எந்தக் காரணங்களையிட்டும், அரசியல் கட்சிகளையோ மற்ற கடவுள்களையோ, விக்கிரகங்களையோ தாங்கிப் பேசக் கூடாது! முழு புதிய ஏற்பாட்டிலும், விக்ரக ஆராதனைகளைத் தாக்கிப் பேசியதாக ஒரு இடத்திலும் கிடையாது!

எபேசுப்பட்டினத்தில் பவுல் ஊழியஞ்செய்த போது அந்தப்பட்டினத்து சம்பிரதியானவன் ஜனங்களை அமர்த்தி, "இந்த மனுஷரை இங்கே கொண்டு வந்தீர்கள்; இவர்கள் கோவிற் கொள்ளைக்காரருமல்ல; உங்கள் தேவியை தூஷிக்கிறவர்களுமல்ல" என்றான் (அப். 19:37).

நம் தேவன் பெரியவர். மற்ற மதங்களை, கடவுள்கள் எனப் பெயர் பெற்றவைகளைப் பழித்து, அதன்மூலம் நம் தேவனை உயர்த்தவேண்டும் என்பது அவசியமில்லை. நிறைவானது வரும்போது குறைவானது தானாகவே ஒழிந்துபோம். இருளை விரட்ட முயற்சியெடுப்பதைக் காட்டிலும், விளக்கை ஏற்ற முயற்சி எடுப்பதேமேல்; இருள் தானாக விலகிவிடும்!

தெருப் பிரசங்கத்தில், பொதுவாக இயேசு கிறிஸ்து உன் வாழ்க்கையில் உனக்கு என்ன செய்தார் என்பதை தெளிவாகக் கூறு சாட்சியோடுகூட வேத வசனங்களையும் எடுத்துப் பேசு. 'இயேசு' என்ற நாமம் அடிக்கடி வந்து கொண்டேயிருக்கட்டும் இயேசுவின் அற்புதங்களையும், உவமைகளையுப் எளிய நடையில் அனைவரும் புரிந்துகொள்கிற வகையில் உறுதியோடு சொல்லும்போது நிச்சயமாக ஆத்துமாக்கள் தொடப்படுவார்கள். எதைச் செய்தாலும் கர்த்தருக்கென்று, கர்த்தரைக் கொண்டு செய்! இழிவான ஆதாயத்தை எதிர்பார்க்காமல் தேவநாமத்தை உயர்த்திக் காட்டு.

ஒரு முன்னுரையும், இயேசு செய்த நன்மை, மற்றவர்களுக்காக 'அவர்' என்னென்ன செய்வார் என்பதையும் சொல்லி அவர் ஜீவனுள்ள தெய்வம் என்பதையும், அவர் சிலுவைப்பாடு, வருகையைக்கூறி சுருக்கமான ஜெபத்தோடு முடித்துவிடு.

4. துண்டுப்பிரதி விநியோகம் (Tract Distribution):

துண்டுப்பிரதியைக் குறித்து "Never Backsliding Preacher" என்று சொல்லுவார்கள் தேவவசனம் ஒருக்காலும் வெறுமையாய்த் திரும்புவதில்லை என்று வேதம் சொல்லுகிறது.

1. கட்டுக் கதைகள் நிறம்பிய துண்டுப்பிரதிவேண்டாம். அது இயேசு கிறிஸ்துவின் வாழ்க்கையும் கட்டுக் கதையே என்கிற ஓர் எண்ணத்தை உண்டாக்கிவிடும்!

2. நீ கொடுக்கும் துண்டுப்பிரதி என்னவென்று நீ முதலில் வாசித்து, ஆத்துமாக்களுக்கு தேவையான தெரிந்தெடு. துண்டுப்பிரதி இல்லை என்பதற்காக கண்ட கண்ட பிரதிகளையும் விநியோகம் செய்யாதே! சில துண்டுப்பிரதிகளில் எல்லோரும் கண்டிப்பாக தாடி வளர்க்கவேண்டும் என்றும். சிலவற்றில் இயேசு கிறிஸ்து மெய்யான மனிதன்: தேவனல்ல என்றும் பலப்பல விபரீத உபதேசங்களையுடையதாய் வெளிவந்து கொண்டிருக்கிறது. ஒரு துண்டுப்பிரதியும் கிடைக்காவிட்டால் நீயே ஒருநாள் உபவாசித்துவிட்டு கர்த்தருடைய ஆலோசனையோடு ஒரு Tract எழுது.

3. விநியோகம் செய்யும்போது மலர்ந்த முகத்தோடு, 'வாசித்துப்பாருங்கள் ஐயா'' என்ற பணிவோடுகூட உள்ளமானது, ''இயேசு ராஜா இந்த துண்டுப்பிரதி வாசிக்கும் இவரை எப்படியாவது இரட்சியும், உமது இரத்தத்தையும் கூட விசுவாசத்தோடு இந்த துண்டுப்பிரதியோடு கொடுக்கிறேன் என்று சொல்லிக் கொண்டிருக்கட்டும்! அப்பொழுது துண்டுப்பிரதி கைமாறும்போது தேவ வல்லமை உன் கையிலிருந்து வாங்குபவர்மேல் பாய்ந்து செல்வதை உணரலாம்!

4. பாரமான சுமையைத் தூக்கி வருபவரிடத்திலோ, மிகவும் வேகமாகப் போய்க் கொண்டிருப்பவரிடத்திலோ, குழந்தைகளைக் கையில் தூக்கிக் கொண்டிருக்கும் பெண்களிடமோ கொடுக்கவேண்டாம். வேறு சந்தப்பங்களில் தேவன் அவர்களைச் சந்திக்கும்படி தேவ கரத்தில் ஒப்படைத்துவிடு.

5. ரெயில்வே நிலையங்கள், பஸ் நிற்குமிடங்கள், அமைதியாய் மக்கள் வீற்றிருக்கும் பார்க், பீச் போன்ற இடங்கள் நல்லது. ஏனோதானோ என்று இல்லாமல் தேவ அன்போடு இந்த ஊழியம் செய்யப்படவேண்டும்.

6. ஜெபத்தோடு தொடங்கி ஜெபத்தோடு முடிக்க வேண்டும் ஆண்டவரே என்னால் முடிந்தவரை விநியோகித்திருக்கிறேன், இனி நீர் கிரியை செய்வீராக! என்று அவரிடத்தில் ஒப்படைத்து ஸ்தோத்திரம் செய்!

5. ஜெயில் ஊழியம்:

வல்லமையான ஓர் ஊழியம். ஆனால் அரசாங்கத்திடம் இதற்கு முதலில் அனுமதி பெறவேண்டும். உள்ளே தேவனுடைய பிள்ளைகளாயிருக்கிற அநேக ஆயுட்கைதிகளைக் காணலாம். வெளியே இருக்கும் பரிசுத்தவான்களைக் காட்டிலும் மேன்மையான அனுபவம் உள்ளவர்களாக இருப்பது ஆச்சரியத்தைத் தரும்.

இலங்கையில் பிரதமர் பண்டாரநாயகா கொலை வழக்கில் சம்பந்தப்பட்டவர் தூக்கு தண்டனைக்காக சிறையில் காத்திருக்கும் பொழுது ஒரு சுவிசேஷகர் சந்தித்தார். இயேசுவை அறிமுகப்படுத்தினார். நித்திய ஜீவனைக்குறித்துப் பேசினார். தூக்குமேடை செல்லுமுன் அந்தக் கைதி சொன்னது இதுதான்; ''கயிறு இறுகி நான் இந்த பூமியில் என் கண்களை மூடுவேன்; ஆனால் என் கண்களை இயேசுக் கிறிஸ்துவின் மகிமையான பிரசன்னத்தில் திறப்பேன்'' என்று சொன்னார்!

தனது மாமியாரை வெட்டிக் கொன்ற ஓர் கைதியை நான் அறிவேன்; அவர் வாழ்க்கை கிறிஸ்துவால் முற்றிலும் மாற்றப்பட்டது அவரை சிறை அதிகாரிகள், ''இயேசு நாதர்'' என்று அழைத்து வந்தார்கள். இயேசுக்கிறிஸ்து எப்படி அவரை தூக்குத் தண்டனையிலிருந்து மீட்டார் என்பதை அறிய அதிசயமாக இருக்கும்.

முக்கியமாக கவனிக்க வேண்டியது, நாம் கைதிகளை அற்பமாகவோ அல்லது மிகுந்த பாவிகளாகவோ பார்க்காமல் கிறிஸ்துவின் அன்பை நமது நாவுகளில் நிறப்பி மனதுருக்கத்துடன் பேசும்போது, கல்லான இவர்கள் இருதயம் கரைந்து கண்களிலிருந்து தாரை தாரையாய் கண்ணீர் ஊற்றப்படுவதைக் காணலாம்.

ஒருமுறை மனைவியைக் கொன்ற ஓர் கைதி, ஒரு பெரிய கருங்கல் பாறையைப் போல் தோற்றமுள்ளவன், வேதப்

புத்தகத்தில் 51ஆம் அதிகாரத்தை எடுத்து தன் நெஞ்சில் வைத்து கதறிக் கதறி அழுத காட்சியை என்னால் என்றும் மறக்க இயலாது.

சிறைச்சாலே சத்துருவின் கோட்டையும், அந்தகார சக்திகள் நிறைந்த இடமானதால் உபவாசத்தோடுசெல்வது நல்லது. தேவ பெலத்தோடு உன்னை அக்கினி ஜுவாலே யாக்கிக் கொண்டு, உள் பிரவேசித்து, பாவச் சிறையில் கிடக்கும் அவர்களை இயேசுவின் வல்லமையில் விடுதலே கூறு!

ஏசாயா 61ஆம் அதிகாரம் இவ்விதமாய் பேசுகிறது: "கர்த்தராகிய தேவனுடைய ஆவியானவர் என்மேல் இருக்கிறார். சிறுமைப்பட்டவர்களுக்குச் சுவிசேஷத்தை அறிவிக்க கர்த்தர் என்னை அபிஷேகம் பண்ணினார். இதயம் நொறுங்குண்டவர்களுக்குக் காயம் கட்டுதலேயும், சிறைப்பட்டவர்களுக்கு விடுதலேயையும், கட்டுண்டவர்களுக்கு கட்டவிழ்த்தலேயும் கூறவும், அவர்களுக்குச் சாம்பலுக்குப் பதிலாகச் சிங்காரத்தையும், துயரத்துக்குப் பதிலாக ஆனந்தத் தைலத்தையும், ஒடுங்கின ஆவிக்குப் பதிலாகத் துதியின் உடையையும் கொடுக்கவும், அவர் என்னை அனுப்பினார்!"

இயேசு கிறிஸ்து உலகத்திற்கு வந்த நோக்கமும் இது தான்; நீ இன்று உலகத்தில் ஜீவித்திருக்கிறதற்குக் காரணமும் இதுதான்; தேவன் உன்னிடம் எதிர்பார்ப்பதும் இது

6. கடித ஊழியம் (Letter Writting ministry).

ஒரு அருமையான கிறிஸ்தவ சகோதரனை அறிவேன். மிகவும் ஏழை, அநேகப் பிள்ளைகள். அச்சலுவலத்தில் மிகக் குறைந்த சம்பளம், நாளெல்லாம் வேலே, இரவில் நேரம் கழித்து வீடு திரும்புவார்! ஆனாலும் அவரது உள்ளத்தில் தேவனுடைய அன்பு கொளுந்துவிட்டு எரிந்துகொண்டிருந்தது ஆத்தும தாகத்தினால் அவர் நடு இரவினில் உட்கார்ந்து பலருக்கும் கடிதங்களை எழுதி, பாவங்களைக்

குறித்தும், நியாயத் தீர்ப்பைக் குறித்தும், கிறிஸ்துகொடுக்க இருக்கும் நித்திய ஜீவனைக் குறித்தும் உணர்த்திக் கொண்டிருந்தார்! முன்பின் அறியாதவர்கள் தூர இடங்களிலுள்ளவர்கள். தனிமையாய் தள்ளாடுபவர்கள், நோயுற்றோர் அவனைவருக்கும் இவரது கடிதங்கள் சென்று கொண்டிருந்தது. விலாசம் இல்லாவிட்டால் Telephone Directoyயில் ஏதாவது விலாசங்களைப் பொறுக்கி எழுதுவார். கர்த்தருக்காக வைராக்கியமாயிருந்த அந்த ஏழை சகோதரனை கர்த்தர் உயர்த்தினார். அவருக்கு மேல் நாட்டில் நல்ல வேலை கிடைத்தது! இன்று வறுமை நீங்கி மகிழ்ச்சியாயிருக்கிறார்!

அன்று அப்போஸ்தலனாகிய பவுல் இந்தக்கடித ஊழியம் செய்ததாலேயே இன்று நமக்கு அருமையான நிருபங்கள் கிடைத்திருக்கின்றன காகிதம், பேனா இல்லாத நாட்களில் அவர் இறகின்மூலம் தோல் சுருள்களில் எழுதி சபைகளை எச்சரித்தார், உபதேசித்தார். ஊக்குவித்தார் அவர் எழுதிய 14 நிருபங்கள் பரிசுத்த வேதாகமத்தில் இடம் பெற்றுள்ளன! சிறைச்சாலையில் அடைக்கப்பட்ட போதும் கூட அங்கிருந்து நிருபம் எழுதுகிறதைக் காண்கிறோம்.

''என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே என்று எழுதிய வாக்கியங்கள் அவர் சிறைச்சாலையிலிருந்து பிலிப்பியருக்கு எழுதிய கடிதத்திலுள்ள வல்லமையான வார்த்தைகளாகும்!

நம்முடைய வாழ்க்கையே மற்றவர்கள் வாசித்தறியக்கூடிய கடிதமாக—நிருபமாக இருக்கிறது. கொரிந்தியருக்கு பவுல் அப்போஸ்தலன் எழுதும்போது ''எங்கள் இருதயங்களில் எழுதப்பட்டும் சகல மனுஷராலும் அறிந்து வாசிக்கப்பட்டுமிருக்கிற எங்கள் நிருபம் நீங்கள்தானே'' (IIகொரி. 3:2) என்று எழுதுகிறதைக் காண்கிறோம். நாம் இரண்டு கண்களால் மற்றவர்களைக் காண்கிறோம். ஆனால் ஆயிரம் ஆயிரம் கண்கள் நம்மைக் கண்டு கொண்டிருக்கிறது. அவர்

கள் கிறிஸ்துவை நம்மில் காண்கிறூர்களா? ஜீவனுள்ள நிருபமாகக் காணப்படுகிறேமோ?

7. பத்திரிகை ஊழியம்

அச்சுக்கலை வளர்ந்து, அறிவு பெருகிவிட்ட நாட்களில் மக்கள் பத்திரிகையையும், புத்தகங்களையும் நோக்கி ஓடுகிறூர்கள்.

உலகப் பிரகாரமான பத்திரிகைகள், மாம்ச இச்சைகளைத் தூண்டிவிடும் மஞ்சள் புத்தகங்கள், பெருகி வரும் சினிமாச் செய்திகள் நாத்திகக்கொள்கைகள் இன்று மக்களை பாவத்துக்குள்ளே நரகத்திற்கு நேராக வேகமாக இழுத்துச் செல்லுகின்றன!

இன்று கம்யூனிஸம், உலகத்தின் மூன்றில் ஒரு பங்கை விழுங்கியிருக்கிறதென்றூல் அதின் முக்கியக் காரணம் என்ன? எழுத்தின் வேகம்தான்!

கிறிஸ்தவப் பத்திரிகைகள் பலவும் இந்த நாட்களில் புற்றீசலைப்போல திடீர் திடீர் என்று வெளிவருகிறது. வருகிற வேகத்திலேயே மறைந்து விடுகிறது. தங்கள் சுய விளம்பரத்திற்காகவும், தங்களது சபை, குழுவை உயர்த்துகிறவைாளாகவும், பத்திரிகையின் மூலம் பணம் பெற முயற்சிக் கிறவைகளாகவுமே இன்று சலித்த நடைபோடுகின்றன!

மேன்மை பாராட்டுகிறவன் சிலுவையைக் குறித்தே மேன்மை பாராட்டக் கடவன். எச்சரிக்கிறவன் தேவனுனுடைய நியாயத்தீர்ப்பைக் குறித்து எச்சரிக்கக்கடவன், எக்காளம் ஊதுகிறவன் தேவனுடைய வருகையைக் குறித்தே அறிவிக்கக்கடவன்!

பத்திரிகை சர்ச்சைகளை உண்டு பண்ணுகிறதாகவும் ஏதோ ஒரு கொள்கையை மிகைப்படுத்திக் கொண்டேயிருக்கிறதாகவும், மற்றவர்களை இழிவுபடுத்து கிறதாகதுமில்லாமல், இயேசுவின் சிந்தையையை வெளிப்படுத்துகிறதாக இருக்கட்டும்.

அப். பவுல் தீத்துவுக்கு எழுதும்போது, ''புத்தியீன தர்க்கங்களையும், வம்ச வரலாறுகளையும், சண்டைகளையும் நியாயப் பிரமாணத்தைக் குறித்து உண்டாகும் வாக்குவாதங்களையும் விட்டு விலகு; அவை அப்பிரயோஜனமும் வீணுமாயிருக்கும்! (தீத்து 3:9)

பத்திரிகையை எழுது முன் நீண்ட நேரம் முழங்காலில் நில், வேதத்தை எழுதிய பரிசுத்தாவியானவரே, வேதத்தின் இரசியங்களை உனக்குக் கற்றுத் தரட்டும்! முழங்காலில் நின்று கண்ணீரோடு ஜெபித்து ஆவியானவர் இந்தக்கடைசி காலத்தில் பெருமூச்சோடுகூட தேவமக்களுக்குக்கொடுக்கும் செய்தியை கவனமாக கேட்டு எழுது! சில வேலைகளில் ஒரு கட்டுரை எழுத மாதக் கணக்கில் நேரம் ஆகலாம், சில சமயங்களில் ஒரு சில விநாடி நேரங்களுல் செய்தி கிடைத்து விடலாம்! நீ எழுதும் செய்திக்கு நீயே முதலாவது உண்மையுள்ளவனாயிருக்க வேண்டும்!

8. ஆஸ்பத்திரி ஊழியங்கள்:

மிக எளிதாக ஆத்தும ஆதாயம் செய்யக்கூடிய ஊழியம் ஆஸ்பத்திரி ஊழியமே! நோய்வாய்ப்பட்டு, அமைதியான, திறந்த மனதோடு ஊழியக்காரருக்காகவே எதிர்பார்க்கவே அநேகர் படுக்கையில் ஆகிறார்கள். அருமையான தருணங் வீணாக்காதீர்கள்.

''வஸ்திரமில்லாதிருந்தேன், எனக்கு வஸ்திரங் கொடுத்தீர்கள்; வியாதியாயிருந்தேன், என்னை விசாரிக்க வந்தீர்கள், காவலிருந்தேன். என்னைப் பார்க்க வந்தீர்கள்'' என்று கர்த்தர் உங்களைக் குறித்து தமது சிங்காசனத்திலிருந்து சாட்சி கொடுக்கும்படியாக கர்த்தரையே மருத்துமனைகளில் சந்திக்கப் போவதாக நினைத்து செல்லுதல் நல்லது.

ஒவ்வொரு நாளுக்கும் குறைந்தது 100 துண்டுப் பிரதிகளையும், 10 சுவிசேஷப் பிரதிகளையும் வேதப் புத்தகத்தையும் எடுத்துக் கொள்ளுங்கள். ஒவ்வொருவருக்கும் சிரித்த

முகத்தோடு துண்டுப் பிரதியை வினியோகியுங்கள் நிச்சயமாக வாசிப்பார்கள் என்ற எண்ணம் இருந்தால் சுவிசேஷப் பிரதி (மத்தேயு, மாற்கு, லூக்கா யோவான்) கொடுங்கள். கர்த்தர் வழி நடத்தும்படியாக கேளுங்கள். ஏவப்படும் போது பிணியாளிகளின் அருகில் உட்கார்ந்து ஆறுதலாய் பேசி இயேசு கிறிஸ்துவை, மேலான சுகமளிப்பவராக அறிமுகப்படுத்துங்கள்.

மீண்டும் மீண்டும் சந்தித்த நோயாளிகளை சந்தியுங்கள். வெறும் பணத்தையாரிடமாவது கொடுத்து, அப்படி ஆத்துமாக்களை இயேசுவண்டை எளிதாக வழிநடத்தாம் என்று குறுக்கு வழியில் இறங்க வேண்டாம்! தேவையானபோது ஏதாவது பிஸ்கட் அல்லது ஆரஞ்சுப்பழம் நோயாளிகளுக்காக கொடுப்பது நல்லதுதான் என்றாலும் இயேசுவை அறிமுகப்படுத்துவதிலேயே உங்கள் முழுகவனமும் இருக்கட்டும்! மரண நிலையில், அபாயக் கட்டத்தில் உள்ள நோயாளிகளைச் சந்திக்க தவற வேண்டாம்.

வேதம் சொல்கிறது, "நீங்கள் மாளும்போது உங்களை நித்தியமான வீடுகளிலே ஏற்றுக் கொள்வாருண்டாகும்படி அநீதியான உலகப் பொருளால் உங்களுக்குச் சிநேகிதரைச் சம்பாதியுங்கள" (லூக் 10:9)

இன்னும் அநேக ஊழியங்களுண்டு எழுத ஆரம்பித்தால் புத்தகம் கொள்ளாது!

உன் முழு இருதயத்தோடு உன் தேவனிடத்தில் அன்பு கூறு!

உன் முழு உள்ளத்தோடு அவரிடம் மன்றாடி ஜெபி!

உன் முழு பெலத்தோடு அவருக்கு ஊழியஞ் செய்! மகிமைமேல் மகிமையடைவாய்! இம்மையிலும் மறுமையிலும் ஆசீர்வதிக்கப்படுவாய்! ஆமென்.

அத்தியாயம் 13

கடைசி விடிஞ!

''இனி காலம் செல்லாது'' (வெளி. 10;6) நம்முடைய தலைமுறைதான் கடைசி தலைமுறை; இனியொரு தலைமுறை பூமியில் பெருகக் காலம் செல்லாது; நம்முடைய தலைமுறையிலும் இனி நாட்களில்லை; உலக வரலாற்றின் விளிம்புக்கு வந்து விட்டோம்! நாட்களைக் குறித்து நினைக்க முடியாது ஏனென்றால் சில விஞடி நேரங்களே தமக்குக் கொடுக்கப் பட்டிருக்கிறது! முழு பெலத்தையும் ஒன்றாய் திரட்டி இயேசு கிறிஸ்துவுக்காக உபயோகித்து விடுவதைக் காட்டிலும், வேறு வழிகளில் நேரங்களைச் செலவிடுவது வீணும், வேதனையுமாயிருக்கும்.

ஐசுவரியவானாகிய ஒரு மனுஷனுக்கு ஒரு உக்கிராணக்காரன் ஒருவன் இருந்தான்; அவன் தன் எஜமானுடைய ஆஸ்திகளை அழித்து போடுகிறதாக எஜமானுக்கு அறிவிக்கப்பட்டது.

அப்பொழுது எஜமான் அவனை வரவழைத்து, உன்னைக் குறித்து நான் இப்படிக் கேள்விப்படுகிறதென்ன? உன் உக்கிராணக் கணக்கையொப்புவி, இனி நீ உக்கிராணக் காரனாய் இருக்கக்கூடாது என்றான்.

தனது வேலையில் தனது கடைசி விஞடி நேரம் வந்தது என்று உணர்ந்து கொண்டான். 'தான் நீக்கப்படும்போது தன்னை வீடுகளில் ஏற்றுக்கொள்வார் உண்டாகும்படி கணக்குகளை மாற்றி எழுதி தீவிரமாகச் செயல்பட்டான்; புத்தியாய்ச் செய்தான் என்று பெயர் பெற்றான்! (லூக் 16:2-10) வாசகரே. இந்த கடைசி வினாடியில் நீயும்

புத்தியாய் செயல்பட மாட்டாயா? காலங்களைப் பிரயோஜனப்படுத்திக் கொள்ள மாட்டாயா?

இரண்டாம் உலகமகா யுத்தத்தின் போது ஜப்பானை அழிக்கும்படியாக இரண்டு ஆங்கிலப் போர்க்கப்பல்கள், (பிரின்ஸ் ஆப் வேல்ஸ், பிரின்ஸ் ஆப் ரூப்பர்ட்) மிகுந்த தளவாளங்களோடும். பாதுகாப்போடும் ஜப்பானை நோக்கி வந்து கொண்டிருந்தன! ஜப்பான் தேசத்தையே அழிக்கக்கூடிய கப்பல்கள் என்றும், தங்கள் தேசத்திற்குக் கடைசி விநாடி நேரம் என்றும் அறிந்து கொண்டனர்! கப்பலை பீரங்கியால் தாக்க முடியாதபடி கப்பல் மூடப்பட்டிருந்தது ஒரே ஒரு வழி மட்டுமே இருந்ததைக் கண்டு பிடித்தனர் ஜப்பான் வீரர்களில் சிலர் தங்கள் உடலெல்லாம் பெரிய வெடி குண்டுகளைக் கட்டிக் கொண்டு விமானத்தில் தாழப்பறந்து கப்பலின் புகைக் கூண்டுக்குள் குதித்து விட்டனர்! கப்பல் வெடித்துச் சிதறியது! தங்கள் உயிரோடு கூட கப்பல்களை அழித்து மங்காத புகழ் பெற்றார்கள்! வாசகரே, கடைசி விநாடி என்பதை அறிந்தால் மட்டும் போதாது; அதை எப்படிச் செலவழிக்கப் போகிறாய் என்பதே கேள்வி!

சிம்சோன் உல்லாசத்தின் மடியிலும், சுகபோகத்திலும், உறக்கத்திலும் பொன்னான நேரங்களை வீணாக்கிட தன் பலனாக, வெண்கல விலங்குகளும், மாவரைக்கும் தொழிலும் கண் பிடுங்கப்பட்ட நிலையும் பரிசாகக் கிடைத்தன! கடைசி விநாடி நேரம் வந்தது! பயன்படுத்திக்கொண்டான். 'கர்த்தராகிய ஆண்டவரே, இந்த ஒருவிசை மாத்திரம் என்னை நினைத்தருளும்; தேவனே என்னை பலப்படுத்தும் என்று மிகுந்த கதறுதலோடு ஜெபித்துவிட்டு அந்த வீட்டில் தூண்களை பலமாய்ச் சாய்க்க அவனோடுகூட அதிகமான பெலிஸ்தியர் மடிந்தார்கள் (நியா 16:27-30). இதை வாசிக்கும் சகோதரனே! கடந்த கால தோல்விகளால் மனம் சோர்ந்து போய் விட்டாயோ? எழுந்திரு! இது கடைசி விநாடி! தேவனுக்காய் திடன் கொண்டு பராக்கிரமம் காண்பிக்க வேண்டிய நேரம் இது!

மோசே தன்னுடைய கடைசி வினாடி நேரம் எப்பொழுதுவரும் என்பதை முன்னரே அறிய வாஞ்சித்து, ''நாட்கள் ஞான இருதயமுள்ளவர்களாகும்படி எங்கள் நாட்களை எண்ணும் அறிவை எங்களுக்குப் போதித்தருளும்'' என்று (சங். 90:12-ல்) விண்ணப்பம் செய்கிறதைக் காண்கிறோம்! உனக்கு அந்த உணர்வு உண்டா?

உலகத்திற்கு இது கடைசி வினாடி நேரம்! நாம் வாழும் இந்த உலகத்தைப் போல் 4000 உலகங்களை அழிக்கக் கூடிய அளவு அணு ஆயுதங்களை உலக வல்லரசுகள் செய்து ஆயத்தமாய் வைத்திருக்கின்றது! 1917ஆம் ஆண்டு ரஷியாவில் ஆரம்பிக்கப்பட்ட கம்யூனிஸ்ட் எனப்படும் வலுசர்ப்பத்தின் ஆட்சி வலுப்பெற்று, உலகத்தின் மூன்றில் ஒரு பங்குக்குப் பரவி, கிறிஸ்தவர்களை ஏப்பம் விட்டுக் கொண்டிருக்கிறது! ஐயோ, தேவ ஜனமே. இன்று கடைசி வினாடி! அறியாயோ?

இயேசுவோடு சிலுவையில் அறையப்பட்ட கள்ளன் ஒருவனுக்கு இயேசுதான் தெய்வம் என்று வெளிப்பாடு 'கடைசி வினாடி' நேரத்தில்தான் கிடைத்தது! சிலுவையில் தொங்கிக் கொண்டே, வேதனையைத் தாங்கிக் கொண்டே, மற்ற கள்ளனுக்கு சுவிசேஷம் அறிவிக்கிறதைப் பாருங்கள்! கடைசி நேரத்தில்தான் எவ்வளவு ஆத்தும தாகம்! (லூக்கா. 23:4)

அடுத்த வினாடி இயேசுவின் வருகையில் அவர் பொன் முகத்தைத் தரிசிக்க (I கொரி. 3:12) ஆவலோடு இருக்கிறோம்! இடைப்பட்ட இந்த கடைசி வினாடி நேரத்தைப் புத்தியாய் செலவழிக்க தேவன் தாமே நமது மனக் கண்களைப் பிரகாசிப்பாராக!

கர்த்தர் உங்களை ஆசீர்வதிப்பாராக!

பெலத்தின்மேல் பெலன் அடைந்து சீயோனில் காணப்பட நம்மை வழிநடத்துபவராக!